# பானுமதி

## 1

அந்த மாத ரேஷன் பொருட்களைச் சுமந்தபடி உள்ளே வந்து கொண்டிருந்த ரகுபதியைப் பார்க்கையில் பானுமதிக்குப் பாவமாயிருந்தது.

ஒரு புறமாய் டீபாயின்மேல் சீட்டுகளைப் பிரித்துப் போட்டு ''சாலிடர்' ஆடிக் கொண்டிருந்த சங்கரனைக் காண்கையில் கூடவே எரிச்சலும் உண்டாயிற்று.

இந்த வீட்டு ரேஷன், இதை இந்த 'அப்பா சென்று, வரிசையில் நின்று வாங்கி வரவேண்டும் அல்லது நண்பர்களோடு சேர்ந்து படிக்கப் போவதாகச் சொல்லிவிட்டு, ஊர் சுற்றிக் கொண்டு இருக்கிறார்களே அந்தத் தம்பிகளை அதற்காக அனுப்பியிருக்க வேண்டும்.

அதை விட்டு, எவனோ ஒரு வாயில்லாப் பூச்சி கிடைத்தான் என்று அவன் தலையில் வேலையைக் கட்டி விட்டு ஜாலியாக ஒற்றை ஆள் ஆட்டம் ஆடுவதா?

மாலைக் காபியின் ருசி மங்கிவிட, பாதி காபியோடு தம்ளரை ஓரமாக வைத்துவிட்டு, எழுந்து சென்று ரகுபதியிடம் இருந்து கோதுமைப் பையை வாங்கி உள்ளே கொண்டு வைத்தாள்.

''ரகு ரேஷன் வாங்கி வந்துவிட்டானா?'' என்று விசாரித்த சிற்றன்னையிடம் ''ம்ம்... சித்தி, அவருக்கு ஒரு கப்



காபி கலந்து கொடுங்கள். அத்தனையும் ஒன்றாய்த் தூக்கிக் கொண்டு வந்துவிட்டு, வியர்த்து வடிகிறார். பாவமாய் இருக்கிறது'' என்றாள் மனதை மறையாத குரலில்.

கனகம் சிரித்தாள். ''ரகு வேலை செய்தால் பிடிக்கவில்லையாக்கும். அவ்வளவு அக்கறை உள்ளவள் நீயே காபி கலந்து கொண்டு கொடேன். அவனுக்கு பிடித்தமாய் இருக்கும்'' என்றாள் கேலிக் குரலில்.

''என்ன அத்தை, பானுவுக்கு என்ன குறை?'' என்று கேட்டபடி ரகுபதியும் மற்ற பொருட்களோடு உள்ளே வந்துவிட, சட்டென்று வெளியேறிவிட்டாள் பானுமதி.

சமையல் அறைப் 'பேச்சு கேட்காத அளவு தூரம் சென்றுவிட அது ஒன்றும் அவ்வள்வு பெரிய வீடல்ல.

மகளிடம் பேசிய பாவனையிலேயே கனகம் ஏதோ கூற, அவன் அசட்டு நகை புரிந்தது. பக்கத்துப் படுக்கை அறைக்குள் சென்ற பெண்ணுக்கு நன்றாகவே காதில் விழுந்தது.

ஏழைக்கு ஏற்ற எள்ளுருண்டை.

ரகுபதியின் எட்டுநூறு ரூபாய் சம்பளத்தில் குடும்பம் நடத்துவது சிரமம்தான். ஆனால் பானுவின் ஐநூறும் சேர்ந்தால் சரிக்கட்டிக் கொள்ளாதா? இன்னமும் பெரிய வேலை கூடக் கிடைக்கலாம்.

ரகுபதி பார்வைக்கு ஒன்றும் மோசமானவனில்லை. குணமும் பழுதில்லை. சிறுவயதிலிருந்து பார்த்து வளர்ந்தவர்கள்தான். அடுத்த தெரு, பக்கத்திலேயே இருக்கலாம்.

முக்கியமாக அப்பா அங்குமிங்கும் நாயாய் அலையத் தேவையில்லாமல் தானாக வரும் மாப்பிள்ளை.

அதைவிடவும் முக்கியமாக நகை, ரொக்கம், சீர் என்று கேட்கமாட்டார்கள். ரகுபதியின் பெற்றோருக்கு அந்தச் சபலம் கொஞ்சம் இருக்கலாம் என்றாலும் நிலமைக்கு மீறிக் கேட்க மாட்டார்கள். பிற்பாடு அவளது சம்பளம் வேறு வருமே.



எல்லாமாகச் சேர்ந்து ரகுபதியை வீட்டு மருமகனாக உருவகப்படுத்தின.

ஆனால் அவன் வழிகிறான் என்பதைப் பயன்படுத்தி இம்மாதிரி, வீட்டினர் செய்ய வேண்டிய வேலைகளை அவனைக் கொண்டு சாதிக்கும்போது தான் பானுமதிக்கு மனம் பொருந்தாமல் முரண்டும்.

ஆனால் மனதை வெளியிடுகையில் சிற்றன்னை வேறு மாதிரிக் கேலி பேசுகையில், அப்போதும் ஒரு மாதிரியாகி வாயடைத்துப் போவாள்.

''பானுமதி'' என்று ரகுபதியின் அழைப்பு கேட்கவும் ''என்ன'' என்று சென்று நின்றாள்.

''இதோ, இன்றைய 'இந்து'வில் இரண்டு தேவை விளம்பரங்கள் பார்த்தேன். உனக்குப் பொருத்தம் என்று தோன்றவே, அப்ளிகேஷன் அடித்துக் கொண்டு வந்தேன். கையெழுத்துப் போட்டாயானால் இன்றே தபாலில் சேர்த்து விடுவேன்'' என்று காகிதங்களை நீட்டினான்.

வாங்கிச் சென்று தந்தையிடம் நீட்டினாள் பானுமதி.

அவர் கவனியாததோடு, ''ரகுத் தம்பிதானே அடித்துக் கொண்டு வந்தது. அப்பாவிடம் காட்டுவானேன்? கையெழுத்துப் போட்டுக் கொடு'' என்று கனகம் கூறவும் காகிதங்களோடு உள்ளே சென்றாள்.

யாராய் இருந்தால் என்ன? படித்துப் பாராமல் கையெழுத்துப் போடலாமா? இந்தச் சித்திக்கு இன்னமும் உலகமே தெரியவில்லையே? என்று எண்ணியபடி அவற்றைப் படித்துப் பார்த்துவிட்டுக் கையெழுத்திட்டாள் பானுமதி.

''ஊம்... இன்னும் எத்தனை நாள் என் மகளை இப்படிப் பார்த்துக் கொண்டிருக்கப் போகிறேன்? ஒரு வருஷமா இரண்டு வருஷமா...'' என்று சித்தி இழுப்பது கேட்டது.

''அவ்வளவு நாளா? பானுவுக்கு இருபது வயசு ஆகிவிட்டதில்லையா அத்தை? பிறகென்ன...'' என்ற ரகுபதியை இடைவெட்டினாள் கனகம்.

''இருபதுதானே... இந்தக் காலத்தில் யாருக்கு இவ்வளவு சீக்கிரம் கல்யாணம் பண்ணுகிறார்கள் சொல்லு. உன் அக்காவுக்குக் கூட இருபத்தைந்தில்தானே செய்தார்கள். ஜாதகம் பார்த்ததிலே கூட இருபத்திரண்டு முடிய வேணும் என்று இருக்கிறது.''

திருமணத்தை இரண்டு ஆண்டு தள்ளிப் போடும் சித்தியின் சாமர்த்தியம் பானுமதிக்குச் சிரிப்பு மூட்டியது. அவளது சம்பளத்தை நம்பிக் கட்டத் தொடங்கிய சீட்டு முடிய இன்னும் இருபது மாதங்கள் இருக்கின்றனவே! அதற்கு முன் எப்படி அந்த வருமானத்தை விடமுடியும்?

ஆனால் அவளுக்குப் பணத்தாசை என்றோ, மறைத்துப் பேசுகிறாள் என்றோ சிற்றன்னை மீது பானுமதிக்குக் கோபம் வரவில்லை. மாறாக, இப்படியெல்லாம் இவள் சமாளிக்க வேண்டியிருக்கிறதே என்று பரிதாபமாகத்தான் இருந்தது. ஆயினும் ஓர் ஏமாற்று வேலையில் பங்கு கொள்ள மனம் இல்லாத காரணத்தால், கையெழுத்திட்ட காகிதங்களைத் தானே மறுநாள் தபாலில் சேர்த்து விடுவதாகக் கூறி அறைக்குள்ளேயே இருந்து விட்டாள்.

கனகத்திடம் சற்று நேரம் தங்கி பேசிக் கொண்டிருந்துவிட்டு, ரகுபதி விடைபெற்றுச் சென்ற பிறகுதான் ஹாலுக்குள் தலையை நீட்டினாள்.

அவள் மீதம் வைத்திருந்த காபித் தம்ளரை எடுத்துக் கொண்டிருந்தாள் கனகம். மகளைக் கண்டதும் ''ஏண்டி, பாலும் காபித் தூளும் விற்கிற விலையில் இப்படி வீணாக்குவார்களா? பூச்சி கீச்சி விழுந்திருந்தால் தூர அல்லவா கொட்ட வேண்டும்?'' என்று அதட்டிவிட்டு ஆறிய காபியையும் விடாமல் குடித்து முடித்தாள்.

''அந்தச் சேலையைக் கஞ்சி போட்டு வைத்தேன். ஆனால் அவ்வளவு பெரிய இடம் என்கிறாய். அங்கே ஒரு பட்டுச்சேலை உடுத்தாமல் கைத்தறிச் சேலையை உடுத்திச் சென்றால் நன்றாக இருக்குமா? என் கல்யாணச் சேலையைக்



கட்டிக் கொள்ளேன். நிறைய சரிகை போட்ட தர்மாவரம்'' என்றாள் தொடர்ந்து.

அழுது வடியும் வைலட் கலரில் அங்கங்கே சரிகை கறுத்திருந்த அந்தச் சேலை நினைவுக்கு வரவும் அழுத்தமாகத் தலையாட்டி மறுத்தாள் பானுமதி. ''அங்கெல்லாம் ஒன்று 'டிஷ்யூ'வில் போகவேண்டும். அல்லது சிம்பிளாகக் கைத்தறி கட்ட வேண்டும். அதிலும் கஞ்சி போட்டு கைத்தறி கட்டி மெல்லிசாக ஒரு சங்கிலியைப் போட்டுக் கொண்டால் அதன் மதிப்பே தனி சித்தி. சித்தி, அப்பாவிடம் சொல்லி விட்டீர்கள் இல்லையா? சரியாக ஒன்பது மணிக்கு வந்துவிட வேண்டும்.''

கணவனிடம் பார்வை சென்று மீளத் தோளைக் குலுக்கினாள் கனகம். ''எதற்கும் நீயும் ஒருதரம் சொல்லி விடு. இந்தக் கழுதைகளை இன்னமும் காணோம்'' என்று வெளியே எட்டிப் பார்த்தாள்.

''அப்பா, உங்களுக்கு ஒருதரம் கூட ஆட்டம் சேரக் கூடாது என்று மந்திரம் போட்டுவிடப் போகிறேன்'' என்று சீட்டைக் கைகளால் மறைத்தாள் மகள்.

ஆச்சரியமாய் நிமிர்ந்து, ''ஏன் பாப்பா?'' என்று விசாரித்தார் சங்கரன்.

''பின்னே என்னவாம்? நான் ஆபீசிலிருந்து வந்து, காபி குடித்து, அந்த ரகுபதி ரேஷன் வாங்கிவந்து, திரும்பிச் சென்று... எதையும் கவனியாமல் ஒரு...ம்... இப்படியே உட்கார்ந்திருந்தால் எப்படியாம்?'' என்றாள் சலுகைக் குரலில்.

'உன் சித்தி சொல்லுகிறது போல எருமை மாட்டில் மழை பெய்கிற மாதிரி என்றே நீயும் சொல்லிவிடேன் பாப்பா'' என்று சிரித்தார் தந்தை. ஒரு காலத்தில் நாள் கணக்கில் உட்கார்ந்து காசுக்கு விளையாடினேன். எப்படியோ அதை விட்டுத் தொலைத்தேன். ஆனால் சீட்டை விட



முடியவில்லை. ஒற்றை ஆள் ஆட்டமாவது ஆடாமல் முடிவதில்லை. சரி இப்போது என்ன விஷயம் சொல்லு.''

''நாளைக்கு என் தோழி மாலதி வீட்டுக்கு, இரவு சரியாக ஒன்பது மணிக்கு வந்து என்னைத் திருப்பி அழைத்து வரவேண்டும். வரும்போது கொஞ்சம் 'ட்ரிம்'மாக டிரஸ் பண்ணி வரவேண்டும். அவ்வளவுதான் விஷயம்.''

''ஒன்பது மணிக்குமேல் அங்கிருந்து நம் வீட்டுக்கு நேராக பஸ்சும் கிடையாது. நம் வீடுவரை ஆட்டோவும் வரமாட்டேன் என்பான். என்ன செய்வது?'' என்று சங்கரன் யோசித்தார்.

''ஆட்டோ டிரைவர் வருகிறேன் என்று சொல்லுகிற அளவுக்கு ஆட்டோவிலும் மிச்சதூரம் பஸ்சிலும் வரலாம். ஆனால் அப்பா, சரியாக ஒன்பது மணிக்கு நீங்கள் அங்கே இருக்க வேண்டும் மறக்கக்கூடாது'' என்று எச்சரித்தாள் மகள்.

தந்தையின் கவனம் சீட்டின்மேல் செல்வதைக் காணவும்,''என்னப்பா?'' என்றாள் சற்று அழுத்தத்துடன்.

தலையை ஆட்டியவர் யோசித்து, ''ரகுபதிக்குத் தெரிந்த ஆட்டோ டிரைவர் ஓர் ஆள் உண்டு. உனக்காக என்றால் காசு இல்லாமல் ரகுபதி அந்த ஆட்டோவை'' என்ற தந்தையை ஆத்திரத்துடன் இடைமறித்தாள் மகள்.

''எதற்கும் என்னப்பா ரகுபதி? நம்வேலையை நாம் தான் பார்க்க வேண்டும். சும்மா சும்மா அடுத்தவர்களைத் தொங்குவது என்றால் எனக்குப் பிடிக்கவில்லை'' என்றாள் வெடுக்கென்று.

தலையைத் திருப்பி மகளை வியப்புடன் பார்த்தார் சங்கரன். ''அதென்னம்மா அப்படிச் சொல்லிவிட்டாய்? நாளைக்கு அவன்தானே இந்த வீட்டு மருமகன்?''

''மருமகன் ஆகும்வரை அடுத்தவர் தான் அப்பா'' என்றாள் அவள் விடாமல். ''அதனால் என்னை அழைத்து



வர நீங்கள் வந்தால் போதும். ஆட்டோவோ, பஸ்சோ கிடைப்பதில் ஏறி நாமாகவே திரும்பி வரலாம்'' என்று முடித்தும் விட்டாள்.

தலையை உருட்டிவிட்டுத் தன் விளையாட்டைத் தொடர்ந்தார் பெரியவர்.

ஒரு காலத்தில் வேலையில் கெட்டிக்காரராக, நல்ல குடும்பத் தலைவனாக இருந்தவர்தான் சங்கரனும். அவர் உயிரை வைத்திருந்த மனைவியும், தாயும் அடுத்தடுத்து மறையவும் ஆள் உடைந்து போனார். பிரச்சினைகளை மறக்க என்று குடித்துப் பார்த்தார். அது பிடிக்காமல் போகவும் சூதில் இறங்கினார். ஒரு போலீஸ் ரெய்டில் உயிரைக் கையில் பிடித்துக் கொண்டு ஓடித் தப்பினார். அதன் பிறகு சூதாட்டம் பக்கம் செல்வதில்லை. ஆனால் சும்மா சீட்டைக் கலைத்துப் போட்டு அடுக்கி ஒற்றை ஆள் ஆட்டம் ஆடிக் கொண்டே இருப்பார்.

மூத்த உறவினர்கள் சிலர் சேர்ந்து தொலைத்து விட்டிருந்த வேலைக்குப் பதிலாக வேறு வேலை தேடித் தந்தனர். மறைந்தவளுக்குப் பதிலாகக் கனகத்தை மனைவியாக்கி, அங்கும் இங்குமாய் வளர்ந்து கொண்டிருந்த மகளையும் ஒப்படைத்தனர்.

எதிலும் அவருக்கு மனம் சரியாக ஒட்டவில்லை. சிந்திய பாலுக்கு அழுவது போல மூத்த மனைவி, பழைய வேலை... என்று உள்ளூர ஏக்கம். வெளியே காட்டிக் கொள்ளும் தைரியமும் இல்லாமல், மறக்கும் திடமும் இல்லாமல், எதிலும் பற்றில்லாமல் எப்படியோ ஒரு வாழ்வு வாழ்ந்தார் அவர்.

ஆசைப்படுகிற குணம் உண்டு என்றாலும் வேறு வழியில்லாமல் கனகமும் இந்த வாழ்வுக்குப் பழகிக் கொண்டாள். ஆனால் ஒன்று கிடைக்கக்கூடும் என்று தெரிந்தால் போதும், விடவேமாட்டாள்.

பானுமதியைப் பொறுத்தவரையில் அவள் தாயைச் சரியாக அறிந்திராததாலோ என்னவோ, எந்தவித இழப்பும் தெரியவில்லை. ஒரேயடியாக மடியில் வைத்துக் கொஞ்சாத போதும் கனகம் அவளைக் கொடுமை செய்தது இல்லை. அன்பாகத்தான் இருந்தாள்.

சொல்லுக்கு அடங்காத தம்பிமாரையும் எதிலும் பட்டுக் கொள்ளாத தகப்பனாரையும் பார்க்கும்போது, வளர வளர பானுமதிக்குத் தன் சிற்றன்னையிடம் பரிதாபம்தான் உண்டாயிருந்தது.

தகப்பனாரை நினைவுபடுத்திக் கிளப்பி, சரியான நேரத்தில் அனுப்பும்படி சிற்றன்னையிடம் திரும்பவும் ஒருதரம் சொல்லிவிட்டுக் கிளம்பினாள் பானுமதி.

பொதுவாக அவளுக்குப் பணக்காரப் பெண்கள் என்றால் ஓர் அலர்ஜிதான். காண்டஸா, பென்ஸ், வி.சி.ஆர். என்கையில் அப்படியே நழுவிவிடுவாள்.

ஆனால், அவளது அழகிய தோற்றத்திலும், அலையலையான நீண்ட கூந்தலிலும் மற்றவர்களுக்கு ஒரு மயக்கம். ஓடினாலும் விடுவதே இல்லை.

இந்த மாலதியும் அப்படித்தான். தன் பிறந்தநாள் விழாவுக்கு வந்தால்தான் ஆயிற்று என்று பிடிவாதம் பிடித்து அழைத்தாள். காரில் வந்து அழைக்கவும், மகளை அனுப்பி வைப்பதாக சித்தியும் வாக்களித்துவிட்டாள்.

வேறு வழியின்றி ஒப்புக்கொள்ள நேர்ந்துவிட்டது. எப்படியோ, அந்த செட்டுடன் சகஜமாகக் கலந்து பழக முடியாவிட்டாலும், மாலதியின் அழகிய வீட்டையும் தோட்டத்தையும், வண்ண விளக்கு அலங்காரங்களையும் பார்த்து ரசித்துவிட்டு வரவேண்டியதுதான் என்று எண்ணியபடி சென்றாள் பானுமதி.

பானுமதி வந்ததில் மாலதிக்கு மிகுந்த மகிழ்ச்சிதான். ஆனாலும், மற்ற விருந்தினரைக் கவனியாமல் தோழியிடமே



பேசிக் கொண்டு நிற்பது அவளால் முடியாதுதானே. கூடவே அழைத்துச் சென்று சிலரிடம் அறிமுகப்படுத்தி வைத்துவிட்டு புதிதாக வந்த யாரையோ கவனிக்க ஓடினாள்.

என்னதான் பார்வைக்குப் பளிச்சென்று இருந்தாலும் காதில் ஓர் ஒற்றை வைரம்கூட இல்லாத ஒருத்தியிடம் மாலதியின் உறவினருக்கு சுவாரசியம் மங்கிப் போயிற்று. காதைச் செவிடாக்கும் இசையையும் அதற்கு ஏற்ப ஆடிக் கொண்டிருந்த இளைஞர் கூட்டத்தையும் விட்டுத் தானாகவே ஒதுங்கிவிட்டாள் பானுமதி. எண்ணி வந்தது போலவே வண்ண விளக்குகளால் அலங்கரிக்கப்பட்டிருந்த தோட்டத்தை ரசனையுடன் சுற்றிப் பார்த்தாள் அவள்.

அப்போது, ''ஹலோ! நீங்களும் என்னைப்போலத் தனிமை விரும்பியா, அல்லது இரைச்சல் பிடிக்காதா? என் பெயர் ராஜேந்திரன்'' என்று சரளமான குரலில் பேசித் தன்னை அறிமுகப்படுத்திக் கொண்டு கையை நீட்டினான் அவன்.

தயங்கித் திகைத்தாள் பானுமதி.

வேலைக்கு என்று நாலைந்து மாதங்களாக வெளியே சென்று வந்தபோதும் பானுமதி மற்ற ஆண்களிடம் அதிகம் பேசிப் பழகியது இல்லை. முடிந்த அளவு ஒதுங்கிப் போகிறவள் என்றே கூறலாம்.

இங்கே முன்பின் அறியாத ஒருவன் வெகு சரளமாகப் பேசியபடி, அதுதான் வழக்கம் போலக் குலுக்குவதற்காகக் கையை வேறு நீட்டி விடவும் திண்டாடிப் போனாள். அதே சமயம், அப்படி நீட்டிய கையைத் தவிர்ப்பதும் மரியாதை இல்லை என்று படித்திருந்ததால் தப்பாக எண்ணுவானோ என்று கலக்கம் வேறு.

சஞ்சலத்துடன் அவனை அண்ணாந்து-ஆம். பெண்களுக்குள் அவள் ஓரளவு உயரம்தான் என்ற போதும் அவளும் அண்ணாந்து பார்க்கும் அளவுக்கு அவன் உயரமாகவே

9/996;j



இருக்கவும், அவள் அண்ணாந்து பார்க்கு முன் அவனது கரம் தாழ்ந்தது.

''மன்னிக்க வேண்டும். வெளியே தொழில் வட்டாரங்களில் பழகிய பழக்கம் வீட்டுக்குள்ளும் வந்துவிட்டது. சாரி'' என்று கை குவித்தான் அவன்.

அவளது சங்கடத்தை விநாடிக்குள் ஊகித்து, அதில் இருந்து கலபமாக அவளை மீட்டும் விட்ட அவனிடம் பானுமதிக்கு நன்றி பெருக்கெடுத்தது. பளீரென்ற புன்னகையுடன், ''வணக்கம்'' என்று பதிலுக்குக் கரம் குவித்தாள்.

ஒருகணம் அவள் முகத்தில் பார்வையைப் பதித்திருந்த ராஜேந்திரன், ஒரு கையசைவால் மேலே நடக்குமாறு சைகை செய்து, தானும் உடன் நடந்தபடி, ''இந்த வீட்டுத் தோட்டம் எனக்கு மிகவும் பிடித்தம். சித்தி-மாலதியின் அம்மா-வீடு, தோட்டப் பராமரிப்பில் எக்ஸ்பர்ட். அந்தக் கெட்டிக்காரத்தனத்தைப் பிள்ளை வளர்ப்பில் காட்டினால் என்ன என்று நான் அவ்வப்போது நினைப்பதுண்டு. அந்த நினைப்பை இன்று மாற்றிக் கொண்டேன். மாலதிக்கு இப்படி ஒரு தோழமையை வளர்த்திருக்கிறார்களே!'' என்றான் மெச்சுதலாக.

உச்சி குளிர்ந்த போதும் ஆச்சரியத்துடன் நோக்கி, ''நான் மாலதியின் தோழி என்று உங்களுக்கு எப்படித் தெரியும்?'' என்று விசாரித்தாள்.

''ஏன் பெரிய சிதம்பர ரகசியமா? அவள் உங்களை ஆவலாக வரவேற்றதையும், பேசியதையும் நான் பார்த்தேனே'' என்று முறுவலித்தான் ராஜேந்திரன்.

அவள் பதிலுக்குத் தேடுமுன், ''எனக்கு அவள்மேல் கோபம்கூட வந்தது. ஆறடி உயரத்தில் அண்ணன் முறையில் ஒருத்தன், இவள் அழைத்தாளே என்று பரிசோடு வந்திருக்கிறேன். மகா மகா முக்கியமான இந்த விருந்தாளியிடம் தோழியை அறிமுகம் செய்யக்கூட அந்த மட்டிக்குத் தெரியவில்லையே'' என்று தொடர்ந்து பேசினான்.

v



இவன் நிஜம் பேசுகிறானா அல்லது இந்த மேல் மட்டத்தில் இப்படியெல்லாம் ஐஸ் வைத்துப் பேசுவது சகஜமா? இந்த ராஜேந்திரன் உண்மையிலேயே கூட்டமும் இரைச்சலும் பிடிக்காமல் தோட்டத்திற்கு வந்தானா, அவளைப் பின் தொடர்ந்தா?

தன்னைப் பின் தொடர்ந்து அவன் வந்திருக்கக்கூடும் என்ற எண்ணம் மனசுக்கு இதமாக இருப்பதை ஓர் ஆச்சரியத்துடன் உணர்ந்தாள் பானுமதி.

அவளது பார்வையை உணர்ந்தவன் போலச் சட்டெனப் பக்கவாட்டில் திரும்பி வெண்பற்கள் தெரிய புன்னகை செய்தான் அவன்.

பட்டிக்காடு போலப் பார்த்தேனோ என்று அவள் குன்றுமுன், ''எவ்வளவு பெரிய கண்கள்!'' என்று வியந்தான் அவன். ''கரிய, பெரிய விழிகள்!''

இன்னமும் விழிகளை விரித்துக் காட்டவேண்டும் என்று தோன்றிய ஆவலை அடக்கி இமைகளைத் தாழ்த்திக் கொண்டாள் பானுமதி.

கூடவே, அவனது 'மகாமுக்கியமான விருந்தாளி' மனதை உறுத்த, ''நான் ஒன்றும் முக்கியமான விருந்தாளி அல்ல. என்...என்... அப்பா ஒரு சாதாரண குமாஸ்தாதான்' என்றாள் சற்று சிரமத்துடன். ஒருவேளை தன் கைத்தறிச் சேலையை, வேறு இல்லாமல் கட்டுவதாக எண்ணாமல் ஸ்டைலுக்காகக் கட்டியிருப்பதாக எண்ணிக் கொண்டானோ என்று அவளுக்கு ஒரு சந்தேகம். தன் வீட்டுப் பொருளாதார நிலையைப் பறைசாற்ற மனம் இல்லாவிட்டாலும், பொய்மையில் பெருமை கொள்ளப் பிடிக்காமல் ஒருவாறு சொல்லி முடித்தாள்.

ஆனால் அவன் இயல்பான குரலில், ''தெரியுமே. சித்தியின் கூட்டம் ஒன்றிரண்டு வார்த்தைகளோடு ஒதுங்கிக் கொண்டபோதே ஊகித்தேன். ஆனால் உங்களை மகா

முக்கியமான விருந்தாளி என்றது அதற்காக அல்ல'' என்று கூறவும் அவளது இறுக்கம் தளர்ந்தது.

பஃபே முறைச் சாப்பாடு அன்று.

அவளுக்காகத் தட்டு எடுத்து வந்து, எதெது மிகவும் நன்றாயிருக்கும் என்று தேர்ந்து எடுத்துக் கொடுத்து அவள் அருகிலேயே தானும் அமர்ந்து உணவு கொண்டான் ராஜேந்திரன்.

அவன் உலகம் முழுவதும் சுற்றியவன் போலும். அங்கங்கே கண்ட பல விஷயங்களை, நகைச்சுவையுடன் அவன் விவரித்தபோது, அவளுக்குப் பொழுதுபோனதே தெரியவில்லை. செம போர் அடிக்கும், மாலதிக்காக சகித்துக் கொள்ள வேண்டும் என்று வேண்டா வெறுப்பாகக் கிளம்பியதை நினைக்கையில் அவளுக்குச் சிரிப்பு வந்தது.

''உன் அப்பா வந்து காத்திருக்கிறாராம் பானு'' என்று மாலதி வந்து தகவல் கூறவும் மற்ற நினைவு வந்து மணியைப் பார்த்தாள். ஒன்பதரை! இனி எப்படி வீடு திரும்புவது?

முகத்தின் முறுவல் மாற்றாமல் காத்தபடி மாலதியின் குடும்பத்தினரிடம் அவசரமாக விடைபெற்றுக் கொண்டு ஓடினாள்.

வாயிலை ஒட்டி ஒருபுறமாய் அமைந்திருந்த வரவேற்பு அறையில் அமர்ந்திருந்த சங்கரன் மகளைக் கண்டதும், ''என்னம்மா இவ்வளவு நேரம் ஆக்கிவிட்டாய். பேசாமல் ரகுவிடம் சொல்லியிருந்தால் அவன் சினேகிதன் அந்த ஆட்டோ மணியை எப்படியாவது ஏற்பாடு செய்திருப்பான். இப்போது எப்படி வீடு திரும்புவது? பக்கத்திலா இருக்கிறது. வேகமாக நாலு எட்டு வைத்து நடந்து போய்விட?'' என்று கடிந்தார்.

வாயில்வரை வந்து வழியனுப்பும் முகமாகக் கூடவே வந்து கொண்டிருந்த ராஜேந்திரனை எண்ணி முகம் கன்றி, ''ஷ்... மெல்ல அப்பா. பரவாயில்லை. நாம் எப்படியாவது



போய்விடலாம்'' என்று தந்தையை அடக்க முயன்றாள் மகள்.

''என்னத்தை எப்படியாவது?'' என்று எரிச்சலுடனேயே தொடங்கிய சங்கரனிடம் குறுக்கிட்டுப் பேசினான் ராஜேந்திரன். ''ஹலோ சார், நான் மாலதியுடைய அதுதான், உங்கள் மகளின் தோழியுடைய ஒன்றுவிட்ட அண்ணன். வாருங்கள். நானே உங்களை வீட்டுக்குக் கொண்டு விட்டுவிடுகிறேன்'' என்று உதவ முன்வந்தான்.

''இல்லை மிஸ்டர் ராஜேந்திரன். நாங்களே...'' என்று மறுக்க முயன்றாள் பானுமதி.

''என்னத்தை நாங்களே? ஏதோ சமயத்தில் உதவிக்கு வருகிறாரே என்று சந்தோஷப்படாமல் உளறுகிறாயே. ரொம்ப நன்றி சார். உங்கள் கார் எங்கே நிற்கிறது?'' என்று கேட்டார் சங்கரன்.

''இந்தப் பக்கம்'' என்று வழிகாட்டி முன் நடந்தான் ராஜேந்திரன்.

கொஞ்சம் சிரமப்பட்டு, கொஞ்ச தூரம் போய்த் தேடினால் ஓர் ஆட்டோ கிடைக்காமலா போகும்? ஓர் ஐந்து ரூபாய் கூடப் போட்டுத் தருவதாகச் சொன்னால் ஒருத்தர் இல்லாவிட்டால் இன்னொரு டிரைவர் வரத்தான் செய்வார். அதற்குக் கூட நளுக்கிக் கொடுத்துக் கொண்டு, வாழ்க்கையிலேயே முதல் தடவையாகச் சந்திக்கும் அன்னியனின் உதவிக்குப் பறப்பதா? அவன்- அந்த ராஜேந்திரன் - சும்மா ஒரு ஒப்புக்காக, வாய் உபசாரமாகக் கூட்டிப் போவதாக ஒரு வார்த்தை சொல்லியிருப்பான். நாகரீகமாய் மறுத்துவிடுவார்கள் என்றும் எதிர்பார்த்திருப்பான். இப்போது, சிந்துபாத் கதைக் கிழவன் போலத் தலையில் ஏறிக் கொண்டதாக எண்ணமாட்டானா?சேச்சே ... இப்படி அடுத்தவர் தலையில் பொறுப்பைத் தள்ளிவிடுகிற புத்தி. அப்பாவுக்கு எப்போது போகும்?



உள்ளூரக் குன்றிக் குமைந்தபடி பேசாமல் அவர்களைப் பின் தொடர்ந்தாள் பானுமதி. அவ்வளவு நேரம் இருந்த இதம் அடியோடு எதிராகிவிட்டதே.

காரில் முன்புறம் ஏறி, அவனோடு சேர்ந்து அமராமல், அவர்தான் காருக்குச் சொந்தக்காரர் போலத் தானும் மகளுடன் பின்புறமே ஏறிச் சாய்ந்து கொண்டார் சங்கரன்.

அத்தோடு நில்லாமல், ''அப்பாடா ... இதைவிட்டு, பாதி பஸ்சிலும், பாதி ஆட்டோவிலும் ஏறி அல்லல் படலாம் என்றாயே'' என்ற போது மகள் பதில் சொல்லவில்லை.

வீலின் பின்னே அமர்ந்து 'ரியர்வ்யூ' கண்ணாடியைச் சற்று திருப்பி சீர் செய்தான் ராஜேந்திரன். ஒரு கணம் கண்ணாடியைக் கூர்ந்தவன், ''இந்த மாதிரி இரவு நேரத்தில், சிலுசிலுவென்ற காற்றில் காரை ஓட்டுவதே தனி சுகம் சார்'' என்று எதையோ பேசியபடி காரை எடுத்தான்.

அப்போதும், ''ஓட்டுவது எப்படியோ எனக்குத் தெரியாத விஷயம் அது. ஆனால் இது மாதிரிக் காரில், குஷனில் சாய்ந்து கொண்டு அலுங்காமல் நலுங்காமல் போவது என்றால் அது ஒரு தனி சுகமாகத்தான் இருக்கிறது'' என்று சிலாகித்து மகளை மேலும் குன்ற வைத்தார் பெற்றவர்.

அவர்களை இறக்கிவிட்டதும் கிளம்பி ஓடிவிடுவான் என்று எதிர்பார்த்தாள் பானுமதி.

ஆனால் கூடவே இறங்கி வாயில்வரை சேர்ந்து நடந்து, அந்தச் சின்ன வீட்டை ஒரு சுவாரசியம் கூட்டிப் பார்த்து, ''இதுதான் உங்கள் வீடா'' என்று அனாவசியமாக விசாரித்துக் கொண்டு நின்றான் அவன்.

அதற்குள் காரைக் கண்டுவிட்ட கனகம், ''உள்ளே வாருங்கள்'' என்று அழைத்தாள்.

அவனும் ஒப்புக் கொண்டு உள்நோக்கி நடக்கத் தொடங்கவும், வீட்டினர் குணமறிந்த பானு அவசரமாக எல்லோருக்கும் முன்னதாக உள்ளே விரைந்தாள்.



கிளம்புகிறபோது கழற்றி பிரம்பு நாற்காலிமேல் அப்பா வீசியிருந்த அழுக்குச் சட்டை, அடுத்த நாற்காலியில் கிடந்த தம்பிமாரின் புத்தகங்கள், அன்றைய தினசரி ... இன்னோரன்ன அனாவசியப் பொருட்களை மின்னல் விரைவுடன் பொறுக்கி எடுத்துக் கொண்டு, அவன் உள்ளே வந்து சேருமுன் படுக்கை அறைக்குள் ஓடி கட்டிலில் அனைத்தையும் போட்டாள்.

அதே வேகத்தில் மீண்டும் ஹாலுக்குள் சென்று கோணல் மாணலாகக் கிடந்த நாற்காலிகளை இழுத்து வரிசைப்படுத்தினாள்.

அதற்குள் உள்ளே வந்துவிட்ட அவனிடம் ''உட்காருங்கள்'' என்று உபசரித்துவிட்டு சமையல் அறைக்குள் சென்றாள்.

வீட்டுக்குள் வந்து அமர்ந்துவிட்டானே! இவனுக்கு இப்போது என்ன கொடுப்பது? அதுவும் இந்த நேரத்தில்?

பால் ... பாத்திரத்தைத் திறந்து பார்த்தால் கிட்டத்தட்ட காலியாகி இருந்தது.

சமாளித்து ஒரு தம்ளர் எடுத்துக் கொண்டு போனாலும் திடுமென அப்பா, ''எனக்கு ஒரு தம்ளர் பால் கொண்டு வாம்மா'' என்று கேட்டு விட்டால் ஆபத்து. அப்பா அப்படிக் கேட்கக் கூடியவர்தான்.

பின்னே?

சட்டெனக் காய்கறிக் கூடையை ஆராய்ந்து அதிலிருந்த ஓர் எலுமிச்சம் பழத்தை எடுத்து வெட்டி மடமடவென்று ஜூஸ் தயாரித்தாள்.

இரண்டு கண்ணாடித் தம்ளர்களில் ஊற்றி எடுத்துக் கொண்டு சென்றபோது, ''முன்னெல்லாம் இன்டர்னல் ஆடிட்டை நான் தொடங்கிவிட்டேன் என்றால் மானேஜரிலிருந்து அவனவன் ஆள் நடுங்கிப் போவார்கள்'' என்று தன்

பழம் பெருமையை ஓர் ஏக்கத்துடன் அளந்து கொண்டிருந்தார் சங்கரன்.

இளம் முறுவலுடன் ஜூஸை வாங்கிக் குடித்தபடி சற்று நேரம் பேசிக் கொண்டு இருந்துவிட்டு ராஜேந்திரன் கிளம்பினான்.

''பாருங்கள், முன்னாடியே ரகுபதியிடம் சொல்லியிருந்தால் பானுவுக்காக அவனுடைய ஆட்டோ சினேகிதனை அவன் எப்படியும் ஏற்பாடு செய்திருப்பான். அதை விட்டுட்டு இப்போது உங்களுக்கு வீண் சிரமம் ஆகிவிட்டது'' என்றாள் கனகம் உபசாரமாக.

''சிரமம் என்ன? சுமந்தது கார்தானே. நான் இல்லையே'' என்று முறுவலித்து விட்டுப் பானுமதியை ஒருதரம் பார்த்து விட்டுக் கிளம்பினான் ராஜேந்திரன்.

''என் பழைய சட்டை எங்கே?'' என்று திரும்பினார் சங்கரன்.

ஒன்று நினைத்தவளாய், ''நீங்கள் சட்டையை மாற்றுங்கள். பானு, நீ சாரை அனுப்பிவிட்டு, கேட்டை மூடிக் கொண்டு வாம்மா'' என்று மகளைப் பணித்தாள் கனகம்.

ஏதோ, வீடுவரை கொணர்ந்து விட்டவனை வாயில் வரையேனும் சென்று வழியனுப்ப வேண்டும் என்பது சித்திக்காவது தோன்றியதே என்று எண்ணியவளாய் ராஜேந்திரனைப் பின் தொடர்ந்தாள் பானுமதி.

கேட் வரை சென்றவன் திரும்பி நின்று அவளையே பார்த்து, ''யார் அந்த ரகுபதி?'' என்று விசாரித்தான்.

புரியாமல், ''அப்பாவின் குடும்ப நண்பரின் மகன்'' என்று பதிலளித்தாள் அவள்.

பார்வையில் ஒரு கூர்மையுடன், ''வேறு ஒன்றும் இல்லையே?'' என்று வினவினான்.

அந்தக் குரலும் பார்வையும் உசுப்பிவிட, ''அதைப் பற்றி உங்களிடம் சொல்லத் தேவையில்லை'' என்று பட்டென பதில் அளித்தாள் பானுமதி.



# 2

வலது உள்ளங்கையைப் பார்க்கையில் பானுமதிக்கு ஆச்சரியமாய் இருந்தது.

வெளிப்படையாக ஒரு வித்தியாசமும் தெரியவில்லைதான். ஆனால் ஏன் குறுகுறு என்கிறது?

நன்றாகக் கையைக் கூர்ந்து பார்த்தாள். ஏதாவது வேறுபாடு இருக்கிறதா? அவளுக்கே தெரியாமல் ஏதேனும் தோல் வியாதி ஏதும் வந்து வைக்கப் போகிறது. அவசரமாக ஆராய்களிலேயே ரேடியோவில் அலறிய பழையபாட்டு அவளுக்குச் சிரிப்பூட்டியது. ''தண்ணென்றிருக்குதடி, அவன் கை தொட்ட இடந்தனிலே ... ''

இருக்குமா? இருக்கக்கூடுமா?

பஸ்சில் போகிறாள், வருகிறாள். எத்தனை எருமை மாடுகள் வேண்டும் என்றே இடிக்கின்றன. அப்போதெல்லாம் வெறும் மரக்கட்டை பட்டாற்போல இருக்குமே.

கையைப் பற்றி மோதிரம் போடுவது என்றால் மோதிரம் போடுவதோடு நிறுத்த வேண்டியதுதானே? அதற்குமேல் கையைத் திருப்பி உள்ளங்கையில் அப்படி ஒரு முத்தம் இடவேண்டுமா?

இப்போது என்னென்னமோ பண்ணுகிறது.

உள்ளங்கையிலேயே இப்படி என்றால் ... உதட்டைக் கடித்து எங்கெங்கோ ஓடிய மனதை அடக்க முயன்றாள் பானுமதி.

''என்ன கண்ணு, மாப்பிள்ளை போட்ட மோதிரத்தைப் பார்த்துக் கொண்டு இருக்கிறாயாம்மா? எல்லாம் வைரமாமே. இந்த ஒரு மோதிரம் பதினைந்து ஆயிரமாம்! உன் சினேகிதிப் பெண் அந்த மாலதி சொன்னாள் ... ஒரு சின்ன மோதிரத்தில் இவ்வளவு பணத்தை போட்டதற்கு ஐந்து



பவுனில் இன்னொரு நெக்லஸ் வாங்கியிருக்கலாம். இதெல்லாம் இனி நீதான் தங்கம் மாப்பிள்ளைக்குச் சொல்லித்தரணும்.''

மாப்பிள்ளை!

எவ்வளவு எளிதாக மாப்பிள்ளை ஆகிவிட்டான்! விரைவாகவும்தான்.

அன்று வீடு சேர்ந்தவன் மறுநாள் வந்தான் ஒரு கூடை ஆப்பிளோடு.

அடுத்த நாள் விதையில்லாத திராட்சை ஒரு பெட்டி.

மறுநாள் அதிசயமாக வீட்டில் இருந்த தம்பிகள் சந்தரையும், சுந்தரையும் காரில் உலா அழைத்துப் போனான். திரும்பி வரும்போது இருவர் கையிலும் அரைடஜன் டீ ஷர்ட்டுகள்,

அடுத்த நாள் வந்தவன் நேரே சங்கரனிடம் சென்று அமர்ந்தான். அவர் கையிலிருந்த சீட்டுக்கட்டை வாங்கி டீபாயில் வைத்தவன் சொன்னான் - ''உங்களிடம் கொஞ்சம் பேச வேண்டியிருக்கிறது. இங்கே எனக்குத் தெரிந்தவர். அவரது கம்பெனி பெரியது. ஒவ்வொரு செக்ஷனும் ஊழல் என்கிறார். வருடாந்திர ஆடிட் போல அவ்வப்போது ஒவ்வொரு பிரிவாகப் பார்க்க நம்பிக்கையான, விஷயம் தெரிந்த ஆள்வேண்டும், என்றார். எனக்கு உங்கள் ஞாபகம் வந்தது. என்ன சொல்லுகிறீர்கள்? சம்பளம் மாதம் மூவாயிரம் ரூபாய்.''

எல்லோரும் மயக்கம் போட்டு விழாத குறை.

சீட்டுக்கட்டைத் தூக்கிக் குப்பைக் கூடையில் போட்டுவிட்டு, ''எப்போது வேலையில் சேர வேண்டும்?'' என்று கேட்டார் சங்கரன்.

'அப்புறம் புது வேலை எப்படி இருக்கிறது' என்று கேட்க வந்தான்.



எல்லோரையும் சினிமாவுக்கு அழைத்துச் சென்றான். ராஜேந்திரன் வந்து அமர்ந்து அவரவர்க்குத் தகுந்தபடி கலகலப்பாகப் பழகும்போது ஒன்றும் தோன்றாது போகும். அவன் விடைபெற்றுச் சென்றபோது பானுமதிக்கு மனதினுள் உறுத்தும்.

''விலையில்லாத பொருள் என்று ஒன்றுமே கிடையாது என்று படித்திருக்கிறேன் சித்தி. பதிலுக்கு ஒன்றும் செய்வதற்கு இல்லாமல் ஒரு வழிப் பாதையாக அவரிடம் இருந்து வாங்கிக் கொண்டே இருப்பது ஒருமாதிரி இருக்கிறது'' என்று கனகத்திடம் மனதை வெளியிட்டாள்.

ஒரு மர்மச் சிரிப்புடன் மகளைப் பார்த்தாள் சிறிய தாயார். ''சிங்கம் சுண்டெலி கதை நினைவிருக்கிறதா? எவ்வளவு பெரிய மனிதர்கள் என்றாலும் அவர்களுக்கும் தேவை என்று ஒன்று இருக்கத்தான் செய்யும். நீ சொல்லுகிற அந்த விலை என்ன என்று நேரம் வரும்போது தெரிந்து கொள்ளலாம். சாத்தியப்பட்டால் கொடுப்போம். இல்லாவிட்டால் முகத்தைத் திருப்பிக் கொள்வது பெரிய காரியம் அல்ல'' என்றாள் பூடகமாக.

முகத்தைத் திருப்புவதா? அவனிடமா? பானுமதியின் மனம் மேலும் சஞ்சலமுற்றது.

ஆனால் இருந்திருந்து அவனுக்குத் தேவையானதென்று இந்த வீட்டில் என்ன இருக்கப் போகிறது?

மறுநாள் ஒரு நகை செட்டுடன் வந்து தன் தேவையை தெரியப்படுத்தினான் ராஜேந்திரன்.

கனகம் ரொம்ப காலமாக ஆசைப்பட்டு ஏக்கம் கொண்டு கடைசியாக நிராசையுற்றிருந்த நவரத்தின செட்.

கண்ணில் ஆவல் பளபளத்த போதும் அவசரமாகப் போய் அள்ளிக் கொள்ளவில்லை அவள். மாறாக அசையாமல் நின்றாள்.

நகைப் பெட்டியைத் திறந்து காட்டிய அவனும் அவளிடம் கொடுப்பதற்கு அவ்வளவு அவசரம் காட்டிவிடவில்லை.

''எனக்கும் பானுமதிக்கும் திருமணம் நடக்கும் போது நீங்கள் இதை அணிந்து கொண்டு எங்களை ஆசீர்வதிக்க வேண்டும் என்பது என் ஆசை. என்ன சொல்கிறீர்கள்?'' என்று கேட்டான்.

திருமணமா?

இன்னொருவனோடு அவளை இணைத்துப் பேசியே கேட்டிருந்ததாலோ என்னவோ, ராஜேந்திரன் தன்னை மணக்க விரும்பக்கூடும் என்ற எண்ணமே பானுமதிக்குத் தோன்றியதில்லை.

ஆனால் கனகம் இதை எண்ணிப் பார்த்திருந்தாள் போலும். முகமெல்லாம் பல்லாக, ''அதைவிட எனக்கு வேறே என்ன ஆசை இருக்கப் போகிறது? எங்கள் பானு கொடுத்து வைத்தவள்'' என்று முன்னே சென்று நகையை வாங்கிக் கொண்டாள்.

வீட்டில் எல்லோருக்கும் ஒவ்வொரு விதமாய் மகிழ்ச்சி புதிய வேலை - புத்தாடை - பணக்கார சம்பந்தம்.

இதன் நடுவில் அலுவலக வேலையாகக் கோவைக்கு அனுப்பப்பட்டிருந்த ரகுபதி யாருடைய கண்ணிலும் மட்டுமின்றிக் கருத்திலும் படவே இல்லை.

அறிமுகம் ஆகி பத்தே நாட்களில் நிச்சயதார்த்தம் முடிந்து விட்டது.

அதையும் ஒரு பெரிய ஃபைவ் ஸ்டார் ஓட்டலில் பெரிய விழாவாகவே நடத்தினான் ராஜேந்திரன்.

அடுத்து ஆடி மாதம் என்பதால் ஒருமாதம் பொறுத்து ஆவணியில் முதல் முகூர்த்தத்தில் திருமணம் என்று முடிவு செய்தார்கள்.

''பிளடி ஆடி'' என்று தாழ்ந்த குரலில் அவன் ஆத்திரப்பட்டபோது சிரிப்பு வந்தபோதும் பூரிப்பாகவும் உணர்ந்தாள் பானுமதி.



எப்படியும் ஒப்பந்தப்படி இரண்டு மாத நோட்டீஸ் இல்லாமல் வேலையைவிட இயலாது என்று அவள் கூறிய போது அவன் அலட்சியமாகச் சிரித்தான்.

ஆனால் இரண்டே நாட்களில், அன்று வரையிலான சம்பளத்தைக் கணக்குத் தீர்த்து, உரிய பணமும் வேலை ஒப்பந்தத்தை ரத்து செய்த ஆர்டரும் கைக்குக் கிடைக்கவும், அவள் திகைத்துப் போனாள். எப்படி?

அவன் இலகுவாக விளக்கம் சொன்னான். ''உன் எம்.டி.யின் ஒரு தப்பு பற்றி எனக்குத் தெரியும். சின்ன ... ரொம்ப ரொம்பச் சின்ன ... வீடு. பெரிய வீடு கொஞ்சம் பெரிய இடம். அங்கே போக வேண்டியிருக்கும் என்றேன். அவ்வளவுதான், என் முன்னாலேயே லெட்டர் 'டிக்டேட்' செய்து விட்டார்'' என்று சிரித்தான்.

வழக்கம் போலவே அவனது சிரிப்பில் லயித்த போதும் மனம் உறுத்த ''பிளாக் மெயில்...'' என்று முகம் சுளித்தாள் பானுமதி.

''வழி... என்று பார்த்தால் அப்படித்தான். ஆனால் இதனால் யாருக்கும் பாதிப்பு இல்லையே'' என்றான் ராஜேந்திரன்.

''இல்லைதான்...''.

''ஆனால் என்ன செய்தும் இந்த ஒரு மாதத் தாமதத்தை ஒன்றும் செய்யமுடியவில்லை பார். இந்த ஆடி மாதம் மட்டும் ஒரு மனிதனாக இருந்திருந்தால் துப்பாக்கியைக் காட்டி மிரட்டி... பின்னங்கால் பிடரியில் இடிபட ஓட வைத்திருப்பேன். ஆனால் ... ஹூம்...'' என்று பாவனையுடன் அவன் சொல்லச் சொல்ல அவளுக்கு சிரிப்பு பொங்கியது.

கண்கள் பளபளக்க, அவளை நோக்கி ஓர் எட்டு எடுத்து வைத்தவன் சட்டென நின்று ஒற்றை விரலை நீட்டி அவளது உதடுகளை அளந்தான்.



''இன்னமும் முப்பது நாட்கள்!'' - என்றவன் சரேலென விலகிச் சென்று மறுபடியும் திரும்பி நின்றான்.

அவனது இறுக மூடிய கைகளையும் விறைத்த முதுகையும் ஆச்சரியத்துடன் பார்த்த பானுமதிக்கு இதமாய் நெஞ்சு படபடத்தது.

பூரிப்பாகவே இருந்தபோதும் உள்ளூர ஒரு திகிலையும் உணர்ந்தாள் அவள்.

அந்த 'பிளாக் மெயில்' இப்போது தப்பாகத் தோன்றாவிட்டாலும், நினைப்பதை ஒரு பிடிவாதத்துடன் சாதிக்கும் அவனது குணம் அவளைக் கொஞ்சம் குழப்பியது.

இவன் எப்படிப்பட்டவன்? என்ன மாதிரி குணம்? அவனைப் பற்றிய உள்விஷயம் எதுவும் தெரியாமல் அவனோடு வாழ்க்கையை இணைத்துக் கொள்வது சரிதானா? என்றெல்லாம் அவ்வப்போது யோசனை ஓடும்.

ஆனால் இதையெல்லாம் யோசித்துக் கொண்டு இருக்க நேரம் இல்லாமல் 'ஷாப்பிங்' செய்யவே அவளுக்கு நேரம் போதவில்லை.

முதலில் தயங்கிய போதும், ''நாளைக்கு ராஜண்ணா மனைவியாகிறபோது அவருடைய கவுரவத்துக்குச் சரியாக நீ அணிந்திருக்க வேண்டாமா? உன் அப்பாவால் முடியாது. போகட்டும். அப்புறம் அண்ணன் மனைவி ஆனபிறகு வாங்கிக் கொள்ள மாட்டாயா? இப்போது என்ன பிகு?'' என்று மாலதி வற்புறுத்தவும் தலையாட்டும்படி ஆயிற்று.

மாலதி, அவளுடைய தாயாரின் ஆலோசனைப்படி துணிமணிகள் வாங்கப்பட்டன.

இரு தினங்கள் கூட வந்த ராஜேந்திரன், தேவைப்பட்டதை எல்லாம் வாங்குமாறு தன் சித்தியிடம் பணத்தைக் கொடுத்துவிட்டு, தொழிலைப் பார்த்து வருவதாகக் கூறிச் சென்றான்.



''தொழிலைக்கூட இன்னும் சில நாட்கள் டெலிஃபோனிலேயே சமாளிக்க முடியும்தான். ஆனால் ... உன்னைத் தினமும் பார்த்துக் கொண்டே விலகி இருக்க வேண்டிய கட்டாயம்தான் சித்ரவதையாக இருக்கிறது. அதனால்தான் ...'' காதோரம் கிசுகிசுத்து, கிடைத்த சில நிமிடத் தனிமையில் அவளைத் தழுவி, மனமற்று அவன் விடுவித்தபோது, உள்ளங்கையின் குறுகுறுப்பை உடம்பு முழுவதுமாக உணர்ந்தாள் பானுமதி.

இந்த ஒரு மாதம் எப்போது முடியும்? அவளுக்கும் பொறுமையை இழுத்துப் பிடித்து வைக்க வேண்டியதாயிற்று.

நேர்த்தியான நகைகளையும் பட்டாடைகளையும் வாங்கும்போது பெண்ணுக்குரிய இயல்பில் பானுவின் மனம் மகிழ்ச்சியுற்றது.

தனிமை நேர்ந்தாலோ, அவனது அணைப்பை எண்ணி எண்ணி மயங்கிக் கிறங்கியது.

எல்லாம் கலைந்த தலையும், சிவந்த கண்களும், பயணத்தால் நசுங்கிய உடையுமாக ரகுபதி முன் வந்து நிற்கும் வரை வந்து நின்று, ''சொல்லு. நான் கேட்டது உண்மையா சொல்லு'' என்று கேட்கும் வரையில்தான். திடுமெனத் தூக்கம் கலைந்தாற்போல விழித்தாள் பானுமதி. இவனை எப்படி மறந்து போனாள்?

அந்த ராஜேந்திரன் ஏதேனும் மெஸ்மரிசம் பயின்றவனா?

மற்றபடி, ஏழைக்கேற்ற எள்ளுருண்டை என்று அவளும், இந்த வீட்டு மருமகன் இவனே என்று மற்றவர்களும் மனதார ஒத்திருந்த இவனை, ஒட்டுமொத்தமாக எல்லோருமாய் எப்படி மறந்திருக்கக்கூடும்?

அல்லது மறந்தது அவள் மட்டும்தானா?

பதில் கூறும் வகையறியாமல் பானுமதி திகைக்கையிலேயே சிற்றன்னை உள்ளே வந்து விட்டாள்.

''அடேடே நம்ம ரகுவா? வா வா. இன்றுதான் ஊரிலிருந்து வந்தாயா? வந்தவன் கொஞ்சம் ஓய்வு எடுத்துக் கொண்டு அப்புறமாய் வரக்கூடாதா? பானுக்குட்டி போம்மா. போய் நல்ல 'ஸ்டிராங்கா' ஒரு கப் காபி கலந்து கொண்டு வந்து தம்பிக்குக் கொடு...''

சித்தியின் விழிகள் ஏதோ சொல்வது புரிய மெல்லச் சமையல் அறையினுள் சென்றாள் பானுமதி.

''காபியை குடித்துவிட்டு இங்கேயே ரெஸ்ட் எடுத்துக் கொள்... ஏதோ இந்த வீட்டுக்கும் நீதான் தலைப்பிள்ளை மாதிரி கல்யாண வேலைக்கு நான் உன்னைத்தான் மலை போல...''

''போதும் நிறுத்துங்கள்!'' என்று கத்திவிட்டான் ரகுபதி. ''தலைப்பிள்ளையாம் தலைப்பிள்ளை... பானுவின் கல்யாண வேலையை நான் பார்ப்பதா? இதைச் சொல்ல உங்களுக்கு நாக்கு கூசவில்லை?'' என்றான் ஆத்திரத்துடன்.

கனகத்தின் தோரணை சட்டென மாறியது.

நிதானமாக நடந்து ஒரு நாற்காலியில் நிமிர்ந்து அமர்ந்தாள். ''இல்லையே. என் மகளுக்குத் திருமணம். ஏதோ தெரிந்த பையன், உதவி செய்வாய் என்று நினைத்துக் கேட்டேன். இதில் நாக்கு கூசிப் போகவோ ஊசிப் போகவோ என்ன இருக்கிறது? இஷ்டம் இருந்தால் செய். பிரியம் இல்லை என்றால் நீ போய்க் கொண்டே இருக்கலாம். உன்னை யாரும் கட்டாயப் படுத்த மாட்டார்கள்'' என்றாள் கடுமையான குரலில்.

உள்ளே நின்றிருந்த பானுமதியைப் போலவே ரகுபதியும் திகைத்துப் போனான்.

சற்றுத் திணறி, ''அத்தை, நான் பானுவின் மேல் எவ்வளவு ஆசை வைத்திருக்கிறேன் என்பது உங்களுக்குத் தெரியாதா? இப்படிப் பேசுகிறீர்களே'' என்று ரகுபதியும் முறையை மாற்றிப் பார்த்தான்.



ஆனால் கனகம் அசையவே இல்லை. ''வீட்டில் ஒரு பெண் அழகாக இருக்கிறாள் என்றால் வீதியிலே போகிறவன் வருகிறவன் அத்தனை பேருக்கும் ஆசை வரத்தான் செய்யும். அதற்குப் பெற்றவர்கள் என்ன செய்ய முடியும்?'' என்றாள் எடுத்தெறிந்தாற்போல்.

''நான் ஒன்றும் எவனோ வீதியில் போகிறவன் இல்லை'' என்றான் ரகுபதி ஆத்திரத்துடன். ''அத்தோடு நீங்களும் இணக்கமாகத்தான் இருந்தீர்கள் என்பது எல்லோருக்குமே தெரியும்.''

''நான் மட்டும் இல்லை என்றேனா? எனக்கு இஷ்டமும் தான். பழகின குடும்பத்துப் பையன், பெண்ணை நன்றாக வைத்துக் கொள்வான் என்று எனக்கு நினைப்பு. சரி, நம் வீட்டுச் சம்மதத்தைக் கோடு காட்டி ஆயிற்று. இனி சீக்கிரமாய் ரகுத் தம்பி அம்மா அப்பாவோடு பெண் கேட்டு வருவான் என்று நானும் வாயைப் பிளந்து கொண்டு காத்திருந்ததுதான் மிச்சம். ஆனால் உனக்கு அந்த நினைப்பே இல்லையே. ஒன்றும் உறுதிப்படுத்தாமல் வெளியூர் வேறு போய்விட்டாய். அதனால்தான், இவனுக்காகக் காத்திருந்து பிரயோசனம் இல்லை என்று நல்ல இடம் வந்ததால் அதை முடித்தோம்'' என்று அவன்மீதே குற்றத்தைச் சுமத்தி முடிக்கவும் ரகு பிரமித்துப் போனான்.

சின்னப் பெண் அது இது என்று ஒத்திப்போட்டவளால் எப்படி இப்படிப் பேச முடிகிறது!

''எலும்பில்லாத நாக்கு எப்படியும் புரட்டலாம் என்று காட்டுகிறீர்களா?'' என்று பொருமினான் ரகுபதி. ''மாமா வரட்டும். நான் அவரிடம் பேசிக் கொள்கிறேன்'' என்றான் விறைப்புடன்.

''நன்றாகப் பேசேன். நான் குறுக்கே நின்றா மறிக்கப் போகிறேன்? மாப்பிள்ளை வாங்கிக் கொடுத்த புது வேலை. அவருக்கு பிடித்தமான வேலையா, 'அப்படிக் கிடந்து



பார்த்துப் பார்த்துச் செய்கிறார். புது முதலாளிக்கும் பானு அப்பாவை மிகவும் பிடித்துப் போயிற்றா, வேலைக்கு அழைத்துப் போகக் கார், திரும்ப வீட்டுக்குக் கொண்டு விடக் கார் என்று வசதிமேல் வசதி செய்கிறார். ஒன்று செய். நீ சாயங்காலமாய் ஓர் ஏழு மணி வாக்கில் வந்தால் அவரும் வீட்டில் இருப்பார். அவரிடம் நீயும் உன் ஆசை தீரப் பேசிப் பார்க்கலாம்'' என்றாள் கனகம் நக்கலாக...

இந்தக் காருக்கும் வசதிக்கும் அவன் எங்கு போவான்?

ஆனால் பானுமதி?

''பானு...'' என்று உள்ளே திரும்பினான்.

சட்டெனத் துள்ளி எழுந்து வழிமறைத்து நின்றாள் கனகம்.

''நில்லுப்பா, நில்லு. அது கல்யாணம் நிச்சயமான பொண்ணு. நீ அன்னியப் பையன், அதுகிட்ட தனியாகப் போய்ப் பேசுவது சரியில்லை. எதுவானாலும் என் முன்னால் பேசு. அல்லது பேசாமல் போ'' என்றாள் அதிகாரமாக. வெறித்துப் பார்த்துவிட்டுத் திரும்பிச் சென்றான் ரகுபதி.

பானுமதிக்கு மனம் குன்றிப் போயிற்று.

இவனிடம் முன்பு வீட்டு மருமகன் அது இது என்று ஆசை காட்டி பேசாமல் இருந்திருக்கலாம் என்று, வருத்தமாக இருந்தது. அல்லது இப்போதேனும் இந்த சித்தி சற்று மெதுவாக, ரொம்ப நல்ல இடம் வந்ததால் என்று ஏதேனும் கொஞ்சம் இதமாகப் பேசி அனுப்பியிருக்கலாம். அதை விட்டு எடுத்தெறிந்து பேசிவிட்டார்களே. முன்பு குழைவாகப் பேசிப் பேசி ரேஷன் வாங்கி வர வைத்ததும், தண்ணீர் பம்ப் சரிசெய்யச் சொன்னதும் நினைவு வராமலா போகும்? சித்தியைப் பற்றி அவன் என்ன நினைப்பான்? அத்தோடு, சித்தியின் ஒரு கண்ணசைவில் ஓடி வந்து உள்ளே பதுங்கிக் கொண்ட தன்னைப் பற்றியும்தான் அவன் என்ன நினைப்பான் என்று மனம் வேதனைப்பட்டாள்.



அடுத்துப் பார்க்கும்போது அவனிடம் சாரி சொல்ல வேண்டும். ஆனால் மன்னிப்புக் கேட்க வேண்டும் என்று நினைத்தாளே தவிர, இந்த நிச்சயத்தை மறுத்து ரகுபதியோடு வாழ்வை இணைக்கும் எண்ணம் தனக்கும் தோன்றவில்லை என்பதோடு மறுக்கும் எண்ணமே வெறுப்பாக இருப்பதையும்கூட நன்றாகவே உணர்ந்தாள் பானுமதி. ஏன்? ராஜேந்திரனின் பணத்தைக் கண்டு அவளும் மயங்கி விட்டாளா? அப்படிப் பணத்துக்காக எதையும் செய்கிறவள் இல்லை அவள். அது நிச்சயம். அல்லது ராஜேந்திரனிடம் காதல் வந்து விட்டதா? பத்தே நாட்களில் அது சாத்தியமா? ஒன்றும் தெளிவுபடவில்லை. ஆனால் திருமணம் தடைப்பட்டு விடக் கூடாது என்று மட்டும் மனம் உருகி வேண்டிக் கொண்டாள் அவள்.

ரகுபதியிடம் மன்னிப்புக் கேட்க பானுமதி ஒன்றும் சிரமப்பட வேண்டியிருக்கவில்லை.

அன்று மாலதியோடு தில்லையாடி வள்ளியம்மைக்குப் போயிருந்தாள் பானுமதி.

திருமணத்திற்கென்று அவன் வழிச் சொந்தக்காரர்களுக்கு என்று வாங்கிய சேலைகளில் தன்னுடையது பிடிக்கவில்லை என்ற மாற்றுவதற்காக பானுமதியையும் இழுத்துக் கொண்டு வந்திருந்தாள் மாலதி.

ஒவ்வொன்றாகப் பார்ப்பதும், பிடிக்கவில்லை என்று ஒதுக்குவதுமாக, அங்கிருந்த அத்தனை பேரையும் ஆட்டிப் படைத்துக் கொண்டிருந்த மாலதியை வேடிக்கைப் பார்த்துக் கொண்டிருந்தாள் பானுமதி.

கூடவே, ஒரு சேலையைத் தேர்ந்தெடுக்க இவ்வளவு ஆர்பாட்டம் செய்கிறாளே, யாராவது ஏதாவது சொல்லி விடுவார்களோ என்று உள்ளூரக் கலக்கம் வேறு. மெல்ல மாலதியின் காதில் சொல்லிப் பார்த்தாள். ஆனால், ''பணத்தைப் போட்டு வாங்குகிறோம். நமக்கு நூறு சதவீதம் திருப்தி

தராததை ஏன் வாங்க வேண்டும். அதைத் தேடுவதில் என்ன தப்பு? அதோ, அந்த வரிசையில் மேலே இருப்பதையெல்லாம் எடுங்கள்'' என்று தன் வேலையில் ஈடுபட்டாள் அவள்.

அந்த சேல்ஸ் வுமனும் ''கஸ்டமர் கேட்டதை எடுத்துக் காட்டத்தானே அம்மா, எங்களுக்குச் சம்பளம் தருகிறார்கள்'' என்று கூறிச் சிரித்த முகமாகவே சேலைகளை எடுத்துக் காட்டினார்.

இதில் கூட வாழ்க்கைக்கு ஒரு பாடம் இருக்கிறது.

அடுத்தவர்கள் என்ன நினைப்பார்களோ என்று பயந்து நமக்கு முழுதிருப்தி தராததை ஏற்றுக் கொண்டு, பிறகு அப்படி இருந்திருந்தால் ... என்று ஏங்குவதைவிடத் தனக்கு வேண்டியதில் பிடிவாதமாக இருந்து வாங்குவதே நல்லது. ஆனால் தனக்கு எது வேண்டும் என்று புரிந்து கொள்வதிலும் தெளிவு வேண்டும் ... என்று எண்ணமிட்டபடி நின்ற பானுமதிக்குக் குத்துவது போல உணர்ச்சி உண்டாயிற்று.

திரும்பிப் பார்த்தாள். கண்ணாடிக் கதவுக்கு வெளியே ரகுபதி நின்று கொண்டு அவளையே வெறித்துப் பார்த்துக் கொண்டிருந்தான்.

ஒரு கணம் யோசித்தவள், சட்டென ஒரு முடிவுக்கு வந்து, ''நீ பார்த்துக் கொண்டிரு மாலதி, நான் இதோ வந்துவிடுகிறேன்'' என்று வெளியே வந்தாள்.

சற்று ஒதுக்குப்புறமாக இரண்டு எட்டு அவள் நடக்க அவனும்கூட வந்தான்.

நின்று திரும்பி அவன் முகத்தைப் பார்த்தாள் பானுமதி.

சற்றுமுன் இருந்த தெளிவு சட்டெனக் கலைந்துவிட இவனிடம் என்னவென்று சொல்வது, எப்படிப் பேசுவது என்று புரியாமல் சற்று தயங்கினாள்.

அதற்குள் அவனே தொடங்கிவிட்டான். ''இது என்ன அநியாயம் பானு? உன் பெற்றோர் இப்படிப் பேச்சு மாறு



வதா? அவர்களை விடு. நீ ஏன் மறுக்கவில்லை? நான் ஒருவன் இருக்கையில் இதற்கு நீ எப்படி இணங்கலாம்?'' உன் நினைவே வரவில்லை என்று இவனிடம் எப்படிச் சொல்வது? அது கொடுமை இல்லையா...

தயக்கமும் கலக்கமுமாக, ''வந்து...'' என்று தொடங்கினாள் அவள்.

அவள் பேசியதாகவே ரகுபதி எடுத்துக் கொள்ளவில்லை. அல்லது அவளுக்குத்தான் குரல் தொண்டைக் குழியைத் தாண்டி வெளியே வரவில்லையோ, என்னவோ?

அவனே தொடர்ந்து பேசினான். ''வா பானு. முதலில் உன் பெற்றோரிடம் இந்தத் திருமணத்தை நிறுத்தச் சொல்லு. பிறகு அந்த ராஸ்கல், அவன் பெயர் என்ன... ம்... ராஜேந்திரனாமே ... அவனுக்கு ஒரு துண்டு கடிதம் எழுது, கல்யாணத்தில் விருப்பம் இல்லை என்று...''

சட்டென அவள் ஓர் எட்டு பின்னடையவும் அவள் முகத்தை கூர்ந்து பார்த்தான் ரகுபதி.

அங்கே என்ன கண்டானோ... அவன் முகம் கன்றிக் கறுத்தது. வெகு சிரமப்பட்டுத் தன்னை அடக்கிக் கொண்டு, ''பானு; நீ கூடவா அப்படி? அத்தை, மாமனுக்குத்தான் பணத்தாசை கண்ணை மறைக்கிறது என்றால் உனக்குக் கூடவா? வேண்டாம் பானு. இந்தப் பணக்காரப் பசங்கள் எல்லாம் வடிகட்டின அயோக்கியர்கள். அதிலும் இந்த ராஜேந்திரன் ஒண்ணாம் நம்பர் வில்லன். வெள்ளிக் காசுப் பளபளப்பிற்காக உன் வாழ்க்கையைப் பலி கொடுத்துவிடாதே. வேண்டாம் பானு, ப்ளீஸ் நான் சொல்வதைக் கேள். இந்தப் பணம் இல்லாமலே நாம் இருவரும் சந்தோஷமாக வாழலாம்... இந்தக் கல்யாணம் வேண்டாம் என்று தயவு செய்து சொல்லிவிடு. பானு... நீ இல்லாமல் என்னால் வாழவே முடியாது. யோசி. எனக்கு அவ்வளவு ஆசை காட்டிவிட்டுத் திடீர் என்று மாறினால் என்னால் தாங்க

முடியுமா? அது நியாயமா? நினைத்துப் பார்'' என்று மன்றாடினான்.

பானுமதியின் மனம் வெகுவாக இளகியும் கலங்கியும் போயிற்று. குற்றக் குறுகுறுப்பு வேறு.

ஆனால் அதற்காக ராஜேந்திரனை மறுக்க முடியுமா?

சற்றுமுன் கற்ற பாடத்தைக் கடைப்பிடிப்பதாக எண்ணி, ''நிச்சயதார்த்தம் நடந்துவிட்டது. இனிமாற்றுவதிற்கில்லை'' என்றாள் மெதுவாக.

''என்ன பெரிய நிச்சயதார்த்தம்? அதுவும் ஒரு உறுதிப் படுத்தல்தானே? என்னிடம் ஆயிரம் வழிகளில், ஆயிரம் வார்த்தைகளில் உறுதிப்படுத்தவில்லை? அதையெல்லாம் ஒரு விநாடியில் தூக்கி எறிந்து விடவில்லை? இது மட்டும் என்ன மகா கல்லில் பொறித்த சொல்? இதையும் உடைத்து எறி'' என்று கண்கள் சிவக்கச் சொன்னவன் பார்வை, கைக்குட்டையைக் கசக்கிக் கொண்டிருந்த அவள் கையில் ஒளிர்ந்த மோதிரத்தின் மேல் விழவும், ''ஓகோ, இதுதான் அவன் போட்ட மோதிரமோ? பெரிய துஷ்யந்தன், மோதிரம் போட்டு விட்டான்! கழற்றி தலையைச் சுற்றி எறி. என்னை அவ்வளவு நம்ப வைத்துவிட்டு, என் தலை திரும்பியதும் இன்னொருவன் மோதிரத்திற்கு விரலை நீட்ட உனக்கு வெட்கமாக இல்லை?'' என்று கொதிப்பின் எரிமலைக் குழம்பாய்க் கொட்டினான்.

சற்றுமுன் இளகிய மனம், இந்த அதிகாரமான ஆத்திரப் பேச்சில் இறுகிவிடத் தலையை நிமிர்த்தி, ''நான் என்றேனும் சரி என்றேனா?'' என்று பதிலுக்குக் கேட்டாள்.

''ஆனால் இல்லையென்று மட்டும் நீ சொன்னது உண்டா?'' என்று திருப்பினான் அவன். ''உன் தாயும் தகப்பனும் உன்னைக் காட்டி காட்டி நைச்சியமாய் என்னிடம் வேலை வாங்கியபோதும், இந்த வீட்டு மருமகன் என்ற போதும் நீ ஒரு வார்த்தை மறுத்ததுண்டா? ஒத்துக் கொண்டு



தானே இருந்தாய்?'' என்று அவன் திருப்பிக் கேட்டபோது அவளால் பதில் சொல்லமுடியவில்லை.

அன்றும் எதற்கும் ரகுபதியின் உதவியை நாடாமல் ஓரளவேனும் தன் பெற்றோரை அவள் தடுத்தது உண்டுதான்.

ஆனால் அது அவனுக்குத் தெரியாது என்பதோடு, அவன் பேச்சிலும் நியாயம் இல்லாமலில்லையே.

நிமிர்ந்த தலை தானாகக் குனிய, ''வந்து...சாரி...'' என்றாள் மிகவும் சின்னதாகிவிட்ட குரலில்.

அவளை வெறித்துப் பார்த்துவிட்டு, ''எனக்கு உன்சாரி என்ற சொல் வேண்டாம். உன் சாரியில்தான் இடம் வேண்டும்'' என்றான் ரகுபதி.

பேச்சுக்குச் சரியாக அவன் பார்வை உடலில் மேய்வதை உணரவும், ''மட்டமாய்ப் பேசாதீர்கள்'' என்றாள் அவள் சுள்ளென்று.

''நான் மட்டமானவன் என்றால் உன்னை எத்தனை தடவையோ, எங்கெங்கோ தொட்டிருப்பேன். உன் வீட்டுத் தாய்க் கிழவியோ, தகப்பன் மாமாவோ அதைத் தடுத்திருப் பார்கள் என்றா நினைக்கிறாய்'' என்று மேலும் தரம் இறங்கிப் பேசலானான் ரகுபதி.

இந்தக் கொச்சையான பேச்சில் பானுமதிக்கு மூச்சடைத் துப் போயிற்று.

என் பெற்றோரை இப்படி ஒருவன் பேசுவதா என்று மனம் சீறியபோதும், பெண்ணைத் தருவதாகச் சொல்லிக் காரியம் சாதித்தவர்கள் இன்று பகமை கண்ட இடத்துக்குத் தாவிவிட்ட உண்மை அவளை மிகவும் அவமானமாகவும் உணர வைத்தது.

ஆனாலும், அவளுடைய பெற்றோர் செய்தது தப்பென் றாலும் கூட ரகுபதியின் பேச்சு மிகவும் அதிகப்படி.

அவன் பேச்சுக்குச் சரியாகத் திருப்பித் திட்டவும் முடி யாமல், இன்னொரு சாரி சொல்லவும் மனமற்று அவள் திணறியபோது மாலதியின் குரல் அவளை அழைத்தது.



''இங்கே என்ன செய்கிறாய் பானு? கடைசியில் எனக்கு ஒரு சேலை பிடித்த மாதிரி இருக்கிறது உன் அபிப்ராயம் சொல்லு...'' என்று அழைத்தாள் ராஜேந்திரனுடைய சித்தி மகள்.

வேறு பேச்சின்றி திரும்பி மாலதியோடு சென்றாள் பானுமதி.

சேலையை வாங்கிக் கொண்டு திரும்பும்போது, ''அது யார் பானு, வெளியே உன்னோடு பேசிக் கொண்டிருந்தது?'' என்று விசாரித்தாள் மாலதி.

''அப்பாவின் ... வந்து குடும்ப நண்பரின் மகன்'' என்றாள் பானுமதி.

''ம்... என்னவோ, அந்த ஆள் முழியே சரியில்லை. எதற்கும் நம் தமிழ் வகுப்பில் படித்தோமே, 'கொம்புளதற்கு ஐந்து முழம் குதிரைக்குப் பத்து முழம்' என்று அந்தப் பாட்டில் வருகிற மாதிரி இந்த ஆளின் கண்ணில் படாத தூரத்தே நீ நீங்குவதே நலம்'' என்றாள் மாலதி.

''நிச்சயமாய்!'' என்று முழு மனதோடு ஆமோதித்தாள் அவள் தோழி.

ரகுபதி'வம்புசெறிதீங்கின'னாக இல்லாமல் இருக்க லாம். ஆனால் அவனது கடைசிப் பேச்சுக்குப் பிறகு அவனை நினைக்கவே அவளுக்கு அருவருப்பாக இருந்தது.

ஆனால் அவள் எவ்வளவுதான் கண்ணில் படாத தூரத்துக்கு விலகிப் போய்விட விரும்பினாலும், அது முடி கிற காரியமாகவும்படவில்லை. அவள் எங்கே சென்றாலும் அவன் அங்கெல்லாம் அவளைப் பின் தொடர்ந்து கொண்டே இருந்தான். முகத்தில் ஒரு குற்றம் சாட்டும் பார்வையோடு, தேவதாஸ் தோற்றத்தோடு, வீட்டிலேயே முடங்கினாலும் அப்போதும் வீட்டெதிரே பழிகிடந்தான். தெருவில் நிற்ப வனை என்ன செய்ய முடியும்?



கடிதம் ஒன்று வந்தது.

அவள் இன்னொருவனை மணந்தால் உயிரை விட்டு விடப் போவதாக எழுதியிருந்தான் ரகுபதி.

பானுமதிக்கு ஒரு கணம் நெஞ்சுத் துடிப்பு நின்று போயிற்று.

சிலையாக நின்ற மகளின் கையிலிருந்த கடிதத்தை வாங்கிப் படித்துவிட்டு, ''ஏதோ, அவனால் ஆனது. இந்தத் தரித்திர தேசத்துக்கு ஓர் ஆள் சாப்பாடு மிச்சமாகும்'' என்றாள் கனகம்.

'என்ன கல் நெஞ்சு!' என்று தோன்றியது பெண்ணுக்கு.

''என்னமோ பெரிய தப்பு செய்வது போலக் கஷ்டமாக இருக்கிறது சித்தி'' என்றாள் தீனக் குரலில்.

தலையைச் சரித்து மகளைப் பார்த்துவிட்டு கனகம் சொன்னாள். ''என் ஒன்றுவிட்ட தம்பி வேணு போன வருஷம் இங்கே வந்தானே. நினைவு இருக்கிறதா? உன் னைப் பார்த்ததுமே கட்டித் தரும்படி கேட்டான். பிறகு பார்ப்போம் என்று தட்டிக் கழித்தோம். இதே நினைப்பில் இப்போது அவனும் இதே மாதிரி ஒரு லெட்டர் எழுதினான் என்று வை. இந்த இரண்டு கடிதங்களுக்காகவும் நீ கல்யா ணத்தை மறந்து மணிமேகலை ஆகிவிடுவாயா? அல்லது இரண்டு பேரையும் கட்டிக் கொள்வாயா? போடி போடி பைத்தியம். இந்த வேலையற்றவன் எழுதும் வெட்டிக் கடி தத்தை எல்லாம் பெரிதாக எடுத்துக் கொண்டு உருகுகிறாயே. அப்படி உயிரை விடுகிறவன் சொல்லிட்டா செய்வான்? கசக்கிக் குப்பையில் போட்டுவிட்டு உன் பாட்டில் இரு'' என்றாள் அலட்சியமாக.

சித்தி சொல்வதும் சரிதானே என்று எண்ணிய போதும் அந்தத் திடம் வர மறுத்தது பானுமதிக்கு. அதிலும் ரகுபதி யைப் பார்க்க நேரும்போது ஒவ்வொரு தரமும் தைரியம் குலைந்து போயிற்று.

செய்வது பெரிய தப்புதானா என்று அவள் கலங்கத் தொடங்கியபோது நல்லவேளையாக ராஜேந்திரன் திரும்பி வந்து சேர்ந்தான். அவனைக் கண்டதுமே பானுமதியின் மனம் பெருமளவு அமைதியுற்றது. சில நிமிட நேரம் வீட்டினரோடு பேசிக் கொண்டிருந்தவன் ''பானுவைச் சற்று வெளியே கூட்டிப்போய் வருகிறேன்'' என்று அவளையும் அழைத்துக் கொண்டு கிளம்பினான்.

அவன் தன் உத்தேசத்தை அறிவித்தானே தவிர யாரிடமும் அனுமதி கேட்கவில்லை என்பதும், தடுக்கும் எண்ணம் தாய், தந்தை இருவருக்குமே இல்லை என்பதும் பானுமதியின் மனதை உறுத்தின.

நானும்தான் உடனேயே கிளம்பி வந்துவிட்டேன். இது ரகுபதி சொல்வது போலப் பண மயக்கமா... இல்லை இல்லை... அவனது அருகாமை அமைதி தருவதால்தான்.

ஓரக்கண்ணால் ஒரு பார்வையை அவள்மீது செலுத்திவிட்டு ராஜேந்திரன் பேசினான். ''ஊரில் என் பெரியம்மா - பெரியப்பாவுடைய மனைவி - அவர்களிடம் நன்றாக வாங்கிக் கட்டிக்கொண்டேன்'' என்றான் திடீரென்று. திடுமென அவன் குரல் ஒலிக்கவும் சற்றுத் திடுக்கிட்டு, திகைத்து, பின் அவன் பேச்சைக் கவனித்து, ''ஏ... ஏன்?'' என்று வினவினாள் பானுமதி.

உடனேயே, இது என்ன மடத்தனமான கேள்வி, ஏழை வீட்டுப் பெண்ணுக்கு எதிர்ப்பாக இருக்கும் என்றும் தோன்றியது.

ஆனால் அவன் வேறு சொன்னான். ''நிச்சயதார்த்தத்தை அவசரமாகச் சித்தியை மட்டும் வைத்து நடத்திவிட்டேனாம். அவர்களை முறையாகக் கேட்டு முதன்மையாக வைத்துச் செய்யவில்லையாம்! கடைசியில் அம்மா வீட்டுப் பக்கம்தான் சாய்ந்துவிட்டேனாம், அதுதான் கோபம்.''



''ஓகோ! அப்புறம்?'' இதை இவன் எப்படி சமாளித்திருப்பான்?

''அப்புறம் என்ன? ஒரு வைர மோதிரம் தட்சிணை வைத்தேனா, அவர்களின் கோபத்தைக் 'காணவில்லை' விளம்பரம் போட்டுத் தேடும்படி ஆயிற்று'' என்று நகைத்தான் ராஜேந்திரன்.

'இன்னொரு லஞ்சம்' என்ற எண்ணத்தை அவனது பாவனையும் பேச்சும் மறக்கடித்துவிட, கூடச் சேர்ந்து முறுவலித்தாள் பானுமதி. கூடவே கேலியாக, ''முன்னே, பின்னே அனுபவம் இல்லாத குறை. மாட்டிக் கொண்டீர்களாக்கும்'' என்றவளுக்கு உடனே மனம் ஒருவிதமாக இளகியது. ''பெரியவர்கள் இருந்திருந்தால் இதெல்லாம் யோசித்து முறைப்படி செய்திருப்பார்கள்...'' என்றாள் மெதுவாக.

சில கணங்கள் பேசாமல் இருந்துவிட்டு, ''பத்து ஆண்டுகள் முடிந்துவிட்டன. அவர்களை இழந்து'' என்றான் அவன் ஒரு பெருமூச்சுடன்.

அவனுள் இருந்த வேதனையைத் தூண்டிவிட்டு விட்டதை எண்ணி உள்ளூர வருந்தி, ''சாரி...'' என்று உரைத்து, தானாக அவனைத் தொட்டுப் பழக்கம் இல்லாததால் தயக்கத்துடன் லேசாக அவன் கையை வருடினாள் பானுமதி.

அவளது கையைப் பற்றிக் கன்னத்தில் வைத்து அழுத்திக் கொண்டான் ராஜேந்திரன். சிறிது நேர அமைதிக்குப் பின் காரை நிறுத்தி, ''மணலில் உட்கார்ந்திருக்கலாம்''என்று அவளை அழைத்துச் சென்றான்.

அமர்ந்ததும் அவளது கையை ஏந்தி, ''அப்போது நான் படிப்பைக்கூட முடித்திருக்கவில்லை. திடுமென ஒரு விபத்தில் இரண்டு பேரும் ஒன்றாகப் போய்விட்டார்கள். அவர்களை நினைத்து அழக்கூட நேரம் இல்லாமல் பெரியப்பா உடனே பாகம் பிரிக்கவேண்டும் என்று கூறிவிட்டார். ஒன்றும் தெரியாத இந்தப் பையனுக்கும் சேர்த்து, தான் ஏன்



உழைக்கவேண்டும் என்று எண்ணிவிட்டார் போல. முதலில் கண்ணைக் கட்டிக் காட்டில் விட்டதுபோல இருந்தது. அவ்வப்போது அப்பா வீட்டில் பேச்சுவாக்கில் சொன்னதை எல்லாம் நினைவுபடுத்திக் கொண்டு செயலில் இறங்கினேன். அப்பாவின் டைரி பெரிய உதவியாக இருந்தது. அப்போதும் புரியாததை. 'உனக்குச் சரியாகத் தெரிகிறதா என்று 'டெஸ்ட்' பண்ணப் போகிறேன். சொல்லு. என்று சொல்ல வைத்து நொந்து கொண்டேன். கல் விழுந்த இடத்துக்குக் காக்கைக் கூட்டமாய் பறந்தவர்கள் முன்னே நிமிர்ந்து காட்டிவிட வேண்டும் என்கிற வெறி. எப்படியோ முண்டியடித்து முன்னேறினேன்.

''முன்னேறிய பிறகு அவர்கள் மீண்டும் வந்து ஒட்டிக் கொண்டார்கள்தான். ஆனால் எனக்குத்தான் உள்ளூர மனம் நைத்துவிட்டது. வெளியே காட்டிக் கொள்வது இல்லை. அதிலும் அவரவர் பெண் பேசி வந்தபோது எப்படி வரும் தெரியுமா, பெரியம்மா கூட அவர்கள் தம்பி மகளை நான் மணக்க வேண்டும் என்று துளைத்துக் கொண்டு இருந்தார்கள்.

''வெறுப்பை வெளிப்படையாகக் காட்டாமல் முடிந்த அளவு தொழிற்சாலையிலேயே காலம் கழிப்பேன். ஆனால் தொழில் வீடாகாது இல்லையா பானு?''

''ரேவதி சித்தி மாதிரி சில உறவினர்கள். பிரியமானவர்கள் இருக்கத்தான் செய்கிறார்கள். அவர்களிடம் கேட்டுக் கொண்டால், இப்போது சித்தி நம் திருமண விஷயமாக உதவுவதுபோல் செய்வார்கள்தான். ஆனால் கேட்கும் தேவையே இல்லாமல் நம் நன்மை நாடித் தானாகச் செய்யும் தாய் தகப்பனாருக்கு யார் ஈடாக முடியும்? ரொம்பவும் கஷ்டமாகத் தோன்றும்போதெல்லாம், இருபது ஆண்டுகள் மிகச் சிறந்த குடும்ப வாழ்வைத் தந்தார்களே, அதற்கே கொடுத்து வைத்திருக்க வேண்டும் என்று மனதைச் சமாதானம் செய்து கொள்ள முயல்வேன். முயன்று பெருமளவு வெற்றியும் கண்டு விட்டேன்.



''ஆனால் பானு, இப்போது உன்னைப் பாராமலே போய்விட்டார்களே என்பது மிகவும் வேதனையைத் தருகிறது'' என்றான் ராஜேந்திரன் குரல் கரகரக்க.

இந்த மாதிரி அவன் சொந்த விஷயம் பேசிப் பானுமதி கேட்டதில்லை. அவனது இலகு பாவனையின் உள்ளே இப்படி ஒரு தீவிரத்தை அவள் ஊகித்ததும் இல்லை.

விசித்திரமான வகையில் அவனது வேதனையைத் தனதாக உணர்ந்து, ''எனக்கும்கூட அவர்களைப் பார்க்கவே இல்லையே என்று இருக்கிறது'' என்றாள் குரல் கனிவுற.

அவளது விரல் மோதிரத்தைச் சுற்றி மெதுவாகக் கோலமிட்டவன், ''வேண்டாத உறவினர்களின் வேண்டிய பெண்கள் பற்றிச் சொன்னேனே வளைத்துப் போடும் முயற்சிகள் பலிப்பதற்காக அந்தப் பெண்களோடு என்னை இணைத்துக் கதைகள் கூடப் பரப்பியது உண்டு... மாலதி தன் ஆடை அலங்காரம் பற்றிப் பேசியது போக மீதி நேரத்தில் இந்த அண்ணன் பற்றி எதுவும் சொன்னதுண்டா?'' என்று கேலி போலக் கேட்டான்.

''ஊஹூம்'' என்று தலையசைத்தாள் பானுமதி. ''அந்த மாதிரி முக்கியமில்லாத சமாசாரம் எல்லாம் பேச அவளுக்கு நேரமே கிடைத்ததில்லை'' என்று அவன் குரலிலேயே பேசிவிட்டுக் கவீரென்று சிரித்தாள் பானுமதி.

முகத்தில் முறுவலோடு அவள் சிரிப்பதைப் பார்த்துக் கொண்டிருந்தான் அவன்.

பிறகு மெல்லக் கேட்டான். ''என்ன விஷயம் பானு?'' என்று.

சற்று திணறினாள் பானுமதி.

இவனிடம் பழைய கதை ஒன்றும் யாரும் சொல்லவில்லையே.

முதல்நாள் அவன் ரகுபதி பற்றிக் கேட்டதற்கு முகத்தில் அடித்தது போலப் பதில் கூறியதோடு சரி. அதற்கு மேல் ரகுபதி பேச்சு வந்த நினைவே இல்லை.

அவளைப் பொறுத்தவரையில் வேண்டுமென்று அவள் எதையும் மறைக்கவில்லைதான். ஆனால் அந்தப் பத்து நாட்களில் ரகுபதியின் நினைவே வரவில்லை என்று சொன்னால் நம்புவானா?

அத்தோடு அப்பா, சித்தியைப் பற்றி என்ன நினைப்பான்?

அவன் என்ன நினைத்தாலும் அதுதான் உலக மகா முக்கியம் போலவும் தோன்றியது.

ஒரு முடிவுக்கும் வரமுடியாமல் அவள் திண்டாடிய போது, ஒரு விரலால் அவள் முகத்தை நிமிர்த்தி, கனிவோடு நோக்கி, ''என்னடா?'' என்று ராஜேந்திரன் மென்குரலில் வினவவும் அவளுக்குத் தடை அவிழ்ந்து போயிற்று. எல்லாவற்றையும் கொட்டிவிட்டாள்.

குறுக்கிடாமல் முழுவதையும் கேட்டிருந்துவிட்டு, ''அவரவர் உயிர், அதைக் காப்பதோ விடுப்பதோ, என்ன செய்வது என்றாலும் அவரவர் சொந்த விஷயம். அதற்கு நீ இவ்வளவு கலங்குவானேன்?'' என்று கேட்டான் அவன்.

''என்னால் ஓர் உயிர் போவது என்றால் அதை எப்படிப் பொறுப்பது?'' என்று திருப்பிக் கேட்டாள் பானுமதி.

சித்தி சொன்னதைத்தான் இவனும் வேறு வார்த்தைகளில் சொல்கிறான். ஒருவேளை இவன் மனமும் கடினமானதுதானோ?

ஆனால் சற்றுமுன் உருகியபோது அப்படித் தோன்றவில்லையே என்று யோசனை ஓடியது அவளுக்கு.

''வேறு ஒன்றும் இல்லையே?'' என்று பார்வையில் ஒரு கூர்மையுடன் வினவினான் ராஜேந்திரன்.

''வேறு என்ன...'' என்று புரியாமல் கேட்டபடி அவனைப் பார்த்தவள் சட்டென நிமிர்ந்தாள். ''அப்படி வேறு எதுவும் இருந்திருந்தால் உங்களை மணக்க எப்படி ஒப்புக்



கொண்டிருப்பேன் என்று நினைத்தீர்கள்?'' என்றாள் ஈனக் குரலில்.

உடனேயே தணிந்து, ''கேட்டது தப்புதான்'' என்று ஒத்துக்கொண்டான் ராஜேந்திரன்.

வேகமான மூச்சுக்களோடு கடலை வெறித்தபடி அவள் பேசாதிருக்கவும், ''கோபம் தணியவில்லையா? என்ன செய்ய வேண்டும் சொல்லு. தோப்புக்கரணம் வேண்டுமானாலும் போடுகிறேன்... எப்படியும் திருமணத்திற்குப் பிறகு போடப் போகிற தோப்புக்கரணம்தான். இப்போதே பழகிக் கொண்டால் போயிற்று. போடவா?'' என்று சோகமாக அவன் கேட்கவும் பானுமதிக்குச் சட்டெனச் சிரிப்பு வந்தது.

''ஆ, இது சரி'' என்றான் ராஜேந்திரன் யோசனையோடு, ''இதற்கு விலையாக என்ன செய்யலாம்... ம்? கரெக்ட், உன் மனதில் குத்திக் குத்தித் தொல்லை செய்கிறதே, ரகுபதி என்ற நெருஞ்சி முள், அதை இனி உன் அருகே நெருங்க முடியாத தொலை தூரத்திற்குத் தூக்கி எறிந்துவிடுகிறேன். சரிதானா?'' என்றான் விளையாட்டுக் குரலிலும் ஓர் அர்த்தத்துடன்.

## 3

திருமண வேலைகள் வேகமாக நடந்தன.

மணப்பெண்ணான பானுமதியைத் தவிர மற்ற அத்தனை பேரும் ஆயிரம் வேலைகளில் அங்கிங்கென்று பறந்தனர்.

ஆனால் பானுமதி தனியே வீட்டில் தங்கும்படி ஆகிவிடாமல் ராஜேந்திரன் ஒன்று செய்தான்.

அவளுடைய பெற்றோர் எந்த ஒரு வேலையாக வெளியே கிளம்பினாலும், முக்கியமாகத் திருமணத்திற்காக



அழைக்கும் வேலைதான். பானுமதியை மாலதியின் வீட்டில் கொண்டு விட்டுவிட்டு, வீடு திரும்புபோது மீண்டும் அழைத்துச் செல்லுமாறு ஏற்பாடு செய்தான்.

பானுமதிக்கு இது இரட்டிப்பு நன்மையாக முடிந்தது.

அவள் பார்த்து வாங்க வேண்டிய கடை கண்ணி வேலைகள் முடிந்துவிட்டதால், தனியே வீட்டில் இருந்து எப்போது ரகுபதி வந்து நிற்பானோ என்று கலங்கிக் கொண்டு இராமல் பொழுது நிம்மதியாகக் கழிந்தது என்பது ஒன்று.

அத்தோடு, திருமணமான பிறகு, இதுபோல ஒரு பெரிய வீட்டை நிர்வகிப்பதற்குரிய பயிற்சி கிடைத்தது இன்னொன்று.

மாலதியின் தாயார் ரேவதியுடனேயே சுற்றி, நல்லதாகப் பட்ட அத்தனையும் கற்றுக் கொண்டாள்.

தமக்கை மகளிடம் மிகவும் அன்பு கொண்டிருந்த அந்த அம்மாளும் தடையின்றி அத்தனையும் கற்றுக் கொடுத்தாள். மகளும் கற்றுக் கொள்ளவில்லையே என்ற சின்னவருத்தம் மட்டும் உண்டு.

சாதாரண மெனு, விருந்து ஏற்பாடு, வீட்டு அலங்காரம், வண்ணப் பொருத்தங்கள், உயர் வட்டத்துப் பேச்சுமுறை என்று பயிலுவதற்கு நிறைய இருந்தும் பானுமதிக்கு இயற்கையாக இருந்த திறமையால் இந்தப் பயிற்சி எளிதாகவும் சுவாரசியமானதாகவும்கூட இருந்தது.

இடையிடையே ராஜேந்திரனும் வந்து விட்டால் பொழுது மிகவும் இனிமையாகவும் கழிந்தது. மொத்தத்தில் இனிய கனவு கண்டு கொண்டிருக்கும் உணர்ச்சிதான் அவளுக்கு.

ராஜேந்திரனின் ஆலோசனைப்படி, வீட்டிலிருந்து வெளியே, உள்ளே செல்லும்போதும், காரில் போகும்



போதும் வெளிப்புறம் பார்ப்பதைத் தவிர்த்துவிட்டதாலோ என்னவோ ரகுபதியும் அவள் கண்ணிலேயேபடவில்லை என்பதால் கொஞ்சம் நிம்மதியாக இருந்தது.

இந்நிலையில் ரகுபதி மீண்டும் தான் இருப்பதைக் காட்டிக் கொண்டான்.

ஒரு நாள் இரவு அயர்ந்த தூக்கத்தின் நடுவே யாரோ தன்னை அழைப்பதுகேட்டு பானுமதி விழித்துக் கொண்டாள்.

பானுமதி பெரிய பெண்ணான பிறகு, அவள் தனியாகப் படுக்கையறையிலும், ஹாலில் சங்கரன், கனகமும் கிராதியிட்ட வராண்டாவில் பையன்களும் உறங்குவது வழக்கம்.

தூக்கக் கலக்கத்தோடு குரலைத் தேடிய பானுமதியின் கண்பார்வை, சன்னலுக்கு வெளியே நிழலாய் நின்ற உருவத்தின்மீது படவும், பயந்து, ''சித்தி...'' என்று அழைத்தபடி அவசரமாக எழுந்தாள்.

''ஷ். சத்தம் போடாதே பானு. நான்தான் ரகு. போகதே. ப்ளீஸ் ஒரே ஒரு வார்த்தை மட்டும் கேட்டுவிட்டுபோ பானு ப்ளீஸ் பானு. இங்கே பார் என்னைப் பார்...'' என்று சிறுபென்சில் டார்ச்சைத் தன்மேலேயே அடித்துக் காட்டினான்.

அங்கே ரத்தக் கறையைக் காணவும் கலங்கிப் போய் சன்னல் அருகே ஓடிச் சென்றாள் பானுமதி. ''ரகு என்ன இது? எங்கேயும் விழுந்துவிட்டீர்களா? டாக்டரிடம் போய் முதலில் ஒரு ஊசி போட்டுக் கொள்ளுங்கள். டாக்டரிடம் போகாமல் இங்கே ஏன் வந்தீர்கள்? நான் வேண்டுமானால் அப்பாவை எழுப்பி உங்களோடு துணை வரச் சொல்லட்டுமா?'' என்று பரபரத்தாள்.

''வேண்டாம் வேண்டாம். அதைவிட வேறு வினையே வேண்டாம். ஆனால் மெல்லப் பேசு'' என்று டார்ச்சை அணைத்தான் ரகுபதி. ''பானு, இந்தக் காயம் எல்லாம்

எப்படிப் பட்டது தெரியுமா?'' என்று மெல்லிய குரலில் அவன் கேட்கவும் சட்டென நெஞ்சுக் கூடு காலியானது போல உணர்ந்தாள் அவள்.

''எ...எப்படி?'' என்றாள் தடுமாற்றத்துடன்.

''கேட்காமலேயே உனக்குத் தெரிகிறது இல்லையா?'' என்றான் அவன் விரக்தியுடன். உடனேயே, ''எல்லாம் உன் வருங்காலக் கணவன் என்று உன் பெற்றோர் வரித்திருக்கிறார்களே, அந்த முரடனின் திருக் கைங்கர்யம். இரண்டு நாட்களாக அடைத்துப் போட்டுச் சித்திரவதை செய்தார்கள். உன் கண்ணில் படாமல் இந்த ஊரைவிட்டு ஓடிப் போய்விட வேண்டுமாம். நான் ஒரேயடியாய் மறுத்துவிடவே என்னைக் கொன்றுவிடப் போவதாகச் சொன்னார்கள். எப்படியோ தப்பி ஓடி வந்தேன்'' என்று அவசர அவசரமாக விவரம் கூறினான்.

சன்னல் கம்பியை இறுகப் பற்றியிருந்த பானுவின் கைகளைப் பற்றி, ''ப்ளீஸ் பானு, நீ என்னை மணந்து கொள்ளாவிட்டால் கூடப் பரவாயில்லை. இந்த ராட்சசனை மட்டும் மறுத்துவிடு. ரோஜாப்பூ போன்ற உன் மென்மையான மனதை இந்த முரடன் குத்திக் கிழித்துவிடுவான். உன் வாழ்வே நாசமாகிவிடும் பானு. ப்ளீஸ்...'' என்று கெஞ்சினான்.

திகைத்துப் போய் நின்ற பானுமதிக்கு இவனிடம் என்ன சொல்வது என்றே புரியவில்லை.

அப்படி ஒருவனைக் கட்டிப்போட்டு அடிக்கிற பேடியா ராஜேந்திரன். அவனது வாட்ட சாட்டமான உருவத்தை நினைக்கையில் அவளால் நம்ப முடியவில்லை. ஆனால்...

''பார் பானு. இப்போது உன் கையிலும் என் ரத்தம். இதுவே நான் தப்பி வர முடிந்திராவிட்டால், என் இருதயத்திலிருந்து கொப்பளித்து வெளியேறி இருக்கும். கத்தியால் நெஞ்சில் குத்தி விடும்படியாகத்தான் அந்த அடியாட்களுக்கு



உத்தரவு. அப்படிப்பட்ட கொலைகாரனிடமா உன் வாழ்வை ஒப்படைக்கப் போகிறாய்? வேண்டாம் என்று மறுத்துவிடு...''

'கொலைகாரன்' என்ற வார்த்தையால் கையை உருவிக் கொள்ள முயன்றாள் பானுமதி. அவன் இறுகப் பற்றியிருக்கவே, ''கையை விடுங்கள் ரகு'' என்றாள்.

''முடியாது நீ முதலில் திருமணத்தை நிறுத்திவிடுவதாகச் சத்தியம் செய்...''

அவனது வாக்கியம் முடியுமுன், ''பானு, அங்கே என்ன சத்தம்? நீ தூங்கவில்லை?'' என்று அரைகுறை விழிப்பில் கனகத்தின் குரல் கேட்கவும் அவன் கப்பென அடங்கினான்.

கனகம் எழுந்து உட்காரும் அரவம் கேட்கவும், பானுமதியின் கையை விடுவித்தவன், தணிந்த குரலில், ''கவனம், பானு. திருமணத்தை எப்படியாவது நிறுத்தி விடு. நீ பிடிவாதமாய் மறுத்துவிட்டால் யாரும் எதுவும் செய்ய முடியாது...'' என்று வேகமாக உரைத்தான்.

கனகத்தின் காலடி ஓசை கேட்கவும் அரவமின்றி இருளில் மறைந்து ஒதுங்கிப் போனான்.

''என்ன கண்ணா, சன்னல்கிட்டே என்ன செய்கிறாய்?'' என்றது கனகத்தின் குரல்.

''தூக்கம் வரவில்லை...'' என்று குளியல் அறைக்குள் சென்று கதவைச் சாத்திக் கொண்டாள்.

கையை நன்றாக சோப்பு போட்டுக் கழுவியவளுக்கு, மனதில் இப்படி விலக்க முடியவில்லையே என்று இருந்தது. ஒன்று தோன்றவும், அவசரமாக வெளியே ஓடிவந்தாள்.

தன் படுக்கைக்குத் திருப்பிக் கொண்டிருந்த சிற்றன்னையிடம், ''சித்தி, நான் உன் பக்கத்தில் படுத்துக் கொள்ளலாமா இங்கே... இங்கே கெட்ட சொப்பனம் வருகிறது'' என்றாள்.

''கேட்க வேணுமா, தங்கம்'' என்று ஒப்புதல் அளித்தாள் சிற்றன்னை.



கனகம் தன் மூத்தாள் மகளை ஒருநாளும் கொடுமை என்று படுத்தியது இல்லை. ஆயினும் இந்தக் 'கண்ணு'வும் 'தங்க'மும் அதிகப்படிதான் என்பதில் மனதில் உறுத்தியபோதும், அவளது அருகாமையைப் பாதுகாப்பாக உணர்ந்து மெல்ல உறங்கிப் போனாள் பானுமதி.

காலையில் வழக்கம்போல எழுந்தவளுக்கு மீண்டும் மனம் கலங்கிப் போயிற்று.

ரகுபதி சொன்னது மெய்யாக இருக்குமா? ராஜேந்திரன் அவ்வளவு கொடியவனா?

'என் ரத்தம் உன் கையில்' என்றானே ரகுபதி?... குனிந்து கைகளைப் பார்த்த பானுமதிக்கு தூக்கி வாரிப்போட்டது. கையில் தெரிந்த அந்த லேசான சிவப்பு நிறம் மெய்தானா அல்லது அவளது மனப் பிரமையா? இரவு சோப்பு போட்டு நன்றாகக் கழுவினாளே. ரத்தம் துணியில்தான் கறை பிடிக்கும்? கையில் படுவது கழுவி விட்டால் அடையாளமே இல்லாமல் போய்விடுமே! சிவப்பு மைதானா?...

ஒருவேளை மைதானோ திருமணத்தை நிறுத்துவதற்காக ரகுபதி நாடகம் ஆடினானோ?

சற்றே மனம் தெளிவதுபோல உணர்ந்தாள் பானுமதி.

அன்று மாலையில், மாலதியோடு மேற்குப் பக்க ஹாலில் அமர்ந்து ஏதோ பேசிக்கொண்டிருந்தபோது ராஜேந்திரன் வந்து சேர்ந்தான். உள்ளே வந்தவன் மாலதியின் உற்சாகமான வரவேற்புக்குப் பதில் கூறாமல் சன்னல் புறம் சென்று அதன் கனமான திரைகளை இழுத்து மூடினான்.

''வெளிச்சம் இராது...'' என்று ஆட்சேபித்த தங்கையிடம், ''உன் அண்ணிமேல் வெயில் விழுந்து கொண்டு இருந்ததே, பார்க்கவில்லையா?'' என்றுகூறி முறுவலித்தபடி திரும்பி வந்தான்.

இப்படிப்பட்டவன் ஆள் வைத்து ஒருவனை அடித்துக் கொலை செய்வானா? இராது.



எப்படியாவது திருமணத்தை நிறுத்திவிட வேண்டும் என்று ரகுபதிதான் நாடகம் ஆடி இருக்க வேண்டும். அன்று கூட் என்ன பேச்சு பேசினான்!

சட்டெனப் பானுமதியின் மனம் நிர்மலமாயிற்று.

''ம்கூம். உங்கள் பெண்டாட்டி மேல் வெயில் பட்டால் அப்படியே கன்றிப் போய்விடுவாளாக்கும். அடேங்கப்பா, கரிசனத்தைப் பார். இனி பானு போகிற இடமெல்லாம் குடை பிடிப்பீர்களா? கூஜாவுக்குப் பதில் குடையா?'' என்று மாலதி கேலி செய்யத் தொடங்கவும் சிரிப்பும் வெட்கமுமாக மற்றது எல்லாம் மறந்தும் போயிற்று.

தேனிலவு பற்றிப் பேச்சு வந்தது அன்று.

''எங்கே, ராஜண்ணா? முன்பானால் காஷ்மீர் போய் இருக்கலாம். இப்போது சிங்கப்பூரா? 'ரிசர்வேஷன்' எல்லாம் செய்துவிட்டீர்களா?'' என்று மாலதி விசாரித்தாள்.

''ரிசர்வ் செய்தாயிற்று... மாமல்லபுரம் மட்டும்தான்'' என்றான் ராஜேந்திரன் முட்டுச் சிரிப்புடன்.

''மா...மல்லபுரமா?'' என்ற ஏமாற்றத்துடன் வாயைப் பிளந்தாள் மாலதி. ''ச்சு, என்னண்ணா இது? நான் உங்களிடம் ஒரு பாக்கெட் டி.வி.க்குச் சொல்லி அனுப்பவேண்டும் என்றிருந்தேனே''. என்று சிணுங்கினாள்.

''ஆமாண்டி உனக்கு பாக்கெட் டி.வி. உன் அண்ணனுக்கு ஜீன்ஸ்... அடுக்குவீர்களே... அவன் போவது ஹனிமூனுக்கா, உங்களுக்கு ஷாப்பிங் செய்யவா?'' என்று அதட்டினாள் மாலதியுடைய தாயார்.

''உனக்குப் பிறகு வாங்கித் தருகிறேன் ''என்று ராஜேந்திரன் கூறவும் மீண்டும் உற்சாகமுற்றாள் மாலதி...

''மாமல்லபுரம்கூட நல்ல இடம்தான். ஜாலியாகக் கடலில் குளிக்கலாம். நீ கடலில் குளிப்பாயில்லையா பானு? பயம் ஒன்றும் இல்லை. ராஜண்ணன் நல்ல நீச்சல்காரர்.

உனக்கும் கற்றுக் கொடுப்பார். ஆனால் ஒன்று...'' என்று அவள் இழுக்கவும் ''என்னது?'' என்று அக்கறையாகக் கேட்டாள் பானுமதி.

''நீச்சல் கற்றுக்கொள்ளக் காட்டேஜைவிட்டு அவ்வப்போது வெளியே வந்தாக வேண்டுமே!'' என்று பாவனையுடன் சொல்லி, அவள் கண் சிமிட்டவும் எல்லோரும் சிரிக்க, பானுமதிக்குத் தலைநிமிர முடியவில்லை.

''ச்சு...மாலி'' என்று மகளைச் செல்லமாகக் கடிந்தபடி எழுந்து சென்றாள் ரேவதி.

தனியே பார்த்தபோது ''உனக்கு சிங்கப்பூர் போக வேண்டும் என்று ஆசையாயிருக்கிறதா, பானுமதி?'' என்று வினவினான் ராஜேந்திரன்.

''நா...ன்...நான் அதையெல்லாம் நினைத்துப் பார்த்தது இல்லை...'' என்று நிஜத்தைச் சொன்னாள் அவள்.

''நல்லவேளை!'' என்றான் அவன். ''சிங்கப்பூர் நன்றாகத்தான் இருக்கும். ஆனால் அங்கெல்லாம் சென்றால் ஊர் சுற்றிப் பார்க்க வேண்டும். நமக்காக வாங்காவிட்டாலும் மற்றவர்களுக்காகவாவது ஷாப்பிங் செய்ய வேண்டும். அதற்கே நேரம் சரியாகிப் போய்விடும். அப்புறம்'' என்றவன் லேசாக முறுவலித்து, ''மாலதி சொன்னது ஒரு வகையில் சரிதான். இங்கேயானால் நாம் இருவரும் தன்னந்தனிமையில் ஒருவரை ஒருவர் அறிந்து கொள்வதிலேயே நாள் முழுவதையும் கழிக்கலாம் என்று நினைத்தேன். அதனால்தான்...'' என்று முடித்தான்.

அவன் பார்வையும் ஒரு சேதி சொல்லவே முகம் சிவக்க உள்ளே ஓடிவிட்டாள் அவள்.

திருமணம் ஒரு பெரிய மண்டபத்தில் சிறப்பாக, முறைப்படி நடைபெற்றது. அதிகாலைத் திருமணம்.

திருமணத்தின்போது ஒரு சமயத்தில் மட்டும் பானுமதி மிகவும் சங்கடப்பட்டு போனாள்.



திருமணம் முடிந்ததும் வந்திருந்த அனைவரும் அருகில் வந்து மணமக்களை வாழ்த்தி ஆசி கூறிச் சென்றனர்.

அப்படி ஆசிகூற வந்தவர்களில் இருவர் ரகுபதியுடைய தாயும் தந்தையும்.

படியேறி அவர்கள் மேடைக்கு வரும்போதே பானுமதி அவர்களைப் பார்த்துவிட்டாள்.

இருவருமே நல்லவர்கள். அவர்களிடம் மிகவும் பிரியமாகப் பழகுவார்கள். பானுமதியை மருமகளாக ஏற்கத் தங்களுக்கும் விருப்பமே என்று அவ்வப்போது குறிப்புக் காட்டியதும் உண்டு.

இப்போது இவர்களுக்கும் வருத்தமாகத்தானே இருக்கும்?

இவர்களை யார் அழைத்தது?

சித்தியாக இருக்குமோ?

பெருமை காட்டுவதாக எண்ணிச் செய்யக்கூடியவர்கள்தான். பிறர் வருத்தம் சித்திக்குப் புரிவதும் இல்லை.

மூளை ஒருபுறம் வேகமாகச் சிந்திக்க, போட்டி போட்டுக்கொண்டு அவளது விழிகள் ரகுபதியும் வந்திருப்பானோ என்று மண்டபம் முழுவதும் தேடிச்சலித்து, அப்பாடி, அவன் வரவில்லை என்று நிம்மதியுற்று மீண்டன.

ராஜேந்திரனின் கைகளைப் பற்றி, ரகுவுடைய தந்தை ஏதோ சொல்லிக் கொண்டிருக்க பானுமதியின் கன்னங்களை வருடி, திருஷ்டி முறித்தாள் அவனுடைய தாயார்.

''மிகவும் அழகாக இருக்கிறாயடி, தங்கம்... ஏதோ எங்களுக்குக் கொடுப்பினை இல்லை. ஆனால், பானும்மா, இந்த மாதிரிப் புருஷன் கிடைப்பதற்கு நீயும் கொடுத்து வைத்தவள்தான். இரண்டு பேரும் சந்தோஷமாக இருக்க வேண்டும். உனக்குத் தெரியுமா, உன் மாமாவுக்கு பம்பாயில் பெரிய வேலை கிடைத்திருக்கிறது. உன் கணவர் ஏற்பாடு



தான். அனேகமாக அடுத்த வாரம் குடி பெயர்ந்து விடுவோம். இடையில் உன்னைப் பார்க்க முடியுமோ என்னவோ. இப்போதே சொல்லிக் கொள்கிறேன் வரட்டுமா?'' என்று விடை பெற்றாள் அந்த அம்மாள்.

அவர்களைச் சாப்பிட அழைத்துச் செல்லும்படி சுந்தரிடம் கூறும்போதே பானுமதியின் மனம் வேகமாக வேலை செய்தது.

குடி பெயர்ந்து என்றால் ரகுபதியும் சேர்ந்துதானே இருக்க முடியும்? அப்படியா என்று குதூகலித்தது அவள் உள்ளம்.

கண்ணில் படாத தொலை தூரத்துக்குத் தூக்கி எறிந்து விடுகிறேன் என்றானே! சொன்னதுபோல இந்தப் பக்கமே இல்லாமல், அவர்களுக்கும் இதமாகவே விலக்கிவிட்டானே எவ்வளவு கெட்டிக்காரன் அவள் கணவன் என்று மனம் பூரித்தாள்.

ஆனால் இதே கெட்டிக்காரத்தனத்தை வெகு விரைவிலேயே, தானே மிகவும் வெறுக்கக்கூடும் என்று அவள் சற்றும் எதிர்பார்க்கவில்லை.

மாலையில் வரவேற்பும் சிறப்பாகவே நடைபெற்றது.

ஆயினும் ஐந்தரை மணிக்கே 'வரவேற்பை'த் தொடங்கியும் இரவு விருந்து முடிந்து மணமக்கள் கிளம்ப மணி ஒன்பது ஆகிவிட்டது.

தேவைப்பட்ட துணிமணி, மற்ற பொருட்களை எல்லாம் டிக்கியில் அடுக்கிய பிறகு, இருவரும் விடைபெறத் தொடங்கவும் கனகமும் முணுமுணுக்கத் தொடங்கினாள்.

''இவ்வளவு நேரத்துக்கு மேல், இவர்கள் இருவரையும் தனியாக எப்படி அனுப்புவது? சுந்தரையாவது துணைக்கு அனுப்பி வைக்கலாம்'' அவள் கூறவும் சிரித்தபடி அவளை விலக்கி அழைத்துச் சென்றாள் மாலதியுடைய தாயார் ரேவதி.



வாட்டசாட்டமாய் அருகில் நின்ற கணவனையும், பதினாறு வயது உடம்போடு ஒல்லியாக அருகில் நின்ற சுந்தரையும் சேர்த்துப் பார்க்கையில் யாருக்கு யார் துணை என்று பானுமதிக்கு உள்ளூரச் சிரிப்பு வந்தது.

அத்தோடு, தேனிலவுக்குத் துணையா என்ற ரகசியச் சிரிப்பு வேறு.

''எங்கள் ராஜேந்திரன் என்ன பச்சைக் குழந்தையா? உலகம் தெரிந்தவன். உங்கள் பெண்ணை அவன் நன்றாகப் பார்த்துக் கொள்ளுவான்.அத்தோடு இப்போது உங்களைவிட அவனுக்குத்தான் அவள் மேல் உரிமை அதிகம். அவன் மனைவி, அவன் பொறுப்பு; கவலையை விடுங்கள்'' என்று இதமாகப் பேசினாள் ரேவதி.

தலையை லேசாக அவள்புறம் சரித்து, ''கேட்டுக் கொண்டாயா? எனக்குத்தான் உரிமையாம்; நான் நில் என்றால் நின்று உட்கார் என்றால் உட்கார்ந்து... அப்புறம்...'' என்று இழுத்து மெல்லச் சிரித்தான் ராஜேந்திரன்.

காது மடல் வரை சூடாவதை உணர்ந்தாள் பானுமதி.

வலதுகால் பெருவிரலைத் தரையில் நன்றாக அழுத்தினால் முகம் சிவப்பதைத் தடுக்கமுடியும் என்று எதிலோ படித்தது நினைவு வர பலம் கொண்ட மட்டும் விரலை அழுத்தினாள்.

ஓரளவு முகச் சூடு குறைவதுபோல் தோன்றுகையில் அவளது முயற்சியைக் கண்டு கொண்டு அவன் மேலும் சிரிக்கவும் அவள் மீண்டும் சிவந்தாள்.

ஒருவழியாக எல்லோரிடமும் சொல்லிக் கொண்டு இருவருமாகக் கிளம்பி, சென்னை நகரின் போக்குவரத்து நெரிசலைத் தாண்டி, நகரின் எல்லையைத் தாண்டவும் சில்லென்ற காற்று முகத்தில் சுகமாக மோதத் தொடங்கியது.

இந்த முழுத் தனிமையில் அவள் கூச்சமாக உணரக் கூடாது என்றோ என்னவோ, ராஜேந்திரன் பேச்சுக் கொடுத்தான்.

''வரவேற்பின்போது மெல்லிசை பாடிய குழுவினர், மந்திரி வந்ததும், 'இந்திரனே வருக' என்று மாற்றிப் பாடினார்களே நீ கவனித்தாயா?'' என்று மெதுவாகச் சென்றுகொண்டிருந்த ஒரு டிரக்கை தாண்டியபடி கேட்டான்.

''ம்'' என்றாள் அவள். ''யாரோ 'காகா' என்று கூடக் கத்தி மானத்தை வாங்கினார்களே...'' என்று அவள் மேலும் நினைவு கூறவும் இருவருமாகச் சிரித்தனர்.

''பிளானடோரியம் பார்த்திருக்கிறாயா? நன்றாக இருக்கும்.

''ஊகூம் போகவேண்டும் என்று நினைத்தது உண்டு. ஆனால், தட்டிக்கொண்டே போய்விட்டது...''

''பரவாயில்லை நாம் இருவரும் சேர்ந்து பார்க்கலாம். நான் அழைத்துப் போகிறேன்'' என்றான் அவன்.

சிறிது நேரம் மவுனம் நிலவியது.

இப்படி அவன் கேட்பதற்கு மட்டும் பதில் சொல்லிவிட்டுச் சும்மா இருப்பது நாகரீகம் இல்லை, தானும் ஏதாவது தொடங்கிப் பேச வேண்டும் என்று எண்ணி, எதைப் பேசுவது என்று யோசிக்க முயன்றால் அவளது மூளை அடியோடு மக்கர் செய்தது.

சிரமப்பட்டு அவள் யோசித்துக் கொண்டு இருந்த தாலோ என்னவோ சாலையில் போக்குவரத்து மிகவும் குறைவாக இருந்தது. ஓரோர் பஸ், லாரிதான் சென்று கொண்டும் வந்து கொண்டும் இருந்தன.

இதைக் குறிப்பிட்டு, ''இது வேலை நாள் என்பதால் இப்படி எளிதாகப் போக முடிகிறது. லீவு நாள் என்றால் அவ்வளவுதான். சுற்றுலாப் பயணிகள் கூட்டம் மாமல்லபுரம் சென்று திரும்புகிற நேரம். வாகனங்கள் எல்லாம் ஒன்றை ஒன்று முந்துகிற வேகத்தில் சாலையின் இந்த ஓரம் வரை வந்து போவார்கள். நெரிசலில் நாம் மாட்டிக்கொள்வோம்...



என்றவன் லேசாகச் சிரித்து, ''இது உன் ஊர், இதைப்பற்றி நீ எனக்கு விளக்குவதற்குப் பதிலாக நான் உனக்கு சொல்லிக் கொண்டு இருக்கிறேனே'' என்று மேலும் சிரித்தான்.

சட்டெனப் பானுமதி திகைத்துப் போனாள்.

சென்னை அவளது ஊர், உண்மைதான்.

ஆனால் அவனது ஊர் எது?

டில்லியிலும், செகந்திராபாதிலும் 'ரிசப்ஷன்' வைக்க வேண்டும் என்றான், இதில் அவன் வசிக்கும் சொந்த ஊர் எது?

ஊரே தெரியவில்லை என்றால் அவனது பழக்க வழக்கங்கள், நட்புகள், விரோதங்கள், மாலதி வீடு தவிர என்ன தான் தெரியும்?

திடுமென அருகில் இருப்பவன் மகா அன்னியனாகத் தோன்றினான்.

இந்த அன்னியன் அவளுக்குக் கணவன்!

உள்ளூரப் பிறந்து பரவிய குளிரில் அவளது உடல் சிலிர்த்தது.

''என்ன?''

''ஒ...ஒன்றும் இல்ல. நீங்... நீங்கள் டில்லியிலும் செகந்திராபாதிலும் 'ரிசப்ஷன்' என்றீர்களே, இரண்டில் எங்கே அதிகம்... எது சொ... எங்கே அதிகம் தங்குவீர்கள்?'' விசாரித்தாள் அவள்.

இனியேனும் தெரிந்து கொள்ள வேண்டும் இல்லையா?

''இரண்டு இடத்திலும்தான்'' என்றான் அவன் இலகுவாக. ''பட்டி விக்கிரமாதித்தன் கதை தெரியுமா? விக்கிரமாதித்தனுடைய ஆயிரம் ஆண்டு ஆயுளை இரண்டாயிம் ஆண்டுகளாக மாற்றுவதற்காக காடாறு மாதம் நாடாறு மாதம் என்று அவர் அலைந்தாராம். நான் பணத்தைப் பெருக்குவதற்



காக இங்கும் அங்குமாக வசிக்கிறேன். இரண்டு ஊரிலுமே நமக்குத் தொழிற்சாலை, அலுவலகம், வீடு எல்லாம் இருக்கின்றன. எல்லாம் பார்த்தாக வேண்டும் இல்லையா?'' என்று விளக்கினான்.

அந்த 'நமக்கு' என்ற வார்த்தையில் மனம் அமைதியுறப் பெருமூச்செறிந்தாள் பானுமதி.

காரைச் சாலை ஓரம் கொண்டு நிறுத்தி, பின்புறம் திரும்பி, பின் சீட்டில் இருந்து ஒரு குஷனை எடுத்துக் கொடுத்தான் அவன்.

''சாய்ந்து ஓய்வு எடுத்துக் கொள். இன்று நின்று நின்று களைத்துப் போயிருப்பாய்'' என்றான் கனிவாக.

கணவனின் பரிவு நெஞ்சைத் தொட, ''உங்களுக்கும் அதே அலுப்புதானே. இப்போது காரை வேறு ஓட்டுகிறீர்கள்'' என்றாள் பானுமதி.

''ஆனால் நான் டானிக் குடித்திருக்கிறேனே. என்ன டானிக் தெரியுமா?'' என்றவன் 'ஸ்டியரிங் வீலில்' இருந்து ஒரு கரத்தை எடுத்து அவள் கையைப் பற்றி உதட்டருகே கொண்டு சென்று ''நீ'' என்று கூறி, விரல்களில் லேசாக முத்தமிட்டான். ''பார்வையால் உன்னைக் குடித்துக் கொண்டே இருந்தேன்.''

உலகம் பூந்தோட்டமாகிவிட, அவன் அருகே நகர்ந்து, கணவன் தோளில் உரிமையோடு சாய்ந்து கொண்டாள் பானுமதி.

அவனும் பக்கவாட்டில் லேசாகச் சாய்ந்து, அவள் தலைமேல் கன்னம் ஒட்டினான்.

'என்ன சுகம்' என்று பானுமதி மெய்மறந்த அந்த வேளையில், அந்த சத்தம் கேட்டது.

வேகமாக வந்து கொண்டிருந்த ஒரு பழைய மோட்டார் சைக்கிளின் படபட சத்தம்.



விழிகளை உயர்த்தி, பின்புறம் காட்டும் கண்ணாடியில் பார்த்தபோது அதிலிருந்து அவளை வெறித்தது ரகுபதியின் முகம்.

தூக்கிவாரிப் போட்டுக் கொண்டு நிமிர்ந்து, விலகி அமர்ந்தாள் பானுமதி.

ராஜேந்திரன் கண்ணிலும் அதே காட்சி பட்டுவிட, ''இடியட்'' என்றான் அவன் அடங்கிய ஆத்திரத்துடன்.

தான் வேறு எங்கோ போவதற்காக வரவில்லை என்று ரகுபதி உடனேயே காட்டிக் கொண்டான்.

போக்குவரத்து விதிகளைப் பற்றிய அக்கறையே இல்லாதது போல வேகம் எடுத்து இடப்புறமாக காரை முந்துவது போல வந்தவன், பானுமதி அருகே வந்ததும் காரின் வேகத்திலேயே பைக்கை ஓட்டியபடி அவளிடம் பேசினான்.

பேச்சு சமூக நெறிகளைப் பற்றியும் அவனுக்கு அக்கறை இல்லை என்று காட்டியது.

''பானு'', என்று கூவி அழைத்து, ''அன்று அவ்வளவு சொன்ன பிறகும் மடத்தனமாக வாழ்க்கையைப் பாழடித்துக் கொண்டு விட்டாயே. இப்போதும் குடி முழுகி விடவில்லை. கார் சாவியைத் திருப்பி இஞ்சினை 'ஆஃப்' செய்துவிடு. கார் நின்றதும் இறங்கி வந்து என் பின்னே ஏறிக்கொள். நான் உன்னைச் சொர்க்கத்துக்கு அழைத்துப் போகிறேன்'' என்று அறிவித்தான்.

இறுகிப்போய் அமர்ந்திருந்த மனைவியை ஒருதரம் நோக்கிவிட்டு ''முட்டாள்'' என்று சீறினான் ராஜேந்திரன். ''இடது பக்கம் ஒட்டி ஒட்டி வராதேடா மடையா, இடிபட்டு விழுந்து செத்துவிடுவாய்'' என்று ஆத்திரத்துடன் உறுமினான்.

''இடித்துக் கொன்றுவிடுவேன் என்று மிரட்டுகிறாயா? கொலைகாரப் பாவி, இதற்குப் பயந்து ஓடுவதற்கு வேறு

ஆளைப் பார். பானு, கேட்டாயல்லவா? உன் முன்னிலையிலேயே கொன்று விடுவதாக மிரட்டுகிறான். நீ நேரடியாகப் பார்த்து விடுவாய் என்கிற பயம் மட்டும் இல்லையென்றால் மோதிக் கொன்றே விட்டிருப்பான். இருந்திருந்து இந்தக் கொலைகாரனுடனா வாழப் போகிறாய்? வேண்டாம், இறங்கிவிடு. இறங்கி என்னிடம் வந்துவிடு...''

''யூ... யூ ராஸ்கல்'' பல்லைக் கடித்து, 'ஆக்சிலேட்டரை' அழுத்தி மிதித்தான் ராஜேந்திரன்.

கார் மின்னலென விரைந்தது.

விடாமல் ரகுபதியும் முழு வேகத்தில் தொடர்ந்தான்.

அவ்வப்போது முன்னேயும், எதிரேயும் வேறு வண்டிகள் குறுக்கிடும்போது வேற வழியின்றி ராஜேந்திரன் வேகத்தைக் குறைக்க வேண்டியிருந்தது.

உடனே பக்கவாட்டில் வந்து 'பானு, பானு' என்று தன் தொல்லையைத் தொடங்கினான் ரகுபதி.

அவனுக்கு இடம் கொடாமல் வெகுவாக இடப்புறம் ஒதுக்கி ஓட்டலாம் என்றால், ரகுபதியின் குற்றச்சாட்டை மெய்யாக்குவது போல இடித்துவிட நேருமோ என்று ராஜேந்திரன் தயங்கினான்.

எதிரே வந்த பஸ் வெளிச்சத்தில், பானுமதியின் கீழ் உதட்டில் பற்கள் பதிந்த இடத்தில் ரத்தக் கசிவைக் காணவும் ராஜேந்திரன் பொறுமை இழந்தான்.

''இவன் இன்று என்னிடம் உதை வாங்காமல் போகப் போவது இல்லை'' என்று காரை ஓரமாக நிறுத்தி இறங்கினான்.

''வேண்டாம் வேண்டாம்'' என்று பதறி, அவனது கைகளைப் பற்றி நிறுத்த முயன்றாள் பானுமதி.

''விடு பானு இன்று இவனுக்கு ஒரு பாடம் கற்பித்தே ஆக வேண்டும். இந்த ராஜேந்திரன் யார் என்று அவனுக்குப்



புரிய வைத்துவிட்டு வருகிறேன்'' என்று மனைவியின் பிடியை விலக்கினான் ராஜேந்திரன்.

அவன் காரிலிருந்து இறங்குவதைக் கண்டதும், அவசரமாக வண்டியை ஓட்டிச் சென்று ஓர் இருபது மீட்டர் தாண்டி அதை நிறுத்தித் திரும்பிப் பார்த்தான் ரகுபதி.

ஒரு விநாடி யோசித்துவிட்டு, சாலையின் விளிம்பை ஒட்டி, ரகுபதியை நோக்கி நடக்கத் தொடங்கினான் ராஜேந்திரன்.

ராஜேந்திரன் கிட்டத்தட்ட பாதி தூரம் கடந்திருப்பான்.

சரேலென பைக்கைத் திருப்பி, வெறி கொண்டவன் போலக் கண்கள் பளபளக்க, முழு வேகத்துடன் ராஜேந்திரனை நோக்கி பைக்கை ஓட்டி வந்தான் ரகுபதி.

ஓரளவு விஷயம் புரிந்து, ''அய்யோ!'' என்று கார் கதவைத் திறந்து கொண்டு பானுமதி இறங்க, ராஜேந்திரன் அசையாமல் நின்றான்.

''செத்து ஒழி'' என்று முணுமுணுத்தபடி, வேகம் குறையாமல் ரகுபதி வர, கடைசி விநாடியில் மின்னல் விரைவுடன் ராஜேந்திரன் நகர்ந்து கொள்ளவும், சமாளிக்க முடியாமல் பைக் சாலையைவிட்டு இறங்கியது.

சாலையின் பக்கவாட்டுப் பள்ளத்தில் சரிந்துவிட்ட பைக்கை சிரமத்துடன் தூக்கி நிறுத்த முயன்ற ரகுபதியிடம் ''இனியேனும் உயிரோடு வீடு போய்ச் சேரப் பார்'' என்று உறுமிவிட்டுத் திரும்பினான் ராஜேந்திரன்.

அதற்குள் அருகில் வந்துவிட்ட பானுமதி ''என்ன ஆயிற்று?'' என்று பயத்துடன் வினவினாள்.

''இன்னமும் உயிரோடுதான் இருக்கிறான்'' என்று கடுமையான குரலில் கூறி, அவளைக் கையைப் பற்றித் திருப்பிக் காருக்கு நடத்திச் சென்றான் அவள் கணவன்.

மறுக்கமாட்டாமல் உடன் சென்றபோதும், ''அவருக்குப் பெரிதாக அடி ஒன்றும்...'' என்று திரும்பிப் பார்க்க முயன்று தயங்கினாள் பானுமதி.



''ஒன்றும் இல்லை. கொஞ்சம் சிராய்த்திருக்கும் அவ்வளவுதான். அதோ, பைக்கைத் தள்ளிக்கொண்டு மேலே வருகிறான் பார்'' என்று ராஜேந்திரன் சிடுசிடுக்கவும் மேலே பேசாமல் காரில் ஏறிக்கொண்டாள் பானுமதி.

ஆனால் முதலில் இருந்த ஆனந்தம் கலைந்துவிடப் பேசாமல் மவுனம் சாதித்தாள்.

அவனும் பேசாமலே காரை ஓட்டிக் கொண்டிருந்தான்.

எவ்வளவு இனிமையாகத் தொடங்கிய தினம்!

யோசனையில் இருந்த ராஜேந்திரன் திடுமென, ''மடையன்'' என்றான்.

''எ...என்ன?''

''சத்தம் கேட்கவில்லை? பின்புறம் பார். அந்த வைக்கோல் போர் நாய்தான்'' என்றான் அவன் கடுமையான குரலில்.

பதில் சொல்லத் தோன்றாமல் வழக்கம்போல் உதட்டைக் கடித்தவள், பழைய காயத்தின் மீது பற்கள் பட்டுவிடவே ''ஸ்...ஸ்'' என்றாள்.

''அந்தப் பக்கம் கண்ணாடியை உயர்த்தி 'லாக் செய்' என்று உத்தரவிட்டான் ராஜேந்திரன்.

அவள் செய்து முடிக்கவும், ''க்ளவ் காம்பார்ட்மென்டில் சில புத்தகங்கள் இருக்கும் ஒன்றை எடுத்துப்படி'' என்று இடது கையால் தலைக்கு மேல் ஒரு பல்பை அவளுக்குச் சரியாகத் திருப்பி வைத்தான்.

''சில சமயங்களில் இரவுப் பயணங்களில் டிரைவரை ஓட்டச் சொல்லிவிட்டு ஃபைல் பார்ப்பேன். அதற்காக அமைத்த விளக்கு'' என்றவன் அவள் சும்மா இருப்பதைக் காணவும், ''புத்தகத்தைப் படித்துத்தான் ஆகவேண்டும் என்பது இல்லை. பானுமதி படிக்கிற மூடில் நீ இப்போது இல்லை என்பது எனக்கும் தெரியும். படிக்கிற மாதிரி பாவனை



செய்தால், அவன் பேச்சை நீ விரும்பவில்லை என்று புரிந்து அவன் திரும்பிச் சென்று விடக்கூடும் இல்லையா? அதற்காகத்தான்'' என்று விளக்கினான்.

மறுபேச்சின்றி புத்தகத்தை எடுத்து வெகு தீவிரமாகப் படிப்பது போலப் பாவனை செய்தாள் அவள்.

ரகுபதி மறுபடி அவள் புறம் வந்தான். ஏதோ கத்திப் பேசினான் மூடப்பட்டிருந்த கண்ணாடியைத் தட்டினான்.

ஊகூம் பானுமதி விழியாலும் ஏறெடுப்பதாக இல்லை. நாளையே அதில் பரீட்சை போலப் புத்தகத்தை அழுத்தப் பற்றி அதிலேயே பார்வையைப் பதித்து அசையாமல் வீற்றிருந்தாள்.

ஆனால் புத்தகத்தை இறுகப் பற்றியிருந்ததால் அவள் கையில் நரம்பு எடுப்பதைக் காணவும் ராஜேந்திரனுக்கு ஆத்திரம் மிகுதியாயிற்று.

''ராஸ்கல், இவனுக்கு ஒருவழி செய்தே ஆகவேண்டும்'' சினத்துடன் முணுமுணுத்தவனுக்குச் சட்டென ஓர் ஐடியா உண்டாயிற்று.

முன்னே செல்லும் ஏதாவது ஒரு பஸ். அல்லது லாரியை 'ஓவர் டேக்' செய்து, அதை ஒட்டியபடி அந்த வாகனத்தின் வேகத்திலேயே, அதன் முன்னாலேயே சென்று கொண்டிருந்தால் ரகுபதியால் இந்த மாதிரி இடப்புறம் புகுந்து பானுமதியைத் தொல்லை செய்ய முடியாதில்லையா?

என்னதான் கிறுக்குத்தனமாக நடந்துகொண்டாலும் பஸ், லாரியைக்கூட இடப்புறமாய் முந்தும் துணிச்சல் ரகுபதிக்கு வராது என்றே ராஜேந்திரனுக்குத் தோன்றியது.

மாமல்லபுரம் திரும்பிவிட்டால், அங்கு காட்டேஜை அடைந்ததும் அங்குள்ள ஆட்களைக் கொண்டே ரகுபதியை விரட்டி விடலாம்.

முன்னே ஒரு லாரியும் பஸ்சும் அடுத்தடுத்து சென்று கொண்டிருப்பதைக் காணவும் ராஜேந்திரன் உடனே தன் திட்டத்தை அமுலாக்கினான்.

ஹாரனை அழுத்தியபடி, வேகம் எடுத்து பஸ்சையும் லாரியையும் முந்தினான். மீண்டும் இடப்புறம் திரும்பி லாரியின் முன்னே உரிய இடத்தில் சேர்ந்து ஓட்டத் தொடங்கினான்.

ஆனால் அவன் எதிர்பாராத ஒன்று.

அவனது காருக்கும் மற்ற வாகனங்களுக்கும் இடையே இருந்த சிறு இடைவெளியில் முழுவேகத்தில் பைக்கை ஓட்டிக் கொண்டு மூளை உள்ள ஒரு மனிதன் வரக்கூடும் என்று அவனுக்கு எண்ணத் தோன்றவில்லை.

ஆனால் ரகுபதி வந்தான்.

ராஜேந்திரன் பஸ், லாரியை முந்திச் சென்று இண்டிகேட்டரைப் போட்டுக் கொண்டு காரை இடப்புறம் ஒடித்தபோது அவனும் திரும்பினான்.

அது வேண்டுமென்று நடந்ததோ, அல்லது ஓட்டி வந்த ரகுபதியின் கணக்கீட்டில் நேர்ந்த தவறுதானோ- அந்த விநாடியில் அவன் மனதில் இருந்ததை யாரால் அறிய முடியும்? வந்த வேகத்தில் பைக்கின் முன் டயர் திரும்பிக் கொண்டிருந்த காரின் பக்கவாட்டில் பட்டு, வேக விதிகளின் படி எதிர்புறம் தள்ளப்பட்டது.

லாரி டிரைவர் முழு அளவில் பிரேக்கைப் பயன்படுத்தியும் கூட அந்த விபத்தைத் தடுக்க முடியவில்லை.

# 4

இடையில் நின்றுபோன அலறலோடு, இரும்பு நொறுங்கும் சத்தமும், போக்சின் கிறீச்சிடலும் கேட்க, காரை நிறுத்திவிட்டு, ''நீ காரிலேயே இரு'' என்று மனைவியைப் பணித்துவிட்டு இறங்கி ஓடி வந்தான் ராஜேந்திரன்.

ரகுபதியின் நிலையைப் பற்றி சொல்வதற்கு டாக்டரின் தேவை இருக்கவில்லை.



மிரண்டு போயிருந்த லாரி டிரைவர் இறங்கி நின்று, ''அய்யோ! என் தப்பு இல்லீங்க. உங்களுக்கு இடம்விட்டு நான் ஸ்பீடு குறைத்துதான் வந்தேனுங்க. இந்தாளு திடீர்னு பூந்துட்டான்'' என்று திரும்பத் திரும்பச் சொல்லிக் கொண்டிருந்தான்.

லாரியின் 'சடன் பிரேக்'கால் அதை ஓட்டித் தொடர்ந்து வந்து கொண்டிருந்த பஸ்ஸும் லாரியின் மேல் லேசாக மோதி நின்றிருந்தது.

அதிலிருந்தும் சிலர் இறங்கி வந்திருந்தனர்.

''ராத்திரிக்குள்ள நான் செங்கல்பட்டில் இருக்க வேண்டும். இனி எங்கே?'' என்று தன் குறையைப் புலம்பினார் ஒருவர்.

''நான் பார்த்துக் கொண்டே இருந்தேன். என்ன வேகம்? என்னதான் தலை போகிற காரியம் என்றாலும், முன்னே இண்டிகேட்டர் போட்டு திரும்புவது கூடவா தெரியவில்லை. இப்போது தலையே போய்விட்டதே'' என்று தன் சொல்வளத்தைக் காட்டிக் கொண்டார் ஒருவர்.

ராஜேந்திரனின் தோற்றம் அவனுக்கு மரியாதையைத் தேடித் தர, ''சார், நீங்கள் தான் எங்கேயானும் பக்கத்து போலீஸ் ஸ்டேஷனில் ரிப்போர்ட் செய்து ஏதாவது செய்ய வேண்டும்'' என்று கேட்டுக் கொண்டார் பஸ்சின் டிரைவர்.

''மகாபலிபுரம் திரும்புகிற இடம் பக்கத்தில்தான். அங்கேயே சொல்லலாம்'' என்று யோசனை கூறினார் ஒருவர்.

''கொஞ்சம் சிரமத்தைப் பாராமல் செய்யுங்கள் சார்'' என்று கேட்டுக் கொண்டார் மற்றொருவர்.

''அய்யா, அய்யா, என்மேல் தப்பு இல்லைங்க. அதைக் கொஞ்சம் அழுத்திச் சொல்லுங்கய்யா'' என்று கெஞ்சினான் லாரி ஓட்டி வந்தவன்.

''உனக்காகச் சொல்ல நாங்கள் இத்தனை பேர் இருக்கிறோம். கவலைப்படாதே. முதலில் அவர் போய் ஏதாவது

சீக்கிரமாக பஸ்ஸை எடுக்க வழி பண்ணட்டும்'' என்றார் செங்கல்பட்டுக்காரர்.

ஒப்புக் கொண்டு காருக்குத் திரும்பி வந்தான் ராஜேந்திரன்.

காரிலேயே இருக்குமாறு கூறிய ராஜேந்திரன் உத்திரவுக்கு தேவையே இருக்கவில்லை. விரும்பினால் கூட இறங்க மாட்டாமல் பானுமதியின் கை கால்கள் துணியாயத் துவண்டிருந்தன. கையிலிருந்து நழுவி விழுந்த புத்தகத்தைக்கூட எடுக்கத் தோன்றாமல் சிலையாக அமர்ந்திருந்தாள்.

காரில் ஏறி அமர்ந்த ராஜேந்திரனுக்கு மனைவியின் நிலை புரிந்தது.

ரகுபதியை உள்ளூர சபித்தவன், பானுமதியின் கண்கள் கேட்ட கேள்விக்கு, ''செத்து விட்டான்'' என்று சுருக்கமாகப் பதில் கூறி, உள் விளக்கை அணைத்துவிட்டுக் காரை எடுத்தான்.

சில நிமிடங்கள் மௌனமாகக் காரை ஓட்டினான். ஆனால் பேச வேண்டியிருந்ததே. அதிலும் காவல் நிலையத்தை அடையுமுன் அவளிடம் பேசி முடிக்க வேண்டியிருந்தது. லேசாகத் திரும்பி, ''பானும்மா...'' என்று அழைத்தான்.

அதிர்ந்து போயிருந்த பானுமதியின் காதுகளில் கணவனின் அழைப்பு விழவேயில்லை.

ஐந்து நிமிடத்துக்கு முன் ஓட்டி ஓட்டி வந்து கெஞ்சியவன் செத்துவிட்டான் என்றால் எப்படி ஒத்துக்கொள்வது?

சின்ன வயதிலிருந்து அவளுக்கு என்றால் விழுந்து விழுந்து செய்வான் ரகுபதி.

படிக்கும்போது கணக்கு சொல்லித் தருவது... எவ்வளவு இனிய நண்பனாக இருந்தான்.

பிறகு வேறுவிதமான பேச்சு வந்த பிறகுதான் அவள் ஒதுங்கிக் கொண்டதுகூட.

ஆனால் இவ்வளவு ஆசை வைத்திருப்பான் என்று அவள் எண்ணவே இல்லையே!



எல்லாம் இந்த சித்தியால் வந்தது. பானு பெயரைச் சொல்லிச் சொல்லியே அவனை ஓசி வேலை வாங்கி அவனுக்கு ஆசைகாட்டி விபரீதத்தை வளர்த்துவிட்டாள். ஆனாலும்...

''பானுமதி...'' என்று உரக்க அழைத்து அவளது கையைப் பற்றினான் ராஜேந்திரன்.

தூக்கிவாரிப் போட்டவளாகக் கையை இழுத்துக் கொண்டாள் அவள். பின்னரே அவன் அழைத்தது புரிந்தவளாக, ''எ...என்ன?'' என்று திகைத்தாள்,

ஓர் ஆத்திரப் பெருமூச்சுடன் தன்னை சமனப்படுத்திக் கொண்டவனாக ராஜேந்திரன் சொன்னான். ''பார் பானுமதி, இந்த விபத்தைப் பற்றி போலீசுக்குச் சொல்ல வேண்டும். அவன் வீட்டாருக்குத் தெரியப்படுத்த வேண்டும். போஸ்ட் மார்ட்டம்... மேலும் இது தொடர்பான பல வேலைகள் இருக்கின்றன. பார்த்து முடிக்க நேரம் ஆகும். அதுவரை... அதுவரை நீ அங்கே உங்கள் வீட்டுக்குப் போய் இருக்கிறாயா? அல்லது எங்கள் சித்தி வீட்டுக்குப் போகிறாயா? மாலதியோடு இருக்கலாம்.''

எதுவும் முடியாது என்பது போலத் தலையசைத்தாள் அவள்.

''இரண்டும் வேண்டாமா? பின்னே எங்க... இங்கே காட்டேஜில் தனியாக இருக்க முடியாது இல்லையா? அல்லது அவர்கள் யாரையாவது உனக்கு இங்கே துணை வரும்படி ஏற்பாடு செய்யட்டுமா?''

இவர்களில் யார் வந்தாலும் யாரைச் சந்தித்தாலும், இருந்திருந்து திருமண இரவு இப்படி ஆயிற்றே என்றுதான் அங்கலாய்ப்பார்கள். அதைத் தாங்கிக் கொள்ள அவளால் முடியாது.

அல்லது ரகுபதி பற்றிப் பேசுவார்கள். அதையும் அவளால் சகிக்க முடியாது.



ஊகூம். ஒருவரும் வேண்டாம்.

ரகுபதி செத்தால் இந்தியாவுக்கு ஓர் ஆள் சோறு மிச்சம் என்று சித்தி சொன்னார்களே, அய்யோ! அப்படியே ஆகிவிட்டதே!

பொறுமையை இழுத்துப் பிடித்துக் கொண்டு, ஒரு சிறு குழந்தையாட்டம் பேசுவது போலச் சொன்னான் ராஜேந்திரன். ''பார் பானு, இங்கே... இது பற்றிய வேலைகளை எல்லாம் ஒரு வழியாக முடித்துவிட்டு நான் திரும்பி வர வெகு நேரம் ஆகிவிடக்கூடும். அதுவரை எப்படித் தனியாக இருப்பாய்? மாலதி வேண்டாம் என்றால் உன் தம்பிகளையாவது வரவழைக்கிறேன்.''

அவனது அந்த 'ஒருவழி' என்ற வார்த்தை ஏனோ அவள் மனதை உறுத்தியது.

ஆனால் ஏன்?

கலங்கிய மனதுக்கு ஒன்றும் புரியாமல் ஒரே தவிப்பாக இருந்தது. ஏன்...? அவள் யோசிக்க வேண்டும். தீவிரமாக யோசித்தாக வேண்டும். சொந்த பந்தம் என்று யார் வந்தாலும் அது முடியாது. வேண்டாம்...

''பானு...''

மீண்டும் அவன் தொடங்கவும், பிரயாசையுடன் தொண்டையை விழுங்கிக் கொண்டு, ''நோ...ப்ளீஸ், நான் தனியாகவே இருக்கிறேன். யாரும் வேண்டாமே.

ப்ளீஸ்...'' என்றாள் கெஞ்சுதலாக.

அந்த நேரத்தில் வேறு யாரையும் பார்த்துப் பேசப் பிரியமற்று அவள் இருக்கும் நிலை அவனுக்குப் புரிந்தது. முடிந்தால் இப்போது தனிமையில் இருப்பதைத்தான் அவனும் விரும்புவான். ஆனால் அவனுக்கு வழியில்லையே?

காவல் நிலையத்தில் ஒரு வார்த்தை சொல்லிவிட்டு, பானும்தியைக் காட்டேஜில் கொண்டுவிட்டான். ''மின்விசிறியை ஓடவிட்டுவிட்டு முடிந்தால் தூங்கப் பார்... சாவி



என்னிடம் இருக்கட்டும். நான் திரும்பிவரத் தாமதம் ஆகும். அதனால் உன்னை எழுப்பவேண்டாம் பார். உனக்கு வெளியே வரவேண்டும் என்று இருந்தால் அடுத்த கதவைப் பயன்படுத்திக் கொள்...'' என்றவன் சற்றுத் தயங்கி நின்றான்.

அவளிடமிருந்து சிறுகுறிப்பு கிடைத்திருந்தாலும் அவளை அணைத்து ஆறுதல் படுத்தியிருப்பான். ஆனால் அவள் சிலையாக நிற்கவே, ஒருதலையசைப்புடன் சென்றுவிட்டான்.

தூக்கத்தில் நடப்பவள் போல நடந்து சென்று அங்கிருந்த சோபாவில் அமர்ந்தாள் பானுமதி.

ரகுபதியுடைய தாயாரின் நினைவு வந்தது.

அன்று காலையில் ஆனந்தமாகச் சிரித்தானே! இந்தச் சேதி கேட்கும்போது வயிறு கொதிக்காதா?

திடுமென நிமிர்ந்தாள் அவள்.

ரகுபதியின் வீட்டுக்கு எப்படித் தெரியப்படுத்துவார்கள்? அவர்கள் வீட்டு விலாசம் யாருக்கும் தெரியாதே என்று யோசிக்கும்போதே ராஜேந்திரனுக்குத் தெரிந்திருக்கும் என்று தோன்றியது.

பம்பாயில் பெரிய வேலைக்கு ஏற்பாடு செய்தவனுக்கு வீடு இருக்கும் இடம் தெரியாமலா போகும்?

அன்று சொன்னதைப் போலவே கண்ணில் படாத தூரத்துக்கு விலக்கி விட்டானே, எவ்வளவு கெட்டிக்காரன் என் கணவன் என்று அன்று காலையில் அவளும்தான் பூரித்திருந்தாள்.

விலுக்கென்று விறைத்துப் போனாள் அவள்.

கண்ணில்பட முடியாத தொலை தூரத்துக்குத் தூக்கி விடுவதாகச் சொன்னானே, அந்தத் தொலை தூரம் பம்பாய் அல்லவோ? மறு உலகமோ?

ராஜேந்திரனுடைய அந்த 'ஒருவழி' ஏன்? உறுத்தியது, என்பது இப்போது புரிந்தது.

'இவனுக்கு ஒருவழி செய்தே ஆகவேண்டும்' என்று அவன் சொல்லி ஐந்து நிமிடங்களுக்குள் ரகுபதி உயிரிழந்து போனானே...

அப்படியானால்...

சட்டென மூச்சு விடுவதற்குக் காற்றே இல்லாததுபோல உணர்ந்தாள் பானுமதி.

தன் மனம் என்ன நினைக்கிறது என்று புரியவும் பானுமதி கொஞ்ச நேரம் பிரமித்துப் போய் அமர்ந்து இருந்தாள்.

ஆனால் அந்த மனம் நினைப்பது தவறு என்று தோன்றவும் இல்லை. அந்த வழியில் நினைப்பதை நிறுத்தவும் முடியவில்லை.

மாறாக அந்த நினைப்புக்கான ஆதாரங்கள் ஓடோடி வந்தன.

இந்த ராஜேந்திரன் முதலில் ரகுபதியைச் சந்திக்கும் வாய்ப்பே இல்லாது பண்ணவில்லையா? மாலதியின் வீட்டுக்குப் போய்விட்டதால் சந்திக்க நேரவில்லை என்று அவளை நம்ப வைத்துவிட்டு, அவனைப் பிடித்துப் போய் அடைத்து வைத்திருக்கிறானே! ரகுபதி தப்பி ஓடி வந்த பிறகு எச்சரிக்கையோடு இருந்ததால் மீண்டும் பிடிக்க முடியவில்லை. அதனால் பம்பாய் வேலையை நீட்டி ஆசை காட்டியிருக்கிறான். ஒன்றுக்கும் மசியாமல் மீண்டும் வந்து நிற்கவும் 'ஒருவழி' செய்துவிட்டான்.

முதலில் இருந்தே இந்த ராஜேந்திரன் நடவடிக்கை ஒன்றும் சரியில்லைதான்.

பார்த்து நாலுநாளில் அப்பாவுக்கு பிடித்தமான வேலை, தம்பிகளுக்கு டீ ஷர்ட், சித்திக்கு நவரத்தின நகை செட், அன்பளிப்பாம் அன்பளிப்பு. லஞ்சம் பக்கா லஞ்சம்.



அவளுக்கும் தான் எத்தனை அணிமணிகள்!

லஞ்சம் ஒரு பக்கம் பிளாக்மெயில் செய்துவிட்டு தப்பு இல்லை என்று வாதம் வேறு.

ராஜேந்திரனின் குணம் எப்போதும் மோசம்தான். ஆனால் கொஞ்சமும் யோசிக்கத் தோன்றாமல் அவள் மூளைதான் மழுங்கிக் கிடந்திருக்கிறது!

அன்று ரத்தம் வழிய வந்து மன்றாடினானே, அப்போதேனும் விழிப்புத் தட்டியிருக்க வேண்டாம்? அந்த ரத்தத்தின் மேலேயே சந்தேகப்பட்டாளே!

அந்தப் பாவத்துக்குத் தண்டனை, கொலைகாரன் மனைவி என்கிற இந்த நிலைமை.

வேண்டும். அவளுக்கு நன்றாக வேண்டும்.

அவளுக்குச் சரியான தண்டனைதான் என்று மனம் ஒப்புக் கொண்டாலும் கூடவே தவியாய்த் தவித்தது.

இப்போது என்ன செய்வது? இனியென்ன செய்ய முடியும்? ஆயிரம் பேர் நடுவில், இவ்வளவு கனமான சங்கிலியில் தாலியைச் சேர்த்துக் கட்டி வைத்திருக்கிறானே, இந்தத் திருமணத்தை என்ன செய்ய முடியும்?

ஒரு கொலைகாரனோடு வாழ முடியாது என்று சட்டப் பூர்வமாய் ஒரு பெண்ணால் மணவிலக்கு பெற முடியாதா?

இது பற்றிய சட்டங்களை அறிந்து வைத்திராததால் முடியுமோ, முடியாதோ என்று சற்றுக் கலங்கினாள் பானுமதி.

அது முடிகிறதோ இல்லையோ, முதலில் இந்த இடத்தை விட்டு வெளியேறியாக வேண்டும். நேரே வீட்டுக்குப் போய்விட்டால் அங்கே...

அவசரமாக எழத் தொடங்கியவளின் கால்கள் உடனே தொய்ந்தன

நவரத்தின செட்டைக் கழற்றாமல் அணிந்திருக்கும் சித்தி-திருமணத்தின் போது கூட ஏதேதோ கொடுத்தான்



என்று ஞாபகம். அதையெல்லாம் ஆசை ஆசையாக வாங்கிக் கொண்டவள்-அவற்றைத் தந்தவனைப் பிரிந்து மகள் வந்தாள் என்றால் வீட்டின் உள்ளே விடுவாளா?

உற்சாகமாக வேலைக்குச் செல்லும் தந்தைகூட அவளுக்கு ஆதரவாக என்ன சொல்லக் கூடும்? முதலில் ராஜேந்திரன் கொலைகாரன் என்பதையே அங்கே யாரும் ஒத்துக் கொள்ளப் போவதுமில்லை. அவளை வீட்டில் வைத்துக் கொள்ளப் போவதுமில்லை.

வேறே போக்கிடம்?

ஒருவரும் இல்லாதவள்போல ஏதாவது பெண்கள் விடுதியில் தங்கலாம் என்றால் அவளிடம் அதற்குத் தேவையான பணமும் இல்லை. பணத்தை ஈட்டும் வழியும் இல்லை.

பின்னே, ஒரு கொலைகாரன் மனைவியாக, அவனுக்குப் பிள்ளை பெற்றுப் போட்டுக் கொண்டு வாழ்வதுதான் அவள் விதியா? *சீச்சீ.*

வெறுப்பும், வேதனையுமாக அடக்கமாட்டாமல் அழத் தொடங்கினாள் பானுமதி.

திருமண அலுப்போடு, இந்த மன உளைச்சலும் சேர்ந்து கொள்ள, அழுது அழுது அயர்ந்துபோய் அப்படியே உறங்கி விட்டாள் அவள்.

வெகுநேரம் கழித்து, சுமார் இரண்டு மணி அளவில் உடலும் மனமும் களைத்தவனாக ராஜேந்திரன் திரும்பி வந்தபோதும் அவள் அப்படியேதான் இருந்தாள்.

சோபாவின் மூலையில் சுருட்டி மடக்கி அமர்ந்தபடி ஒரு குழந்தைபோல உறங்கிய மனைவியைப் பார்த்தபடி சற்று நேரம் நின்றான் அவன்.

அருகில் சென்று, அவளது உறக்கம் கலைந்து விடாமல் கவனத்துடன் மெல்லத் தூக்கிக் கொண்டு படுக்கை அறைக்குள் சென்றான்.



அதே கவனத்துடன் மெல்ல அவளைக் கட்டிலில் கிடத்த அவன் முயன்றபோது பானுமதியின் துயில் லேசாகக் கலைய, கணவனின் கதகதப்பு இதம் தர, வாகாக அவனிடம் ஒண்டினாள்.

சட்டெனக் குனிந்த ராஜேந்திரனின் உதடுகள் மனைவியின் கழுத்தில் புதைந்தன.

பானுமதியின் தூக்கம் வேகமாகக் கலையலாயிற்று.

தன் நிலையை உணர்ந்தவள், சட்டென அவனை உதறிக் கொண்டு விலகி நின்றாள்.

''பானு...'' என்று அழைத்தபடி மனைவியை நோக்கி ஓர் எட்டு எடுத்து வைத்தவன், அவளது வெறித்த பார்வையைக் கண்டதும் நின்று, ''என்ன?'' என்று வினவினான்.

சும்மா சாதாரணமான நிலையில் அவள் எப்படிப் பேசியிருப்பாளோ...அலுப்பும், களைப்பும் அரைகுறை விழிப்புமாய் இருந்த அந்த நிலையில், ''ஒரு கொலைகாரன் கை என்மேல் படக்கூடாது'' என்று பட்டெனச் சொல்லிவிட்டாள் பானுமதி.

அந்த மாதிரி, திடுமெனப் போட்டு உடைக்க வேண்டும் என்று பானுமதியும் திட்டமிட்டிருக்கவில்லை.

ஆனால் ரகுபதியின் சாவுக்குக் காரணமாக இருந்ததோடு, இவ்வளவு நேரமும் ரகுபதியின் மரணம் தொடர்பான வேலைகளில் பெரிய மனிதன் போல ஈடுபட்டிருந்துவிட்டுத் திரும்பியவன் நேராக உள்ளே வந்து தன்னை முத்தமிடத் தொடங்கியதை அவளால் சகிக்க முடியவில்லை.

அலுப்பும், களைப்பும் அரைவிழிப்புமாக இருந்த நிலையில் மனதை மறைத்துப் பேசத் தோன்றாமல் அப்படியே சொல்லி விட்டாள்.

அவள் ஏதோ புரியாத மொழி பேசுவதுபோல அவளை வெறித்துப் பார்த்துவிட்டு, ''ஏதாவது கனவு கண்டு கொண்டி

ருந்தியா பானும்மா?'' என்று இதமாகவே கேட்டான் ராஜேந்திரன்.

என்ன உருக்கம் என்று குமுறியவள், ''இல்லை'' என்றாள் மொட்டையாக.

''பின்னே? சொல்வது புரிந்துதான் பேசுகிறாயா?'' என்றான் அவன் நம்ப முடியாதவன்போல்.

அதற்குள் நன்றாகத் தெளிந்துவிட்ட அவள், ''ஆமாம்'' என்றாள் அழுத்தம் திருத்தமாக.

''என்ன உளறல் இது?''

''உண்மைக்கு உங்கள் அகராதிப்படி உளறல் என்று அர்த்தமா'' என்று ஏளனமாகக் கேட்டாள் பானுமதி.

சட்டென அவன் முகம் கருத்தது. கைகளை மார்பின் குறுக்கே கட்டிக் கொண்டு, ''அதாவது?'' என்று எடுத்துக் கொடுத்தான் அவன்.

'போஸ் கொடுக்கிறானாக்கும். கேட்கிற திமிரைப் பார். நானே சொல்ல வேண்டுமாக்கும்? சொல்ல எனக்கு ஒன்றும் பயம் இல்லை' என்று உள்ளூரச் சொல்லி திடப்படுத்திக் கொண்டாள் பானுமதி. வெளிப்படையாக, ''அன்று சொன்னீர்களே, குத்துகிற நெருஞ்சி முள்ளைத் தொலை தூரத்தில் தூக்கி எறிந்து விடுவதாக; இன்றைக்குச் செய்து விட்டீர்கள்'' என்றாள் பிசிரற்று.

''அப்படி இல்லை என்று சொன்னால்?''

''எப்படி நம்ப முடியும்? அன்றைக்கு ரகு சொன்னபோது நான் மடத்தனமாக நம்பாமல் போனேன். ஆனால் நீங்கள் முன்புகூட ஒருதரம் ரகுபதியைக் கொல்ல முயற்சிக்கவில்லை?'' என்று ஓர் அதிகாரத் தோரணையில் வினவினாள் பானுமதி.



''கொலையாவது இன்னொன்றாவது? விலகி விடு என்று எச்சரித்து சும்மா ஒரு தட்டு தட்டுவதற்குப் பெயர் கொலை முயற்சியா? சில்லி'' என்று அலட்சியப்படுத்தினான் அவளுடைய கணவன்.

அவளுக்கு நெஞ்சுக்குள் திகீரென்றது.

முன்னொரு முயற்சி செய்ததை அவன் வாயாலேயே ஒப்புக் கொண்டு விட்டானே.

மறைத்திருப்பான்.

ஆனால் அவள் கண்டு கொண்டு விட்டாள் என்பதால் 'சும்மா ஒரு தட்டு' என்று சின்ன விஷயம் போலக் காட்டி, அவளை ஏமாற்றப் பார்க்கிறான்!

அத்தோடு எச்சரிக்கையாக 'ஒரு தட்டு' என்கிறானே, அது மட்டும் தப்பு இல்லையா? இவனிடம் பணம் இருந்தால் அடுத்தவர்களை ஆள் வைத்து அடித்துவிடலாமா? அய்யோ! அன்று ரகுபதியை நம்பாதது எவ்வளவு பெரிய முட்டாள்தனம் என்று மனம் பரிதவித்தது.

ஒன்று தோன்ற, ''ரகுபதியைத் திடீரென்று அவரது ஆபீசில் கோவைக்கு அனுப்பினார்களே, அதுகூட உங்களுடைய சும்மா ஓர் ஏற்பாடுதான் இல்லையா? முதல் முயற்சி அப்படித்தானே?'' என்றாள் குரலில் ஓர் உதாசீனத்துடன்.

இருட்டில் எறிந்த கல்தான். ஆனால் இலக்கு தவறாமல் தாக்கிவிட்டது.

முகம் இறுக, ''வெற்றிகரமாகத் தொழில் நடத்துகிறவன் என்று எனக்குப் பெயர் பானு. இந்தச் சட்ட நியாயங்களில் இருந்து விலகி ஓர் அடிகூட எடுத்து வைக்கக்கூடாது என்றால் ஒன்றுமே சாதிக்க முடியாது. சேணம் இட்ட குதிரை போல ஒரே நோக்காகச் செல்வது என்றால் வெறும் எண்ணூறு ரூபாய்ச் சம்பளத்தில் குண்டு சட்டிக்குள்தான் குதிரை ஓட்ட முடியும்'' என்றான் ராஜேந்திரன் ஏளனக் குரலில்.

ஓர் ஒழுங்கான மனிதனைக் கொன்றுவிட்டு இளக்காரம் வேறா?

கொதித்துப் போய், ''ரகுபதி நல்லவர், நேர்மையானவர். அவரைப் போல இருப்பது மட்டமும் இல்லை. எண்ணூறு ரூபாய் மட்டும் சம்பாதிப்பது கேவலமும் இல்லை. அத்தோடு அவரைப் பற்றி ஒரு பேச்சு பேச உங்களுக்கு ஒரு தகுதியும் இல்லை'' என்றாள் அவள்.

''நீ சொல்வது உண்மையாகக் கூட இருக்கலாம். ஆனால் எனக்கு வேறு ஒரு சந்தேகம்'' என்றான் அவன் புருவங்களை உயர்த்தி.

அவள் பதில் பேசாமல் வெறிக்கவும், ''ரகுபதியின் மேன்மையையும், என் .கீழ்மையையும் நீ பிட்டு பிட்டு வைப்பதைப் பார்த்தால், 'அன்று 'வேறு ஒன்றும் இல்லை' என்று சொன்னது பொய்யோ? உன் பெற்றோரைப் போலவே நீயும் பணத்தாசையில் பொய் உரைத்து என்னை மணந்தாயா . என்று ஓர் ஐயம்...'' என்றான் அவனே தொடர்ந்து.

''நான்...நான்...'' என்றவளுக்கு ஆத்திர மிகுதியில் வார்த்தை வர மறுத்தது. செய்வதையும் செய்துவிட்டு அவளையே பொய்யாள் ஆக்குகிறானே!

அவளது பதிலுக்காகக் காத்திராமலே, ''ஆமாம்... நான் வெறும் கண்ணாடிக்கல் என்றால் நீயும் இந்தக் கண்ணாடிக் கல்லுக்கு ஏற்ற பித்தளைதான் என்கிறேன். ஆங்கிலத்தில் 'பாட் காலிங் த கெட்டில் பிளாக்' என்று சொல்வதுண்டு. பணத்துக்காக மனதை ஒளித்து மணந்து கொள்கிற ஒருத்திக்கு, அந்தப் பணத்தை சம்பாதிக்கிற விதம் பற்றியோ, சம்பாதிக்கிறவன் குணம் பற்றியோ இகழ்ந்து பேச எந்தவிதத் தகுதியும் இல்லை என்கிறேன்'' என்றான் அவளுடைய கணவன் அழுத்தத்துடன்.

இடுப்புக்குக் கீழே அடிப்பது என்பார்கள்.



அன்று துரியோதனனுக்கும் இப்படித்தான் வலித்ததோ?

பீமனை நியாயப்படுத்த முடிந்தது. ஆனால் இங்கே இவன் பீமனல்லவே. இவன்தானே துரியோதனன்?

பேச்சிழந்த அவள் முகத்தை ஓர் இறுக்கத்துடன் பார்த்துக் கொண்டிருந்த ராஜேந்திரன் சட்டென இளகினான்.

''பானு. சற்று யோசித்துப் பார், அவனைக் கொல்லுவது என் எண்ணம் என்றால் அதை நான் உன் முன்னிலையில் தானா செய்ய வேண்டும். ஆள் வைத்து எங்காவது கண் மறைவில் முடித்திருக்கலாம் இல்லையா?'' என்று தணிந்த குரலில் வினவினான்.

சற்று திகைத்துவிட்டு, ''இப்படி ஒரு வாதம் செய்வது என்னை நம்ப வைப்பதற்காக இருக்கலாம்'' என்றாள் அவள் சற்றும் இளகாமல்.

''அது போகட்டும். நானாக ரகுபதிமேல் மோதினேனா? பார்த்துக் கொண்டுதானே...''

''எங்கே பார்த்தேன். அவனைப் பார்க்காதே. கண்ணைப் புத்தகத்திலேயே வை, நிமிராதே என்றுதான் என்னை எதையும் பார்க்க விடாமல் தடுத்து விட்டீர்களே!'' என்று குற்றம் சாட்டினாள் அவள்.

''ஓ! அப்படியா? சரிதான். ஆனால் பஸ்சில் வலது பக்கம் இருந்தவர்கள். லாரி டிரைவர் எல்லாருமே பார்த்திருக்கிறார்களே, அவர்களிடம் கேட்டுப் பார்'' என்று மீண்டும் சொல்லிப் பார்த்தான் ராஜேந்திரன்.

''கேட்டு என்ன தெரிவது? எல்லோருக்கும் கை நிறைய லஞ்சம் கொடுத்திருப்பீர்களே, உங்களுக்கு மாறாக அவர்கள் பேசுவார்களா என்ன? உங்களுக்கோ லஞ்சம் கொடுப்பது கைவந்த கலை. லஞ்சம், பிளாக் மெயில்... எல்லாமே தண்ணீர் பட்டபாடு'' என்றாள் அவள் விடாப்பிடியாக.



முகம் கன்றிய ராஜேந்திரன், ''ஏன் பானும்மா, இன்னும் கொஞ்சம் வேலை கொடுத்துப் பாரேன். நான் எதற்காக இதையெல்லாம் முன்பு செய்திருக்க வேண்டும் உன்மேல் கொண்ட காதலினால்...'' என்று இதமாகவே பேச முயன்றபோது ஆத்திரத்துடன் இடைமறித்துப் பேசினாள் அவன் மனைவி.

''நல்ல வார்த்தையை அசிங்கப்படுத்தாதீர்கள். உங்கள் வெறிக்குப் பெயர் காதல் அல்ல, காமம்'' என்றாள் எகத்தாளமான குரலில்.

''காமமா?'' என்று கேட்டபோது ராஜேந்திரனின் குரலிலும் சினம் இருந்தது. ''ஒரு வார்த்தை தெரிந்தால் அதை அர்த்தம் புரியாமலே உளறிக் கொட்டிவிட வேண்டுமா? நான் கொண்டிருப்பது காமம் என்றால் அதற்கு இந்தக் கல்யாணம் எதற்கு?''

வெட்டுவது போலப் பானுமதி முறைத்ததை அலட்சியம் செய்து அவனே தொடர்ந்தான். ''இன்னொரு நகை செட்டை நீட்டினால் உன்னை எங்கே அழைத்துச் செல்லவும் உன் சித்தி தடை சொல்லப் போவது இல்லை.''

மீண்டும் சிறிய தாயாரை எண்ணி மனம் குன்றினாள் பானுமதி. ஆனால் காட்டிக் கொள்ளாமல், ''எனக்கு மூளையே கிடையாது என்று எண்ணமா?'' என்று சீறினாள்.

''மூளையா?'' என்று அவளை வெறித்தான் ராஜேந்திரன், ''பானுவும் மதியும் பெயரில் மட்டும்தான் இருக்கின்றன. உள்ளே வெளிச்சம் கொஞ்சம்கூட இல்லை'' என்றான் பூடகமாக.

ஒருகணம் திகைத்தவள் உடனே புரிந்து, ''பின்னே உங்கள் கெட்டிக்காரத்தனம் எல்லோருக்கும் வருமா? ஆனால் ஒன்று, உங்க சாமர்த்தியம் ஆயிரத்தில் ஒருவருக்கு இருப்பது கூட அதிகப்படிதான். அதற்கு மேல் உலகம் தாங்காது'' என்று அவன் குரலிலேயே திருப்பினாள்.



தோளைக் குலுக்கிவிட்டுப் பழைய பேச்சுக்குத் திரும்பினான் அவன். ''எவ்வளவு மூளை இருந்தாலும் பல சமயங்களில் உடல் மனதை ஜெயிப்பது உண்டு பானு. இல்லையென்றால், இத்தனை அனாதை இல்லங்களுக்கு அவசியம் இல்லை. அத்தோடு என் தொடுகைக்கு அவசியம் இல்லை. அத்தோடு என் தொடுகைக்கு உன்னிடம் பதில் இல்லாமலும் போகவில்லை.''

வந்ததும் நடந்ததைக் குறிப்பிடுகிறான் என்பது புரிந்து அவளுக்கு முகம் கன்றியது.

பெரிய பாவத்தைச் செய்துவிட்ட கொலைகாரன் என்று அவள் முடிவு செய்துவிட்ட பிறகும், அவன் கைகளில், என்னதான் தூக்கக் கலக்கத்தில் என்றாலும், அவள் நெகிழ்ந்திருந்தது உண்மைதானே!

சமயத்தில் சமாளித்துக் கொண்டதாலேயே நெகிழ்ந்தது இல்லையென்று ஆகிவிடுமா?

தன்னைப் பற்றிய அவமானம் ஒரு புறமும், ஆண் பெண் உறவு பற்றிப் பேசி அறியாத கூச்சம் ஒருபுறமுமாய் அவள் வாயடைத்து நின்றாள்.

அவள் முகத்தையே பார்த்தபடி நின்றிருந்த ராஜேந்திரன் குரல், அடுத்துப் பேசியபோது தணிந்திருந்தது. ''வேண்டாம் பானு, நாம் இருவருமே வெகுவாகக் களைத்துப் போயிருக்கிறோம். இந்த நிலையில் மேலே மேலே பேசி நிலைமையை முற்றவிட வேண்டாம். மீதம் இருக்கும் நேரத்திலேனும் சற்றுத் தூங்கி ஓய்வெடுத்துக் கொண்டு, விடிந்த பிறகு அமைதியாகப் பேசலாம் வா. படுத்துத் தூங்கு'' என்று கட்டிலின் மேல் விரிப்பை அகற்றினான்.

அவன் தணியவும் அவள் முறுக்கேறினாள்.

எங்கே படுப்பது? இவன் மடியிலா? இந்த முறையில் அவளைப் பணிய வைக்க முயற்சிக்கிறானா என்று ஆத்திரம் வந்தது பானுமதிக்கு.

''நாளைகரு மட்டும் பேசுவதற்கு உங்களுக்கும் எனக்கும் இடையே என்ன இருக்கிறது?'' என்று வெடுக்கென கேட்டாள்.

''அப்படியென்றால்?''

''நான் முடிவு செய்துவிட்டேன். என்னால் ஒரு கொலைகாரனோடு...''

''கொலைகாரன் என்றே முடிவு செய்துவிட்டால் நேரே போலீசுக்குப் போவதுதானே... நேர்மையின் திருவுருவம் ஆயிற்றே. வா, வேண்டுமானால் நானே இன்ஸ்பெக்டரிடம் அழைத்துப் போகிறேன்'' என்றான் அவன் கோபமும் ஏளனமுமாக.

பட்டவேதனை எல்லாம் போதாதுபோல இன்னமும் நெஞ்சில் வலித்தது அவளுக்கு.

அவன் ஒரு கொலையே செய்திருந்தபோதும் போலீசில் மாட்டிக்கொண்டு விடக்கூடாதே என்றுதான் தவித்தது அவள் பெண்மனம்.

மாட்டிக்கொண்டு விட்டால் அப்புறம் கேஸ்... தூக்கு...

கற்பனையில்கூடத் தாங்கமாட்டாமல் நெஞ்சுக்குள் சில்லிட்டது.

இது ஏன் என்பதற்கான பதிலையும் அவளால் சகிக்க முடியவில்லை. இது என்ன மடத்தனம் என்று தன் மீதே எரிச்சலும் மண்டியது.

அந்த ஆத்திரத்தையும் அவன் மீதே காட்டி, ''போலீசுக்குப் போனாலும் தான் என்ன? எளிதாக வெளியே வந்துவிட மாட்டீர்களா? இப்போதுகூட, நீங்கள் சுதந்திரமாக உலவுவதில் இருந்தே உங்கள் கெட்டிக்காரத்தனம் தெரியவில்லையா? அதற்கும் மேலே போய்விட்டால் சமாளிக்கப் பெட்டி பெட்டியாய் பணம் வேறு இருக்கிறது'' என்று அவனை மட்டம் தட்டிப் பேசுவது போலப் பேசி, மாட்டிக்



கொண்டாலும் எப்படியும் தப்பி வந்துவிடுவான் என்று தனக்குள்ளே ஆறுதலும் பெற்றாள்.

ஆனால் இந்த மாதிரி ஆறுதல் கொள்வதுகூட, ஓர் அநியாயத்துக்குத் துணைபோவது போலத்தான் என்பது புரிந்ததால், இதில் தொடங்கி கடைசியாக அவனது விருப்பம் போல் அவனோடு வாழவும் தொடங்கி விடுவோமோ என்ற பயமும் பற்றிக் கொண்டது.

ஊகூம். அதில் மட்டும் உறுதியாக நிற்கவேண்டும். நின்றே ஆகவேண்டும்.

அதே உறுதியில் ''நாளை, நாளனன்று, அதற்கு மறுநாள் என்று என்றைக்குப் பேசினாலும் என் முடிவு இது தான். இனி நான்...'' என்று தொடர்ந்தவளை அவசரமாக இடைமறித்தான் ராஜேந்திரன்.

''பொறு பானு. அவசரப்பட்டு வார்த்தைகளைக் கொட்டிவிடாதே. பேசுமுன் ஒன்றை யோசித்துப் பேசு. எப்படியும் நம் இருவருக்கும் திருமணம் ஆகிவிட்டது. நீ என் மனைவி. என்னைப் பொறுத்தவரையில் இது மாற்ற முடியாத விஷயம். எந்த வகையிலும் மாற்ற விடவும் மாட்டேன்'' என்றான் அழுத்தத்துடன்.

''நான் என் விஷயம் சொன்னேன்'' என்றாள் பானுமதி நிமிர்ந்து.

''இரண்டும் ஒன்றும்தான்'' என்றான் அவளுடைய கணவன்.

''அதெப்படி? நான்... எனக்கும் மனம் இருக்கிறது. ஒன்று வேண்டும், வேண்டாம் என்று முடிவு செய்யும் உரிமை இருக்கிறது'' என படபடத்தாள் அவள்.

''என் விஷயத்தில் என் விருப்பம்தான் முடிவு. இப்போது நீ என் விஷயம்'' என்றான் அவன் சில்லிட்ட குரலில்.

அந்தக் குரலில் அவளுக்கு உள்ளே உதறியது.



இரண்டு எட்டு பின்னடைந்தவள், நின்று, தைரியத்தைக் கூட்டி, ''அப்படியானால் என் விருப்பம் பற்றி ஒன்றும் இல்லையா?'' என்று கேட்டாள்.

''இல்லை'' என்று சுருக்கமாகப் பதிலிறுத்தவன். அவளை நோக்கி வரவும், விழிகள் விரியப் பார்த்து, ''மனம் இல்லாதவளைக்கூடக் கட்டாயப்படுத்துவீர்களா? ஏ... ஏன் மாட்டீர்கள்? கொலை செய்தவருக்குப் பலவந்தம் பெரிதா என்ன?'' என்று அவனைக் காயப்படுத்த முயன்றாள்.

கண்கள் சிவக்க, ''அப்படித்தான் வைத்துக்கொள்'' என்று மனைவியின் கையைப் பற்றினான் ராஜேந்திரன்.

## 5

கணவனைக் காயப்படுத்தும் வெறியில் பலவந்தம் என்கிற வார்த்தையைப் பயன்படுத்தினாளே தவிர, மெய்யாகவே அவன் அந்த அளவுக்குப் போகக்கூடும் என்று பானுமதி எண்ணியிருக்கவில்லை.

ஆனால் அவன் விழிகளில் சிவப்பேறக் கையைப் பற்றவும் மிரண்டு போனாள்.

பயமும் கோபமுமாக, ''நான் உங்களிடம் தனியாக மாட்டிக்கொண்டு இருக்கிறேன். இப்போது உங்கள் பலத்தால் நீங்கள் என்ன வேண்டுமானாலும் செய்ய முடியும்தான். ஆனால் அப்புறம் என் வாழ்நாள் முழுவதும் உங்களை என் அடி மனத்திலிருந்து வெறுப்பேன்...'' என்றாள் மூச்சிரைக்க.

அவள் பேச்சு காதிலேயே விழாததுபோல அவளைத் தூக்கிச் சென்று கட்டிலில் கிடத்தினான் ராஜேந்திரன்.

அவளுக்கு இருபுறமும் கைகளை ஊன்றிக் குனிந்து, ''என் பலத்தைப் பயன்படுத்தித்தான் உன்னை அடைய வேண்டும் என்பது இல்லை, பானுமதி. இதை என்னால்



நிரூபிக்க முடியும். ஆனால் உன் விருப்பத்துக்கும் சற்று மதிப்புக் கொடுக்கவே நானும் விரும்புகிறேன். ஆனால் ஒன்று. நம் திருமணம் மாற்ற முடியாதது. அதை மட்டும் மறக்க வேண்டாம்'' என்று கூறியவன், கட்டிலின் மறுபுறம் கிடந்த ஒரு தலையணையும், போர்வையையும் எடுத்துக் கொண்டு நிமிர்ந்தான்.

''இப்போது தூங்கு. நானும் தூங்கப் போகிறேன்'' என்று அறைவாயில் வரை சென்றவன் திரும்பி, ''அந்த அறை சோபாவில்தான் படுத்திருப்பேன். இன்னும் ஒன்று. என்னை விட்டு விலகி ஓடுவதாக எண்ணி இந்த நேரத்தில் மடத்தனமாக வெளியே சென்று எந்தவித ஆபத்தையும் இழுத்துக் கொள்ள மாட்டாய் என்று நம்புகிறேன். 'குட் நைட்' என்று சென்று விளக்கை அணைத்து விட்டுப் படுத்தான்.

ராஜேந்திரனிடம் அதன் பின் அசைவில்லை.

ஆனால் சற்றுமுன் நன்றாகத் தூங்கியிருந்ததால் பானுமதிக்கு தூக்கம் வரவில்லை.

அவளுடைய கணவன் அந்த மாதிரித் திடுமென அவளை விட்டு விலகிச் சென்றவிதம் விசித்திரமான வகையில் அவளுக்கு ஏமாற்றத்தை அளித்தது.

என்ன அசட்டுத்தனம் என்று தன்னையே கடிந்து கொண்டு, ராஜேந்திரன் பொல்லாதவன், கொலைகாரன் என்று அவனது குற்றங்களை ஒவ்வொன்றாக எண்ணிப் பார்த்து ஆத்திரத்தை வளர்த்துக்கொள்ள முயன்றாள்.

மாறாக, கல்லூரியில் படித்துக் கொண்டு இருந்தபோது திடுமெனப் பெற்றோரை இழந்து அவன் தனியாக நிற்க நேர்ந்தது நினைவு வந்தது.

அந்த இழப்பும், பிறகு தனியாகவே தொழிலைக் கவனித்து வளர்க்க நேர்ந்ததும்... அப்போது அவனை, எத்தனை பேர் எத்தனை விதமாக மோசம் செய்தார்களோ? வஞ்சித்

தார்களோ? அதையெல்லாம் சமாளிக்க நேர்ந்ததில் அவன் மனம் கடினப்பட்டுப் போயிற்றா?

ஆனால் என்னதான் நடந்திருந்தாலும் ஒரு கொலை... ஒரு மரணத்துக்குக் காரணம் ஆவதை எப்படி ஒத்துக் கொள்வது?

புரண்டு படுத்தவள் இடது கை மணிக்கட்டைத் திருப்பிக் கடிகாரத்தைப் பார்த்தாள்.

எங்கிருந்தோ வந்த மங்கலான வெளிச்சத்தில் கடிகாரத்தின் பொடி வைரங்கள் மின்னின. அவனது பரிசுதான். முதல் தடவை டெல்லி சென்றபோது கொணர்ந்தது.

மனதை அடக்கி மணியைப் பார்த்தாள். பளபளத்த கரங்கள் மூன்றைக் காட்டின.

பாவம், அங்கே காவல் நிலையத்தில் என்னென்ன கேள்விக்குப் பதில் சொல்ல நேர்ந்ததோ...

காலையில் அவள் கண்விழித்தபோது பொழுது எப்பொழுதோ விடிந்து நன்றாக வெளிச்சம் வந்திருந்தது.

ராஜேந்திரன் குளித்து உடை மாற்றியிருந்தான். காபி அருந்திக் கொண்டிருந்தவன் அவள் வருவதை அறிந்து திரும்பினான்.

''குளியல் அறையில் பேஸ்ட், பிரஷ் வைத்திருக்கிறேன். பல் துலக்கிவிட்டு வா. அதற்குள் உனக்கு காபிக்கு ஆர்டர் செய்கிறேன். காலையில் காபிதானே?'' என்று வினவினான்.

''ஆமாம்'' என்று கூறிக் குளியல் அறைக்குள் மறைந்தாள் அவள்.

இனி?

அவள் காபி அருந்தி முடிக்கும்வரை, பத்திரிகையை நோட்டம் விட்டபடி பேசாதிருந்தான் ராஜேந்திரன்.



பிறகு பத்திரிகையை மடித்து அவள் புறமாய் வைத்துவிட்டு, ''பானு'' என்று அவளை விளித்துப் பேசத் தொடங்கினான்.

''இன்னும் சற்று நேரத்தில் நான் காவல் நிலையத்துக்குச் செல்ல வேண்டும் பானு. அங்கே... அங்கே சில வேலைகள் இருக்கின்றன. எல்லாம் முடிந்து நான் திரும்பிவர மிகவும் தாமதம் ஆகலாம். அதுவரை நீ இங்கே தனியாக இருக்க வேண்டாம் என்று நினைக்கிறேன். அநாவசியமாய் மனதைக் குழப்பிக் கொள்வாய்.''

நேற்றையக் கூற்று அநாவசியமாக அவள் மனதைக் குழப்பிக் கொண்டதன் விளைவு என்று குறிப்பு காட்டுகிறானாக்கும்!

அவள் புரிந்துகொள்ள அவகாசம் கொடுத்தவன் போல சற்று நிறுத்தியிருந்தவன் மீண்டும் தொடர்ந்தான்.

''அதனால் உன் அப்பா வீட்டில் உன்னை கொண்டு விட ஏற்பாடு செய்யட்டுமா?''

அந்த 'உன் அப்பா வீடு' பானுமதியை ஒருவிதமாய்ப் பாதித்தது. இனி அது உன் வீடல்ல என்று ஜாடையாகச் சொல்கிறானா? அவன் செய்யக்கூடியவன்தான்.

பானுமதி என்ற அழைப்பில் அழுத்தம் இருக்கவும் 'சாரி' என்று கூறி மீண்டும் அவன் பேச்சைக் கவனித்தாள் அவள்.

''அல்லது ரேவதி சித்தி வீட்டில் தங்குகிறாயா? ஏதாவது பேசிக் கழுத்தறுக்கக் கூடாது என்று மாலதியிடம் சொல்லி வைக்கிறேன்'' என்றான் அவன்.

ஒரு விநாடி யோசித்தாள் அவள். இங்கேயானால் சித்தி, தம்பிகள், அக்கம்பக்கம் என்று எல்லாரும் ரகுபதி பற்றிப் பேசக்கூடும். மாலதி வீட்டில் அந்த வேதனை இராது.



ஆனால் அவளது திட்டம் செயலாவது என்றால் அந்த வீட்டுத் தொடர்பை வளர்த்துக் கொள்வது நல்லதல்ல

''நான் அப்பா வீட்டுக்கே போகிறேன்'' என்று கூறும் போதே மீண்டும் அவள் மனம் திடுக்குற்றது. ராஜேந்திரன் பேச்சை ஒத்துக் கொண்டதுபோல அல்லவா அவளும் பேசி விட்டாள்!

அவனது வீடும் வேண்டாம், அப்பா வீடும் சொந்தமில்லை என்றால் அவளுடைய இடம் எது?

அவளது மன ஓட்டம் தெரியாமல் அவன் அவளது பேச்சுக்குப் பதில் சொன்னான். ''ஒன்று யோசித்தாயா? இன்று அங்கே வீட்டில் உன் பெற்றோர் யாரும் இல்லாதிருக்கலாம்'' என்றான் மெதுவாக.

''எங்கே...'' என்றவளுக்கு உடனே புரிந்து போயிற்று. ''குடும்ப நண்பர்கள் அல்லவா? துக்க வீட்டுக்குப் போயிருப்பார்கள்.''

பார்வையைத் தாழ்த்தி, ''பரவாயில்லை'' என்றாள் அவள். ''எப்படியும் சந்தர், சுந்தர் யாராவது இருப்பார்கள்.''

''ஓ.கே!'' என்று எழுந்தான் ராஜேந்திரன். ''இங்கேயே உனக்கு ஒரு டாக்சிக்கு ஏற்பாடு செய்கிறேன். நேராக வீட்டில் கொண்டு விட்டு விடுவார்கள். நீ பணம் ஏதும் கொடுக்க வேண்டாம். இங்கே ரூம் பில்லோடு நான் செட்டில் பண்ணி விடுகிறேன்... பானு, இன்னொரு விஷயம்'' என்று அவளை ஆழம் பார்த்தான்.

அவனது பார்வையை உணர்ந்தபோதும் விழிகளை உயர்த்தாமல் அப்படியே அமர்ந்திருந்தாள் பானுமதி.

''பானுமதி'' என்றான் ராஜேந்திரன் சற்று அதட்டலாக.

அவள் நிமிரவும் ''குற்றம் சாட்டப்பட்டவனுக்கு வாதாட ஒரு வாய்ப்பு அளிக்காமல் எந்தக் கோர்ட்டும் தண்டிப்பது இல்லை புரிகிறதா? இப்போதைக்கு நம் விஷயம்



நமக்குள்ளேயே இருக்கட்டும். யாரிடமும் எதுவும் சொல்ல வேண்டாம். அவசரப்பட்டு முடிவு எடுக்கவும் வேண்டாம்'' என்று கிளம்பினான்.

'உத்திரவா? இவர் சொல்லிவிட்டால் நான் ஒரு டமாரத்தை எடுத்துக்கொண்டு வீதிவீதியாய்ச் சென்று அறிவித்துவிடுவேனாக்கும். நேற்று திருமணம். இன்று பிரிவு என்றால் எனக்கு மட்டும் அவமானம் இல்லையோ' குமைந்தபடி வீடு செல்லத் தயாரானாள் பானுமதி.

வீடு சென்றபோது அவள் எதிர்பார்த்தது போலவே கனகமோ, அவளுடைய தந்தையோ வீட்டில் இல்லை. அத்தோடு அவள் பயந்தபடியே, தம்பிகளும் சாவியைப் பக்கத்து வீட்டில் கொடுத்துவிட்டு விளையாடப் போயிருந்தனர்.

சாவியை வாங்கப் போனால் அந்த வீட்டு அம்மாள் தனக்குக் கிடைத்த பிடி அவலை நன்றாக மென்று தீர்த்தாள். ''அந்த ரகுபதிப் பையன் செத்துவிட்டானாமே. முன்னே உன்னைக் கட்டிக் கொள்ளப் போகிறவன் அவன்தான்னு கனகம் சொல்வாள். ஆடாமல் ஓடாமல் மாப்பிள்ளை என்று பேசுவோம். இப்போ உனக்கு வேற கல்யாணம் ஆயிட்டது என்று உயிரை விட்டு விட்டான் என்கிறார்களே. நிஜந்தானடியம்மா? உனக்கு ஏதும் கடுதாசி எழுதியிருந்தானா? பாவம்... தங்கமான பிள்ளை. அரசனை நம்பி புருஷனை விட்டு விட்டாயே, உனக்கு எப்படித்தான் மனசு வந்ததோ? கொஞ்சம் பொறு. சாவியை இங்கேதான் எங்கேயோ வைத்தேன். தேடிப் பார்க்கிறேன். பாவம் அவன் லாரியிலா விழுந்து செத்தான்? நீ பார்த்தாயா? அவன் அம்மா மயக்கம் போட்டு விட்டாளாம். உன்னைப் பார்த்தால் அவளுக்கு வயிறு எரியும்...''

உண்மையில் வயிறு எரிந்தவள் அந்த அம்மாள்தான். பானுமதியை விட நாலு வயது மூத்தவள் அவளுடைய

மகள். அவளுக்குத் திருமணம் ஆகுமுன் ரகுபதி வந்தபோதே ஒரு மாதிரிப் பேசுவாள். இப்போது பணக்கார மாப்பிள்ளை வந்து விரும்பி மணந்ததில் அவளுக்குப் பொறாமைத் தீ எரிந்து கொண்டிருந்தது. இப்போது வாய்ப்புக் கிடைத்தது என்று வக்கணையாகத் தீர்த்துக் கொண்டிருந்தாள்.

தீ மேல் நிற்பவள்போலத் தவியாய்த் தவித்தாள் பானுமதி. இவர்கள் வீட்டில் சாவியைக் கொடுத்து விட்டுப்போன தம்பிமாரை உள்ளூரத் திட்டினாள். ஆனால் எதையும் காட்டிக்கொள்ள முடியாமல் கேட்டுக் கொண்டு நின்றாள்.

பானுமதியின் தவிப்பையும், தாயின் வக்கிரத்தையும் உணர்ந்து உள்ளிருந்து வந்தாள் அந்த அம்மாளுடைய மகள். ''சாவியை நீங்கள் அங்கே வைக்கவில்லை அம்மா. இதோ இங்கே இருக்கிறது'' என்று சாவியை எடுத்து பானுமதியிடம் கொடுத்து, ''சௌக்கியமா, பானு?'' என்று புன்னகை செய்தாள்.

''ம்...'' என்று பதிலுக்கு முறுவலித்துவிட்டு, ''வரட்டுமா?'' என்று விடைபெற்று ஒருவாறு அவளுடைய தாயாரிடமிருந்து தப்பிச் சென்றாள் பானுமதி.

வீட்டைத் திறந்து, உள்ளே சென்று தன் கட்டிலில் விழுந்தவளுக்கு 'ஹோ' என்று வந்தது.

நேற்று முன்தினம் அங்கிருந்து கிளம்பும்போது இருந்த மனநிலை என்ன? இப்போது இருக்கும் நிலை என்ன?

பக்கத்து வீட்டில் 'உனக்கென்னடி அவசரம்' என்று மகளைத் தாயார் திட்டுவது லேசாகக் காதில் விழுந்தது.

சட்டென எழுந்தவள் ஓடிச் சென்று கேட்டிலிருந்து வரிசையாக உள்ளே பூட்டிக் கொண்டு வந்தமர்ந்தாள்.

ராஜேந்திரனைப் பிரியும்போது கனகம் என்னதான் திட்டினாலும் இங்கேதான் வந்தாக வேண்டும். அப்போது



இந்த அம்மாள் கெக்கலி கொட்டுவாளா? அவளைப் போல இன்னும் எத்தனை பேர் பேசுவார்கள்? தாங்க முடியுமா? ஆனால் இதற்கெல்லாம் பயந்துகொண்டு ராஜேந்திரனோடு வாழ்வதும் முடியாத காரியம்தான்...

கண்ணைக் கரித்துக் கொண்டு மீண்டும் அழுகை வந்தது அவளுக்கு.

அழுவதும் சோர்வதுமாக அதே நிலையில்தான் மதியம் சென்று, கனகமும் சங்கரனும் திரும்பி வரும்வரை, பானுமதி இருந்தாள்.

வந்ததுமே, ஓர் அவசரக் குளியலுடன், ''சாயங்காலத்துக்குள் எப்படியும் அலுவலகம் வருகிறேன் என்று ஜி.எம்.மிடம் சொல்லியிருக்கிறேன். போயாக வேண்டும்'' என்று கிளம்பிவிட்டார் தந்தை.

அவரை அனுப்பிவிட்டு, தானும் குளித்துவிட்டு மகள் அருகில் வ்ந்து அமர்ந்தாள் கனகம்.

''ஏதாவது சாப்பிட்டாயா?'' என்று கேட்டவள், மகள் இல்லையென்று தலையசைக்கவும் எழுந்து சென்று கொஞ்சம் மோர் சாதம் பிசைந்து கொண்டு வந்து கொடுத்து உண்ணச் செய்தாள்.

''இருபது வயது பெண்ணுக்குத் தன் வயிறு தெரியாதா? அல்லது இதுதான் அயல் வீடா? நீ சாப்பிட்டிருக்க மாட்டாய் என்று மாப்பிள்ளை சொன்னார்.''

''மாப்பிள்ளை? அவர் அங்கே எங்கே வந்தார்?''

''பின்னர் அவர்தான் அங்கே எல்லாம் செய்திருக்கிறார். சும்மா என்றால் அது என்ன, போஸ்ட்... என்று என்னமோ சொல்கிறார்களே, அது முடிந்து உடம்பு கிடைக்கவே ரொம்ப லேட்டாகி விடுமாமே. சீக்கிரம் கிடைக்கும்படி ஏற்பாடு செய்தாராம். செலவுக்குகூடப் பணம் ஏதோ கொடுத்தார்



போலத் தெரிகிறது'' என்று மாப்பிள்ளை புகழ் பாடினாள் கனகம்.

சித்தியைப் பற்றிய அவன் கணிப்பு நினைவு வர அவளை வெறித்துப் பார்த்தாள் பானுமதி. இதெல்லாம் கடப்பாரையை விழுங்கிச் சுக்குக் கஷாயம் சாப்பிடுகிற விஷயம் என்று சொன்னால் இந்தச் சித்தி நம்புவாளா?

''வீட்டுக்கு வாருங்கள் என்று மாப்பிள்ளையை அழைத்தேன். ஆனால் அவருக்கு ஏதோ ஆபீஸ் வேலை வந்துவிட்டதாம். இங்கே அவருடைய ஆபீசுக்கு ஒரு வீடு இருக்கிறதாமே, உனக்குத் தெரியுமா?''

தலையாட்டினாள் பானுமதி. ஆபீஸ் கெஸ்ட் ஹவுஸ். ஒருதரம் காட்டியிருக்கிறான். அழகான சிறிய வீடு.

''அங்க போய் அந்த வேலையை முடித்தாக வேண்டுமாம். வேலை முடிய லேட்டாகி விடுமாம். அதனால் நாளைதான் வருவாராம்'' என்றாள் கனகம் தொடர்ந்து.

பானுமதிக்குப் புரிந்தது.

இன்று அவளைச் சந்திக்க அவனுக்குத் தைரியம் இல்லை. அவள் உண்மை அறிந்தவளாயிற்றே, அவளைப் பார்க்க அவனுக்கு மூஞ்சி ஏது?

கனகம் தொடர்ந்தாள். ''படுபாவி, இருந்திருந்து நீங்கள் பெண்ணும் மாப்பிள்ளையுமாகப் போகிற வழியில்தானா லாரியில் மாட்டிக்கொள்ள வேண்டும்? இன்னொருத்தன் என்றால் தன்பாட்டில் போயிருப்பான். மாப்பிள்ளைக்கு இளகிய மனசு. தெரிந்த மனிதன் செத்துக் கிடக்கிறபோது விட்டுப் போக மனம் வரவில்லை. கடைசியில் கல்யாண நாளும் அதுவுமா கருமாதி வீட்டுக்குப் போய் நிற்கும்படி ஆயிற்று.

''ஆனால் பானுக் கண்ணு, நீயும் மாப்பிள்ளையோடு வந்திருக்கலாம் இல்லையா? இவ்வளவு நாளாக நன்றாகப்



பழகிவிட்டு இப்போது ஒதுங்கி நின்றால் நன்றாய் இருக்கிறதா?''

''கல்யாணம் என்பது சாமி போடும் முடிச்சு. யாருக்கு யார் என்று அவர் எழுதியபடிதான் நடக்கும். தாலி கட்டுகிற நேரத்தில்கூட எத்தனையோ கல்யாணங்களிலே மாப்பிள்ளை, பெண் மாறியிருக்கிறது. அதற்காகப் பழகியவர்களை விட்டுவிடலாமா!

''ரகு அம்மாகூடச் சொன்னார்கள். காலையில் பானுகிட்டே சந்தோஷமாகச் சொன்னேன், ராத்திரிக்குள்ளே இப்படி ஆகிவிட்டதே என்றார்கள். நீ வரவில்லையா என்று கூடக் கேட்டார்கள்.

''மாப்பிள்ளை இதையெல்லாம் உன்னிடம் சொல்ல வேண்டாம், வருத்தப்படுவாய் என்று சொன்னார். ஆனால் எனக்குத்தான் மனசு கேட்கவில்லை, சொல்லி விட்டேன்'' என்று முடித்தாள்.

ஹூம், பானுமதி வருத்தப்படுவாள் என்றா இதை அவளிடம் சொல்ல வேண்டாம் என்றார். அந்த உத்தம மாப்பிள்ளை? அவள் அங்கே போய், அந்த சோகத்தைக் கண்டுவிட்டால், பின்னர் ஒருநாளும் தன்னை ஏறெடுத்தும் பார்க்க மாட்டாள் என்கிற பயம் அல்லவா உந்தியிருக்கிறது!

அவனிடமிருந்து ஒரு தடுப்பு வந்திருக்கிறது என்றதுமே ரகு வீட்டிற்கு அன்றே சென்றாக வேண்டும் என்று முடிவு செய்தாள் பானுமதி.

அங்கே சென்று வருவதாகப் பானுமதி கிளம்பிய போது கனகம் தடை சொல்லாததோடு அதுதான் சரி என்று ஆமோதிக்கவும் செய்தாள்.

ஆனால் முந்தைய இரவும் அங்கே சென்று அலைந்துவிட்டு, அன்றும் பிள்ளைகளுக்கு அவசரமாக உணவு செய்துவிட்டு ஓடிச் சென்று அவ்வளவு நேரம் அங்கேயே இருந்து

விட்டுத் திரும்பியிருந்த அவளுக்கு மறுபடியும் அந்த வீடு செல்ல மனமில்லை.

''சின்னவளாக இருந்தபோது நீ போய் வந்த வீடுதான். ஆனால் இப்போது நீ தனியாகப் போவது மாப்பிள்ளைக்குப் பிடிக்குமோ, என்னமோ? எதற்கும் தம்பிகள் வந்த பிறகு துணைக்குக் கூட்டிப் போயேன்'' என்றாள் அவள்.

தம்பிகள் வீடு வந்து சேர இரவாகிவிடும் என்பது பானுமதிக்குத் தெரியாதா?

''அடுத்த தெருவுக்குத் துணை எதற்கு சித்தி?'' என்று பிடிவாதமாகக் கிளம்பி விட்டாள்.

சென்ற பலன் பெரும் ஆபத்திலும் சிக்கிக் கொண்டாள்.

பானுமதி, ரகுபதியின் வீட்டை அடைந்தபோது வீட்டில் ஆள் இருக்கும் அரவமே இல்லை.

கழுவி, சரியாக நீரைத் தட்டி விடாததால் அங்கங்கே தென்பட்ட ஈரமும், நடுவறை விளக்கும் அவளைத் தயங்க வைத்தன.

திகைத்து நிற்கையில் பக்கத்து அறையிலிருந்து சன்னமாய் ஒரு விசிப்பு சத்தம் கேட்டது.

மெல்ல அங்கே சென்றாள் பானுமதி.

அறையின் ஓர் ஓரமாய் ரகுபதியுடைய சின்னத் தங்கை கலைந்த தலையும், கண்ணீர்ச் சுவடுமாகச் சோர்ந்து கிடப்பது தெரிந்தது.

ஆள் அரவம் கேட்டுத் திரும்பிய மூத்த தங்கை, பானுமதியைக் கண்டதும் தலையசைத்து, தாயிடம் அழைத்துச் சென்றாள்.

பானுமதியின் கையைப் பிடித்துக்கொண்டு அழுதாள் அந்த அம்மாள். ''என்னவெல்லாம் கனவு கண்டேன். இப்படி ஆகிவிட்டதே பானு?'' என்று கேவினாள்.



பழைய திட்டம் பற்றிப் பேசப் போகிறாளோ என்று பானுமதி உடல் இறுகுகையில், ''துபாய்க்குப் போகிறான். கைநிறைய சம்பாதிப்பான். இந்தப் பெண்களைப் பெரிய இடத்தில் கட்டிக் கொடுக்கலாம். பணக்கார மருமகள் வருவாள் என்று என்னென்ன கோட்டை கட்டினேன்! எல்லாம் மண்ணாகிப் போயிற்றே'' என்று கதறினாள் அந்தத் தாயார்.

பெரிய வேலை என்று மகிழ்ந்திருப்பார்கள், பாவம் என்று உருகினாள் பானுமதி.

''அப்படி என்னம்மா, அந்த நேரத்தில் அவ்வளவு அவசரமாய் அந்த இடத்தில் போய் மாட்டிக் கொண்டான்? அந்த லாரிக்காரனுக்குத்தான் கண்ணில்லையா? என் பிள்ளை வருவது தெரிந்து ஒதுங்கி ஓட்டக் கூடாதா? விதி அம்மா விதி! அதுதான் வேண்டாத நேரத்தில், வேண்டாத இடத்தில், இரவல் மோட்டார் சைக்கிளை ஓட்டிக்கொண்டு அவனை வரச் செய்திருக்கிறது. அய்யோ, ஓர் உயிர் வேண்டுமானால் என்னைக் கொண்டு போயிருக்கலாம்'' என்று மேலும் புலம்பினாள், பெற்றுப் பறிகொடுத்தவள்.

இந்தத் தவிப்பை என்னவென்று தேற்ற முடியும்? மெல்ல அவள் கரங்களை வருடியபடி பேசாதிருந்தாள் பானுமதி.

''என்னமோ, வழியில் பார்த்தது உன் புருஷன் என்பதால் எங்களுக்கு உடனே விஷயமாவது புரிய வந்தது. இன்றைக்கும் அவரால்தானே, என் பிள்ளையை சீக்கிரமாக கொண்டு வர முடிந்ததாம்'' என்றவள், ''என் பிள்ளை தானாக வரவில்லை அம்மா. கொண்டு வந்தார்கள்'' என்று அலறி விட்டாள்.

''ஆன்ட்டீ...'' என்று தானும் கண்ணீர் உகுத்தாள் பானுமதி.

சற்றுத் தேறி, ''என்னம்மோ, உன் கணவர் ஏற்பாடு செய்தபடி அவனைத் துபாய்க்குத்தான் அனுப்ப முடிய



வில்லை. இங்கே வீட்டுக்காவது கொண்டு வந்து சேர்த்தாரே'' என்று பெருமூச்சு விட்டாள் பெரியவள்.

திகைப்புற்று, ''து... துபாய்க்கு... அவரா?'' என்று தடுமாறினாள் பானுமதி.

''உனக்குத் தெரியாதா கண்ணு? நிஜமான பெரிய மனிதர். வலது கை கொடுப்பது இடது கை அறியாமல் செய்திருக்கிறார் கலிகாலக் கர்ணன். உன் அங்கிளுக்கு பம்பாயில் பெரிய வேலை, ரகுவுக்குத் துபாயில் இரண்டு வருஷ காண்டிராக்டு... எல்லாம் புண்ணியவான் அவர் ஏற்பாடுதான். ஆனால் என் பிள்ளைதான் இரண்டு வாரம் முன்னாலேயே போய்ச் சேர்ந்துட்டான்...'' என்று விசித்தாள் ரகுவைப் பெற்றவள்.

'கண்ணில் படாத தொலைதூரம் மேல் உலகம் அல்லவா? துபாய்தானோ? இரண்டு ஆண்டு காண்ட்ராக்டாமே.'

''சரி சரி எவ்வளவு நேரம் அவளைப் பிடித்து வைத்திருப்பாய்? அவளும் புதிதாகக் கல்யாணம் ஆனவள். புருஷனைப் பார்க்க வேண்டும். அவள் வீடு திரும்பட்டும்'' என்று அவளைக் கிளப்பினார் ரகுபதியுடைய தகப்பனார்.

வாயில் அறைக்கு வந்ததும், ''என் மகனே என்றாலும் ரகு மடையன் என்பதை நான் ஒப்புக் கொண்டு தான் ஆக வேண்டும். எப்படியோ, கடவுள் உனக்குக் கொடுத்திருப்பது அருமையான புருஷன். அந்த இரவிலும், திருமண நாள் என்பதைக் கூட மறந்து எப்படி ஒரு துணையாக நின்றார் தெரியுமா? நாங்களாக என்றால், நாயாய் பேயாய் அலைய வேண்டியிருந்திருக்கும். புண்ணியவான் அலைச்சலையெல்லாம் அவர் பார்த்துக் கொண்டு அந்த வேதனையிலும் கொஞ்சம் அமைதியைத் தந்தார். என் பிள்ளையின் பெரிய தப்புக்கு நீ அவரோடு அமோகமாக வாழ்ந்தாய் என்றால்





அதுவே ஒரு பிராயச்சித்தம் செய்தாற்போல'' என்றார் அவர் வேதனையோடு.

''ரகுவின் தப்பா? பிராயச்சித்தமா?''

''என்ன அங்கிள், எனக்கு ஒன்றுமே புரியவில்லையே'' என்று வினவினாள் பானுமதி.

''ஷ்... மெல்ல உன் ஆன்ட்டிக்கு இது தெரியாமல் போய்விடட்டும் ரகு ஊகூம்... இந்த அவமானத்தை நான் என் வாயால் சொல்ல முடியாது. மோட்டார் சைக்கிள் வேறு இரவல் வாங்கி, அதையும் உடைத்து... சைக்கிள்காரன் வேறு வந்து கத்துகிறான். அவனுக்கும் அவர்தான் கொடுத்தாற்போல.''

''பானும்மா, பணம் இருந்தால் மட்டும் போதாது. அதைக் கொடுக்கும் மனமும் வேண்டும். அவருக்கு மனமும் இருந்ததால் நான் மானம் இழக்காமல் நிற்கிறேன். இன்னொருவர் என்றால் ரகு பண்ணிய வேலைக்கு முகத்தைத் திருப்பிக் கொண்டு போயிருப்பார். எல்லாம் ஒரு நாள் அவரே உன்னிடம் சொல்லுவார். அப்போது தெரிந்து கொள். இப்போது'' என்றவர் சுவரில் மாட்டியிருந்த ரகுபதியின் பழைய படம் ஒன்றை நோக்கி, ''உன்னைப் பெற்றதை எண்ணி அழுவதா அல்லது இன்று இழந்ததை எண்ணி அழுவதா?'' என்று கேட்டுக் கண்ணீர் விட்டார்.

அவரை ஒரு நாற்காலியில் அமரச் செய்து, சற்று நேரம் ஆறுதலாகப் பேசி இருந்துவிட்டு, அவர் சற்று அமைதியுற்றதும் பானுமதி கிளம்பினாள்.

ரகுபதி என்ன தப்பு செய்தான்?

அன்று கூடக்கூட வந்து புதுமணத் தம்பதியரை அவன் தொல்லை செய்தது யாருக்கும் தெரியவில்லை. ராஜேந்திரன் அதை யாரிடமும் சொல்லி அவனைக் கேவலப்படுத்தியிருக்கவில்லை.

ஆனால் அவன் வேறு ஏதோ பெரிதாகச் செய்திருக்க வேண்டும் மற்றபடி அங்கிள் இப்படி பேசமாட்டார்.

ஆனால் ஒன்று தெளிவாயிற்று.

தப்பு செய்தது ரகுபதிதான் அவளுடைய கணவன் அல்ல!

கர்ணன்! புண்ணியவான்!

அப்படிப்பட்டவனுக்கு அவள் என்னென்ன பட்டங்கள் சூட்டிவிட்டாள்!

முந்தைய இரவு மனத்திரையில் படம் போல ஓட அவள் வெகுவாக மனம் குன்றிப் போனாள்.

பொறு, பொறு, அவசரப்பட்டுப் பேசாதே. களைப்பு தீர்ந்து நிதானமாக யோசித்துப் பேசலாம் என்று எத்தனை தடவை சொன்னான்!

அவள் சற்றும் பொறுக்கவில்லையே!

ஒரு வார்த்தை கேளாமல் கொட்டித் தீர்த்து விட்டாளே!

ஏன்? ஏன் அப்படி?

சும்மா சும்மா ராஜேந்திரனிடம் அவள் குற்றம் கண்டதும் கோபம் கொண்டதும் ஏன்?

ஒருவேளை ரகுபதிக்கு அநியாயம் செய்துவிட்டதாக அவளது மனத்திற்குள் உறுத்திய குற்றக் குறுகுறுப்பு அந்தப் பழியைத் தாங்க இன்னொரு ஆளைத் தேடியதோ? ஓரளவு அதற்குக் காரணங்கள் ராஜேந்திரன் என்பதால் அவன்மேல் பழிகளைச் சுமத்தியதோ? ஆம். அப்படித்தான் இருக்க வேண்டும். ஆனாலும் அதற்காக என்ன பேசுவது என்று இல்லையா?

சேச்சே! என்ன என்ன வார்த்தைகள்! ஓங்கி அறையாமல் எப்படி விட்டான்? எப்படி சகித்தான்?



அல்லது... சகிக்க முடியாமல் வெறுத்துவிட்டானோ? அதனால்தான் அவள் முகத்தைப் பார்க்கப் பிடிக்காமல்தான் வீட்டுக்கு வரவில்லையோ?

மற்றபடி இரவில்கூட என்ன அலுவலக வேலை?

வராண்டா தாண்டி வீட்டுப்படி இறங்குமுன் பானுமதியின் மனம் இத்தனையையும் எண்ணித் தவியாய்த் தவித்துப் போயிற்று.

இப்போது அவள் உடனே அவளுடைய கணவனைப் பாத்தாக வேண்டுமே. பார்த்து அவனிடம் மன்னிப்புக் கேட்டாக வேண்டுமே!

அவனை எங்கே...? 'கெஸ்ட் ஹவுசில்' என்று சித்தி சொன்னது நினைவுக்கு வந்தது.

சுற்றும் முற்றும் பார்த்தாள்.

அது சற்று ஒதுக்குப்புறமான தெருதான் என்றாலும் தெருமுனையில் நின்றிருந்த ஓர் ஆட்டோவிலிருந்து யாரோ இறங்கிக் கொள்ள, ஆட்டோ உயிர் பெற்றுத் திரும்பி, பானுமதியிடம் வந்து நின்றது. ''வேணுமாம்மா?'' என்று கேட்டான் ஆட்டோ ஓட்டி.

இதில் போய் விடலாம். ஆனால் பணம்? நேரே வீட்டுக்குப் போய், சித்தியிடம் சொல்லிவிட்டுப் பணமும் எடுத்துக்கொண்டு இந்த ஆட்டோவிலேயே ராஜேந்திரனிடம் போய்விடலாம். மற்றபடி இதை விட்டுவிட்டால் குட்டி குட்டி வீடுகள் அடங்கிய இந்த எக்ஸ்டன்ஷனில் ஆட்டோ கிடைப்பது அசாத்தியம்.

அவள் யோசிக்குமுன் ''பக்கத்துத் தெருவானாக்கூடப் பரவாயில்லையம்மா. ஒத்த ரூபா கொடுங்க போதும். திரும்பி சும்மா போனா பெட்ரோல் செலவு வயித்தில் அடிக்கும். சும்மாவே சாப்பாட்டுக்குக் கூடத் தேறலை'' என்று கெஞ்சினான் ஆட்டோ ஓட்டி.

இளகிப்போய், ''ஒற்றை ரூபாய் என்ன, மேலே நிறையவே போட்டுத் தருகிறேன். முதலில் பக்கத்துத் தெருக் கடைசிக்குப் போக வேண்டும். பிறகு ரொம்ப தூரம் போக வேண்டும்'' என்று ஆட்டோவில் ஏறினாள் பானுமதி.

ராஜேந்திரனைப் பார்த்ததும் எப்படிப் பேசுவது, என்ன சொல்வது என்று யோசித்துக் கொண்டிருந்த பானுமதி அடுத்த தெருவில் திரும்பாமல் ஆட்டோ நேரே செல்வதை உணர்ந்து, ''டிரைவர், திருப்பத்தை விட்டு விட்டீர்கள். பக்கத்துத் தெருவுக்குப் போக வேண்டும் என்றேன், ஆட்டோவைத் திருப்புங்கள்'' என்றாள்.

''நீ சொன்னே, சரிதாம்மா. ஆனா எங்க பாஸ் சொல்லலியே'' என்று உரைத்தபடி வேகத்தைக் குறைத்தான் ஆட்டோ டிரைவர்.

அந்தப் பேச்சில் திகைத்து, பானுமதி இறங்க முற்படு முன் ஆட்டோவின் இருபுறமுமாக இருவர் ஏறி, பானுமதியின் இருபக்கத்திலும் அமர, ஆட்டோ முழு வேகத்தில் பறந்தது.

த்ரில் கதைகளில் வருகிற 'கிட்நாப்பிங்!'

உதவிக்காகக் கத்தத் தொடங்கிய பானுமதியின் வாயை ஒருவன் கை பொத்தியது.

பக்கத்திரைகளை மின்னல் விரைவுடன் இழுத்துவிட அடுத்தவன், பளபளத்த ஒரு கத்தியைக் காட்டினான் ''மூச்சு விட்டால் கொன்று விடுவேன்'' என்று கூறியபடி.

இந்தக் கத்திக்குப் பயந்து வாயை மூடிக் கொண்டிருந்தால் மட்டும் அவளை விட்டுவிடுவார்களா? அவளது விருப்பத்துக்கு மாறாக கடத்துகிறவர்கள் எப்படியும் அவளது நன்மைக்காக அதைச் செய்கிறவர்கள் இல்லை. அவளைக் கொண்டுபோய் என்ன செய்வார்களோ? ராஜேந்திரனை இனி பார்க்கவே முடியாமல் போய் விடுமோ?



திகிலால் கைகால்கள் நடுங்கியபோதும், திமிறிக் கொண்டு குதிக்க முயன்றாள் பானுமதி.

அப்போது அவளது பின்னந்தலையில் ஓர் இடி இறங்கியது போல உணர்ந்தாள். மறுகணம் ஒன்றும் தெரியாத மையிருட்டு அவளைச் சூழ்ந்து கொண்டது.

மறுபடி அவளுக்கு உணர்வு வந்தபோது, அவளுக்குப் பிடிக்காத ஏதோ ஒரு வாசனை அவளது மூக்கைத் துளைத்தது.

பீடிப்புகை.

மூக்கைச் சுருக்கியபடி தலையை மறுபுறம் திருப்பினாள்.

''அண்ணாத்தே, சிட்டு முளிச்சிட்டுது'' என்ற குரல் கேட்கவும் தூக்கிவாரிப் போட்டுக்கொண்டு எழுந்தாள்.

மாலை வெயில் மறைந்து வெளிச்சம் மங்கிக் கொண்டு இருந்தது.

அவள்... அந்த ஆட்டோ... கடவுளே. இது என்ன இடம்? யார் இவர்கள்? அவளை ஏன் இங்கே கொண்டு வந்தார்கள்.

அவளது கேள்விகளுக்குப் பதில் கூறுவான் போல் அவர்களில் ஒருவன் அவள் அருகே வந்தான்.

''என்னைத் தெரிகிறதா?'' என்று கேட்டான்.

# 6

**பா**னுமதி அப்போது வெகுவாக மிரண்டு போயிருந்தாள்.

ரகுபதியின் வீட்டருகே அவள் அந்த ஆட்டோவில் ஏறியபோது மணி மிஞ்சி மிஞ்சி ஐந்துதான் இருக்கும்.



வெளிச்சத்தை வைத்துப் பார்த்தால் இப்போது மணி ஆறு... ஆறரை கூட இருக்கலாம்.

இதில் எவ்வளவு நேரம் ஆட்டோ ஓடியது?

அவளுடைய கணவனை விட்டு எவ்வளவு தூரம் அவளைப் பிரித்துக் கொண்டு வந்திருக்கிறார்கள்?

ஆள் நடமாட்டமே இல்லாத இந்த இடத்துக்கு எதற்காகக் கடத்தி வந்திருக்கிறார்கள்?

எத்தனையோ படங்களில் பார்த்த 'காங் ரேப்' அது இது என்று என்னென்னவோ நினைவு வந்து அவளைப் பயமுறுத்தின.

இவர்கள் மூவரிடமிருந்தும் தப்பி ஓடுவதும் முடிகிற காரியம்" போலத் தோன்றாததால் ரொம்பவும் அரண்டு போனாள்.

எனவே அவர்களுள் ஒருவன் மட்டும் அருகே வரவும் கைகால் நடுங்க அச்சத்துடன் எழுந்து நின்றாள்.

''என்னம்மா, பொண்ணு. என்னைத் தெரியாதா?'' அவன் சற்று கிண்டலாகக் கேட்கவும் பயத்துடனேயே அவன் முகத்தைப் பார்த்தவளுக்குச் சற்றே நடுக்கம் குறைந்தது.

''நீ... நீங்கள் ரகுபதியின் சினேகிதர் தானே... மணி... என்று பெ... பெயர்...'' என்றாள் மெல்லிய குரலில்.

''ஆ... ங்...'' என்று உரக்கச் சிரித்தான் அவன். ''கண்டு பிடிச்சிட்டியே, கண்ணு. பெரிய பணக்காரவூட்டம்மா, அடையாளம் தெரியுமோ என்னமோன்னு நினைச்சேன். சும்மாவா சொன்னாங்க, அடி உதவுற மாதிரி அண்ணன் தம்பி உதவ மாட்டாங்கன்னு. பின்னந் தலையிலே ஒரு அடி, நீங்க நாங்கன்னு என்ன மரியாதையப்பா!'' என்று மீண்டும் சிரித்தான்.

மணியின் குரலில் இருந்த அவமதிப்பும் ஏளனமும் அவளுக்கு உறுத்தின.



சற்று திடத்தை வரவழைத்துக் கொண்டு, ''ஏன் அப்படிச் சொல்கிறீர்கள்? நான் ஒரு நாளும் உங்களை அலட்சியம் செய்தது இல்லையே. ரகுபதியின் சினேகிதர் என்று மரியாதையுடனேயே தானே நடந்திருக்கிறேன்?'' என்று கேட்டாள் பானுமதி.

''யாருன்னு?'' என்று கேட்டான் அவன்.

புரியாமல் ''ரகுபதியின் சினேகிதர் என்று...'' என்று திரும்பச் சொன்னாள் பானுமதி.

''ஆமாம், நானு ரகுபதியோட சினேகிதன், நல்லா நினைவு வச்சுக்க. அவன் அப்பா ஆயி எல்லாம் வெறும் பொட்டைங்க. அதனாலேதான் ரகுபதியோட சினேகிதன், நான் அவன் சாவுக்காகப் பழிவாங்கப் போறேன். அதுக்குத் தான் தூக்கியாந்தேன். அவனைக் கொன்ன உன்னை...''

''இல்லை... இல்லை... ரகுபதியை நாங்கள் ஒன்றும் செய்யவில்லை, அது ஒரு விபத்து...''

''ஏய்...'' என்ற அதட்டலில் பானுமதியின் பேச்சு நின்றது. ''என்னையும் காதிலே பூ சுத்தினவன்னு நினைச்சியா? ஊருக்குக் கட்டின கதையை என்கிட்டவும் சொல்றியா? கொன்னுடுவேன்'' என்றான் மணி ஆத்திர வெறியுடன்.

ராஜேந்திரனிடம் பதிலுக்குப் பதில் தூக்கி எறிந்து பேசிய வாய் இப்போது அடைத்துப் போயிற்று. வேண்டும்... அவளுக்கு நன்றாக வேண்டும். நல்லவர்களைச் சொன்னால் அப்படித்தான், கைமேல் கிடைக்கும். அவனிடம் மன்னிப்பு கேட்கும் வாய்ப்பு இந்தப் பிறவியில் கிடைக்குமா? இந்த முரடன் அவளை என்ன செய்யப் போகிறான்? கொலை, கொலை என்றானே, அவளையே கொன்றுவிடப் போகிறார்களா?

''நல்லா கேட்டுக்கடி, ரகுப்பையன் விபத்திலே சாகலை. அவன் வேணுமின்னே லாரிக்குள்ளாறப் பூந்து தற்கொலை

பண்ணிக்கிட்டான். சாகிற வயசா அவனுக்கு: ஆனாலும் செத்துட்டான். காரணம் நீ... அதுக்கு உன்னைப் பழி வாங்கணுமின்னு நினைச்சுகிட்டே இருந்தேன்.''

''என்னமோ, நம்ம தோஸ்த் வீடு. ஓர் ஆத்திரம் அவசரத்துக்கு உதவியா இந்தச் சமயத்திலே பக்கத்திலே இருக்கலாமின்னுதான் வண்டியை அந்தப் பக்கமா சும்மா நிறுத்தி வச்சிருந்தேன். அதுவே வசதியா கும்பிடப்போன சாமி குறுக்க வந்தாப்பல நீ வந்து மாட்டினே பாரு. லபக்குனு கொணாந்திட்டேன்...''

அவன் நினைவு வேறெங்கோ ஓடியது போலும். நெற்றி யில் ஓங்கி அறைந்து கொண்டான்.

''நானும் மூளை கெட்டவன்தான். இதை அன்னைக்கே செய்திருந்தேன்னாக்க ரகுப்பையன் இன்னிக்கு உசுரோட இருந்திருப்பான். எத்தன வாட்டி கேட்டான், எப்படியாச்சும் அவளைக் கடத்திக் கொணாந்து எங்கிட்ட ஒப்படைச்சுடு. நான் அவளை ரேப் பண்ணிடுறேன். அப்புறம் வேற வழியில்லாத என்னையே கட்டிக்குவான்னு கெஞ்சி னானே...''

ரேப்பா? அவளையா? என்ன துணிச்சல்? சுர்ரென்று வந்த கொதிப்பைக் காட்டும் துணிவின்றிப் பேசாமல் நின் றாள் பானுமதி.

''என்னமோ, எனக்குத்தான் இந்த ரேப்பெல்லாம் அன் னிக்கு மனசு ஒத்துக்கிடலை. ஏதோ, அன்னைக்கு உங்கூட் டுக்காரன் ஆள் வச்சு மிரட்டினப்போ வந்து நின்னான். பெரிசா காயம்பட்ட மாதிரி மேக்கப் போடணுமின்னான். சரின்னு நம்ப கோடம்பாக்கம் கஸ்டமர் மூலம் செட்டப் பண்ணினேன். அது வேற... ஏதோ நீயே அந்தாளை முரடன்னு ஒத்துக்கிட்டயானா சரிதானேன்னு நினைச்சு செய் தேன்.''

'ஆக அது வேடம்தான். ரத்தம் இல்லை. சிவப்பு மையே தான். அப்போதெல்லாம் வேலை செய்த மூளை



யைப் பிறகு துருப்பிடிக்க ஏன் விட்டேன்' என்று தன்னையே நொந்து கொண்டாள் பானுமதி. பழி என்றானே, என்ன செய்யப் போகிறானோ என்று மனம் தவியாய்த் தவித்தது.

இன்னொரு பீடியைப் பற்ற வைத்துக் கொண்டு அவன் தொடர்ந்தான். ''எனக்கு இன்னொரு யோசனை வேற. இந்தக் காலத்தில வெறும் ஒருத்தன் தன்னைக் கெடுத்திட் டான்னு அவனையே கட்டிக்கிறது இல்லை. ஒன்று ஓசைப்ப டாம மறைச்சுடுவா. இல்லாட்டி போலீசுக்குப் போயிடுவா. அப்படி ஏதும் போய் தொலைஞ்சியானா, பத்து வருஷம் தீட்டிருவாங்களேன்னு பயந்தேன்.

''துபாய் வேலை வேற. அங்கே வேலை வாங்கிக் கொடுத்துக் கண்காணாத தூரத்துக்கு விரட்டறான். ஊட்டு ஆளுங்களும் கூட்டாயிட்டாங்கன்னு ரகுபதி சொல்லிச்சு. நான் வேற நினைச்சேன். அந்தத் தொலைவு போனாக்க, உன்னை மறந்துருவான். ரெண்டு வருஷ சம்பாத்தியம் கைநெறைய இருக்கும். வேற அழகான பொண்ணைக் கட்டிக்கிட்டு சந்தோசமா இருப்பான்னு நெனைச்சேன். ஏமாந் துட்டனே'' என்றான் சிவாஜி ஸ்டைலில்.

'நானும்தான், நானும்தான் ஏமாந்துவிட்டேன்' என்று உள்ளூரப் பதைத்தாள் பானுமதி? 'தொலைதூரம்' துபாய் என்று தெரியாமல் ஏதேதோ எண்ணி ஏமாந்துவிட்டேனே. இப்போது என்ன கதி ஆகப் போகிறேனோ. கடவுளே!

''உயிரை விட்டாவது உங்க சந்தோஷத்தைக் கெடுப் பேன்னு சொன்னான். அப்பவும் பாவி நான்... நான் பெரிசா நினைக்கலையே? இன்னைக்கு உயிரையே விட்டு விட் டானே...'' என்று கண்கலங்கினான் மணி.

பழிவாங்கப் போவது எப்படி என்பது அடுத்து வரப் போகிறது. ரகுபதியிடம் இவன் எவ்வளவு பாசம் வைத்திருக் கிறானோ, அவ்வளவுக்கு அவ்வளவு அதிகமாக... மூச்சைக் கையில் பிடித்துக்கொண்டு காத்திருந்தாள் பானுமதி. கைவி ரல்களை இறுக மூடிக் கை நடுக்கத்தைக் குறைக்க முயன்றாள்.



கண்ணைத் துடைத்துக்கொண்டு நிமிர்ந்தான் ஆட்டோ மணி.

''இன்னா படிச்சிருந்தும் ஒரேயொரு விஷயத்திலே ரகுப்பையன் பச்சைப் புள்ளைதான். செத்தாவது உங்க சந்தோஷத்தைக் கெடுப்பேன்னானே, இவன் செத்தால் உங்க சந்தோஷம் எப்படிக் கெடும்? அய்யோ பாவமின்னு ஒரு வார்த்தை, மிஞ்சினா ஒரு சொட்டுக் கண்ணீர் ராத்திரியானா துடைத்துப் போட்டுவிட்டு அவனோடு படுக்கப்போய் விடு வேன்னு அவனுக்குத் தெரியலை பாரு.

''ஆனா அதை மட்டும் நான் நடக்கவிடமாட்டேன். ரகு செத்தாப்பல உன்னையும் ஸ்பீடா ஓட்டி ஆட்டோவை ஏத்தியே கொல்லலாமின்னு நினைச்சேன். ஆனா பசங்க வேணாமின்றானுங்க. எங்கயாச்சும் ஒரு முடி, ரத்தம் ஒட்டியி ருந்து காட்டிக் கொடுத்திடுமாம். நானும் யோசிச்சேன். அப்படி பொட்டுனு சாவடிக்கிறதுல என்னா பெரிய பழி வாங்குறது இருக்கு? நீ உயிரோடு இருந்து நிமிஷம் தவறாம வேதனைப்பட்டியானா, அதுதான் பழி தீர்த்தாப்பல இல் லையா?

''இங்க, கோடம்பாக்கத்திலே, கிராக்கி அழைத்துப் போகிற இடம் ஒன்று இருக்குது. எப்பேர்ப்பட்ட கற்புக்கரசி யையும் அந்தம்மா மடக்கிடுவா. உன்னை மாதிரிப் பொண் ணைக் கொண்டுபோய் விட்டா கையிலே குறைந்தாலும் ஐயாயிரம் தருவா. உன்னையும் குறைந்தது ஒரு பதினைந்து வருஷம் சாறு பிழிந்துவிட்டு சீக்கோடு தெருவுக்கு துரத்தி டுவா. தலைமுறை தலைமுறையாத் தொழில் செய்யறவங்க. வெளியே எட்டிப் பார்க்கக்கூட விடமாட்டாங்க. தினம் தினம் அஞ்சாறு வாட்டி அசிங்கப் பட்டு, மனசு நொந்து நீ சருகா, சாக்கடையா...''

''நோ!'' என்று கதறிவிட்டாள் பானுமதி.

மணியின் பேச்சினால் மனதில் விரிந்த பயங்கரக் காட்சியில் கண்ணை இருட்டிக்கொண்டு வந்தது அவளுக்கு.



கூடவே தளர்ந்த மற்ற புலன்களையும் வெகு சிரமப் பட்டு இயல்புக்குக் கொண்டு வந்தாள்.

இது மயங்கி விடுகிற நேரமல்ல.

பழம் நழுவிப் பாலில் விழுந்து அது நழுவி வாயில் விழுகிற மாதிரி மணியின் திட்டம் எளிதாக நிறைவேற அது வசதியாகிப் போகும்.

இப்போது ராஜேந்திரனுடைய மனைவிக்கு எந்தவிதக் களங்கமும் ஏற்பட்டுவிடாமல் காக்க வேண்டும். காப்பாற் றியே ஆகவேண்டும்.

ஆனால் இங்கே அவளைக் காப்பாற்ற யாரும் வர மாட்டார்கள். தன்னை அவள் தானாகவே தான் காத்துக் கொண்டாக வேண்டும். அதில் தோற்றால் சர்வநாசம் என்பது மட்டும் தெளிவாகத் தெரிந்தது.

மரணபயம் தருகிற வலிமை, மூழ்குகிறவனின் பலம் என்று பெரும் சக்தி ஒன்று உண்டு.

அந்த சக்தி தந்த வலுவுடன் அங்கிருந்த மூவருக்கும் எதிர்த்திசையில் கல்முள் தெரியாமல் மின்னல் வேகத்தில் ஓடத் தொடங்கினாள்.

''அட, இங்கே எங்கடி ஓடிவிடுவே?'' என்ற ஓர் அலட்சியத்துடனேயே மூவரும் அவளைப் பின் தொடர்ந்த னர்.

மணிக்கணக்காக ஓடிக்கொண்டே இருப்பதுபோல ஓர் உணர்வு அவளுக்கு உண்டாயிற்று. கால்கள் துவளத் தொடங் கின. தொண்டை வரண்டு போயிற்று. பின்னே விரட்டுகிறவர் கள் நெருங்கிக் கொண்டு இருப்பது புரிந்தது.

கடைசியில் அவ்வளவுதானா என்ற நிராசையுற்ற அந்த வேளையில் அவளது மூச்சிரைப்பை மீறிக் கொண்டு அவ ளது காதுகளில் வேறு ஓர் ஓசைகேட்டது.

ஏதோ ஒரு வாகனம்... கார்... ஜீப்...

மீண்டும் மூச்சைப் பிடித்துக் கொண்டு ஓடினாள்.

சற்று தூரத்தில் குறுக்காக அந்த வாகனத்தின் முன் விளக்கு ஒளி தெரிந்தது.

உரக்கச் சத்தமிட்டு அழைக்க அவள் தொண்டையில் ஈரமில்லை. நின்று சமாளித்துக் கத்துமுன் அவர்கள் பிடித்து வாயைப் பொத்தி விடலாம்.

அப்படி மாட்டிக் கொள்வதை விட, அந்த வண்டியின் முன்னே விழுந்து அடிபட்டு சாவதுகூட மேல் என்று முடிவெடுத்து வண்டியைக் குறிவைத்து ஓடினாள்.

திடுமெனக் குறுக்கிட்டு, வண்டியில் மோதி விடுகையில் அவள் காதுகளில் விழுந்த கடைசி சத்தம், அந்த வண்டியின் கிறீச்சிட்ட பிரேக்கின் ஓசைதான்.

பானுமதி மோதிக்கொண்டு விழுந்த வாகனம் ஒரு போலீஸ் ஜீப்.

ஜீப் நல்ல கண்டிஷனில் இருந்ததாலோ அல்லது அதை ஒட்டி வந்தவரின் சாமர்த்தியம் காரணமாகவோ, அதிர்ச்சி தவிர பானுமதி அதிக அடிபடாமல் தப்பித்தாள்.

ஆனால் அந்தப் போலீஸ் ஜீப்பையும் அதிலிருந்து இறங்கிய ராஜேந்திரனையும் அவளைப் போலவே அவளைத் தொடர்ந்து துரத்தி வந்த மற்ற மூவரும்கூட எதிர்பார்க்கவில்லை.

நிலைமை உணர்ந்து திரும்பி ஓடும்முன் ஜீப்பில் வந்த போலீசார் மணியையும் அவனுடைய சகாக்களையும் மடக்கிப் பிடித்து விட்டனர்.

அவர்கள் மூவரையும் போலீஸ் லாக்கப்பில் அடைத்த போது, காவல் நிலையத்தில் பானுமதி ஒரு தரம் நடந்ததையெல்லாம் கூற வேண்டியிருந்தது.

எப்படி சமயத்தில் வந்து அவளைக் காப்பாற்றினார்கள்? ராஜேந்திரன் அவர்களோடு வந்தது எப்படி? என்றெல்லாம் கனவுகள் மனதில் தோன்றியபோதும் அதை யெல்லாம்



கேட்டுத் தெரிந்து கொள்ளும் தெம்போ ஊக்கமோ இல்லாமல் இன்ஸ்பெக்டர் கேட்க கேட்க ஒருவாறு தன் கதையைக் கூறி முடித்தாள்.

எல்லாவற்றையும் கேட்ட இன்ஸ்பெக்டர் ஏளனமாகச் சிரித்தார்.

''சினேகிதன் சாவுக்குப் பழிவாங்க வந்தானாமா? ராஸ்கல். மனது ஒடிந்து தற்கொலை செய்துவிட்டான் என்கிறாயே, உன் அழகான நண்பன் கமிஷனருக்கு என்ன எழுதியிருக்கிறான் தெரியுமா? மிஸ்டர் ராஜேந்திரன் அவனைக் கொல்ல முயற்சிப்பதாகவும், நண்பனின் மோட்டார் சைக்கிளில் தப்பி ஓடப் போவதாகவும், செத்துப் பானால் அது இவர் செய்த கொலையாகத்தான் இருக்கும் என்றும் எழுதியிருக்கிறான். கேட்டுக்கொள்.''

எல்லோருக்குமே அதிர்ச்சிதான் என்றாலும் பானுமதியின் திகைப்பு இரு மடங்கு. இவ்வளவு நாள் பழகிய ரகுபதி முற்றிலும் அன்னியமாய்த் தெரிந்தான்.

அவன் தந்தையின் பேச்சு நினைவு வந்தது. கூடவே அவர் வாய்விட்டுக் கூறமுடியாமல் தவித்த காரணமும் புரிந்தது.

ராஜேந்திரனைப் பொறுத்தவரையில் அவன் ரகுபதியின் வீட்டினருக்கு எந்த வகையிலும் கடன்பட்டவன் அல்ல. இருந்தபோதும் அந்த வீட்டில் ஒரு சலனம் தன்னால் ஏற்பட்டது என்கிற ஒரே காரணத்துக்காக அவர்களுக்கு அவன் எத்தனையோ வகையில் உதவியிருக்கிறான். அப்படி இருக்க, காப்பாற்ற நீட்டிய கையைக் கடிப்பதுபோல இருந்திருந்து அவனைப்போய் இவ்வளவு பயங்கரமாகப் பொய்க் குற்றம் சாட்டியிருக்கிறானே.

சித்தியை, அப்பாவை, ஏன், அவளையும் கூடப் பழி வாங்க என்று ரகுபதி ஏதேனும் செய்திருந்தால் அதை ஒருவாறு ஒத்துக் கொள்ளலாம். ஆனால், பானுமதிக்கு ரகுபதியிடம் இருந்த கொஞ்சநஞ்ச அனுதாபமும் மறைந்து போயிற்று.



ஆனால் இப்படி ஒரு கடிதம் ரகுபதி எழுதிவிட்ட மட்டில், தொடர்ந்து அவனும் இறந்துவிட்டதால் புதிதாக ஏதும் பூதம் தோன்றுமோ என்று அச்சம் பிறந்தது அவளுக்கு.

கலக்கத்துடன் இன்ஸ்பெக்டரை நோக்கவும், அவர் லேசாகக் கையசைத்தார். ''பயப்பட ஒன்றும் இல்லை அம்மா. ஒட்டு மொத்தமாக பஸ்ஸில், லாரியில் இருந்து நேரில் பார்த்த அத்தனை பேர் சாட்சியமும் ரகுபதியின் மரணம் விபத்து என்கிறது. ரகுபதியின் அப்பா அந்த லெட்டர் பற்றித் தெரிந்ததும் அலறி விட்டார். உங்கள் கணவரின் கையைப் பிடித்து மன்னிப்புக் கேட்டதோடு, சாருக்கு சாதகமாக ஒரு ரிப்போர்ட் கொடுத்திருக்கிறார்.

''ஆனால் இப்படி ஒரு கடிதம் வந்துவிட்டதால் அதற்குரிய நடவடிக்கையாக நாங்களும் விசாரித்து, விளக்கம் எழுதி ஃபைலை மூடி முடித்துவிட்டோம். இனியேனும் கவலையற்று, புதுமணத் தம்பதிகளாய் லட்சணமாய் சந்தோசமாக இருங்கள்'' என்று வாழ்த்தி வழி அனுப்பி வைத்தார்.

கார் கிளம்பியதும், ''நீ எங்கே செல்லக் கிளம்பியதாகச் சொன்னாய்?'' என்று சாலையைப் பார்த்தபடி கேட்டான் ராஜேந்திரன்.

''கெ... கெஸ்ட் ஹவுசுக்கு...'' என்றவளுக்கு குரலே எழும்பவில்லை.

ரகுபதி மட்டுமா அநியாயக்காரன்? அவனைவிட அவன் எவ்வளவு மோசம்! முகத்துக்கு நேரே என்னவெல்லாம் சொல்லி விட்டான்!

அப்படியும் அவளைக் காப்பாற்றி அழைத்துப் போகிறானே! அவனால் அவளை எப்படி மன்னிக்க முடிந்தது.

...அல்லது மன்னிக்கவில்லையோ? அவன் குரல் சரியில்லையே! தாலி கட்டிவிட்ட கடமைக்காகத்தான் காப்பாற்றினானோ?



கார் தந்தை வீட்டின்முன் நிற்கவும் பானுமதி பெரிதும் அடிபட்டுப் போனாள். இங்கே தள்ளிவிட்டுப் போய்விடப் போகிறானோ?

நிராசையுற்றவளாக சோர்வுடன் கார்க் கதவில் கை வைத்தபோது, ''காரிலேயே இரு'' என்று பணித்துத் தான் மட்டும் இறங்கி உள்ளே சென்றான் ராஜேந்திரன்.

திரும்பி வந்தபோது அவன் கையில் ஒரு பை இருந்தது. அதைப் பின் சீட்டில் வீசிவிட்டு, கூடவே வந்த கனகத்திடம் ஒரு சுருக்கமான, ''வருகிறோம்'' என்று கூறிவிட்டு உடன் மீண்டும் காரை ஓட்டத் தொடங்கினான்.

சற்றே நிம்மதியுற்று, ஓரக் கண்ணால் அவன் முகத்தை நோட்டம் விட்டாள் பானுமதி.

அவனது கவனம் முழுமையும் சாலையில் இருப்பது போலத் தோன்றியது.

கண்களைச் சுற்றித் தெரிந்த கருநிறமும், சிறு சுருக்கங்களும் இரண்டு நாட்களாக அவன் அனுபவித்த அல்லல், அலைச்சல்களைப் பறைசாற்றின.

இந்த நேரத்தில் ஊக்கம் தரும் சத்துணவாக இருந்திருக்க வேண்டியவள் தன் பங்குக்குக் கொத்திக் குமுறினானே!

கெஸ்ட் ஹவுசின் முன் சிறு ஆரன் ஒலியுடன் கார் மெல்லத் தயங்குமுன் விழுந்தடித்துக் கொண்டு வந்து கதவைத் திறந்தான் காவலாள்.

போர்டிகோவில் காரை நிறுத்துமுன் தயாராக நின்று கார்க் கதவைத் திறந்தான் ஒருவன்.

பின்னே கை நீட்டிப் பையை எடுத்துக் கொண்டு இறங்கி, ''காரை காரேஜில் நிறுத்திவிட்டு நீ போகலாம்'' என்று பணியாளுக்கு வீடு திரும்ப அனுமதி வழங்கினான் ராஜேந்திரன்.

'வா' என்பதுபோல ஒரு தலையசைப்புடன் அவன் வீட்டினுள் செல்ல பானுமதியும் பொம்மையாய்ப் பின் தொடர்ந்தாள்.

ஹாலை ஒட்டியிருந்த பக்க அறை ஒன்றினுள் சென்று அங்கிருந்த கதவைச் சுட்டிக் காட்டினான்.

''பாத்ரூம். வெண்ணீரில் குளித்தாயானால் அலுப்பு தீரும். தூக்கம் நன்றாக வரும். இதோ பையில் உனக்கு நைட்டி, பிரஷ் எல்லாம் இருக்கின்றன'' என்று அவள் வீட்டிலிருந்து கொண்டு வந்த பையை அவளிடம் கொடுத்து விட்டு வெளியேறினான்.

கண்ணைக் கரித்துக்கொண்டு வந்தது அவளுக்கு. பானுமதி என்ற ஓர் அழைப்புக்கூடப் பஞ்சமாகி விட்டதே!

கட்டாயம் அவன் மனம் வெறுத்துத்தான் போயிருப்பான். ரத்த உறவுகளே சில மனவேறுபாடுகளில் விரோதிகள் ஆகிவிடுகிறபோது இவ்வளவு துன்பம் தந்தவளிடம் தாலிகட்டிய ஒரு காரணத்துக்காக மட்டும் பிரியம் எப்படி நிலைக்கும்?

சற்று நேரம் அழுதுவிட்டு, ஒருவாறு அவள் குளித்து முடித்துவிட்டுத் திரும்பி வந்து பார்த்தபோது ராஜேந்திரனும் லுங்கி ஜிப்பாவுக்கு மாறியிருந்தான்.

கணவன் அறியாமல் சற்றுநேரம் அவனையே கவனித்தாள் பானுமதி.

இவனிடம் இந்த இறுக்கம் அவள் அறியாதது. புருவச் சுளிப்புகூடப் புதியதுதான். இவனிடம் என்னவென்று விளக்கி எப்படி மன்னிப்புக் கேட்பது?

திடுமென நிமிர்ந்தவன் அவளைக் கண்டதும் எதிரில் இருந்த டீபாயைக் காட்டினான்.

''பால் சூடு பண்ணியிருக்கிறேன், ஒரு கப் எடுத்துக் கொள்'' என்றான்.

அவள் உதட்டைக் கடித்துக் கொண்டு அசையாமல் நிற்கவும் எழுந்து, ''இங்கே வா'' என்றான் மெதுவான குரலில்.

இரண்டு எட்டு எடுத்து வைத்தவள் சற்றுத் தடுமாறவும் சட்டென அவளை அணுகி, அணைத்துக் கொண்டான்.



பானுமதிக்குக் கண்களில் மடைதிறந்தது. ''சாரி... சாரி... நான் மடத்தனமாய்... ரொம்பவும் முட்டாள்தனமாய் உங்களை... ரொம்பவும் அநியாயமாய் என்னென்னவோ... ரொம்ப சாரி... என்னை மன்னித்து...'' எவ்வளவோ சொல்ல நினைத்து ஒன்றும் இயலாமல் விம்மலும் விக்கலுமாகத் திணறினாள் அவள்.

வெறுமனே மனைவியின் முதுகை வருடியபடி சற்று நேரம் அவளை அழவிட்டவன், அவளை மெல்ல வாஷ்பேசின் அருகே அழைத்துச் சென்று, தானே முகம் கழுவி விட்டான்.

பேசின் அருகே மாட்டியிருந்த சிறுவெண்ணிற டவலால் மிருதுவாக ஒற்றி முகம் துடைத்து, ''அப்போது நீ அலுத்திருந்தாய், மிகவும் களைத்திருந்தாய். அது தெரிந்தும் ஏதேதோ பேசி உன்னைச் சீண்டிவிட்டது என் பிழை. அதற்கு நான்தான் உன்னிடம் மன்னிப்புக் கேட்க வேண்டும்'' என்றான் இதமான குரலில்.

இதற்கே வருத்தம் தெரிவிக்கிறான். அவளானால் என்னவெல்லாம் சொல்லிவிட்டாள். உலகில் மிகப் பெரிய குற்றங்கள் - கற்பழிப்பு, கொலை என்று எதையும் விடவில்லையே!

மீண்டும் பானுமதியின் உதடு நடுங்கவும், ஒரு விரலை அவளது பட்டிதழ்களின் மேல் வைத்து, ''ஊகூம்... முழு கோட்டாவும் அப்போதே முடிந்து விட்டது. இனி அனுமதி இல்லை'' என்றான் ராஜேந்திரன்.

அவள் திகைப்புடன் நிமிரவும், ''அழுகையைச் சொன்னேன். வாழ்வு முழுமைக்கும் அதன் கோட்டா முடிந்து விட்டது. இனி இந்தக் கண்களில் கண்ணீர் வர பெர்மிட் இல்லை'' என்று முறுவலித்தான் அவன்.

அவன் அவளைக் குற்றவாளியாகவே கருதவில்லை!

நம்பமாட்டாமல் அவளது விழிகள் அகலுகையில் வெளியே சாலையில் ஓர் ஆட்டோ ரிக்ஷா கியர் மாற்றி விரையும் ஓசை கேட்கவும் பானுமதி திடுக்கிட்டாள்.



''அந்த ஆள்... அந்த ஆட்டோ மணி உங்களுக்கு ஏதாவது தீ... தீமை செய்தால்...''

அச்சத்துடன் அவள் பேசுகையில் இடைமறித்து, ''செய்யமாட்டான்'' என்றான் அவன் தீர்மானமாக.

''அதெப்படி நிச்சயமாய்ச் சொல்ல முடியும்?'' என்றாள் அவள் கலக்கம் குறையாமல்.

''நிச்சயமேதான். மணிக்கும் அவனுடைய கூட்டாளிகளுக்கும் கொஞ்சம் நன்றாக சாத்துபடி செய்யச் சொல்லியிருக்கிறேன். கூடவே, இனி நமக்கு எந்தவிதத் துன்பம் நேர்ந்தாலும் அவனைத்தான் பிடிக்க நேரும் என்று மிரட்டும்படியும் கூறியிருக்கிறேன். இன்று உன்னை எப்படிக் கண்டுபிடித்தேன் என்று நினைத்தாய்? அந்த ஆட்டோ நம்பர், அதில் உன்னைக் கடத்தியது, சென்ற திசை... எல்லாம் தெரிந்தது எப்படி என்று தெரிகிறதா?''

''எப்படித் தெரியும்?''

அவளது நடமாட்டங்களை உளவு பார்க்கவென்று யாரையாவது ராஜேந்திரன் ஏற்பாடு செய்திருந்தால் தவிர வேறு எப்படித் தெரிய முடியும்?

ஆனால் மனைவியை நம்பாமல் உளவுபார்க்கிற ஈனத்தனம் ராஜேந்திரனுக்கு இருக்கவே முடியாது.

சற்று யோசித்துவிட்டுப் புரியாமல், ''எப்படி?'' என்று திருப்பிக் கேட்டாள் பானுமதி.

''ஊகூம். இன்னமும் பானுவும் மதியும் பெயரில் மட்டும்தான்'' என்று வேடிக்கையாகக் கூறி அவளது தோளை லேசாக ஒரு தரம் உலுக்கிவிட்டு, ''நீ செல்லுமிடம் எல்லாம் பின்தொடர்ந்து கண்காணிக்க ஓர் ஆளை நியமித்திருந்தேன்'' என்று இலகுக் குரலில் விளக்கினான் ராஜேந்திரன்.

சட்டென நெஞ்சுக்குள் வலித்தது அவளுக்கு.

அந்த அளவு கீழே இறங்குகிறவன் அவன் இல்லை என்று அவள் இப்போதுதான் முடிவு செய்தாள், அவனே சொல்கிறானே!



''உளவு'' என்றவளின் குரலில் பேதம் தொனித்தது.

''உளவு!'' அவளைச் சற்று விலக்கி நிறுத்தி நேராகப் பார்த்தான் ராஜேந்திரன். ''நம் ஜனாதிபதி, பிரதம மந்திரியெல்லாம் வெளியே வரும்போது அவர்களோடு கூடவே, விழிகளைச் சுழலவிட்டபடி சிலபேர் வருவார்களே, டி.வி.யில் பார்த்ததில்லை? அவர்கள் நம் ஜனாதிபதியையும் பிரதம மந்திரியையும் உளவு பார்க்கவா கூட வருகிறார்கள்? பாடிகாட். மெய்க்காவலர்கள். அந்தக் காலத்திலிருந்து நடைமுறையில் இருந்து வருகிற ஒரு பழக்கம்.

''பானு, நீ என் மனைவி. எனக்கு என் உயிரை விடவும் முக்கியமானவள் நீ. உன்னைப் பாதுகாப்பதென்று உனக்கு மெய்க்காவல் நான் வைக்கக்கூடாதா? அப்படி வைத்திராவிட்டால் இப்போது நம் கதி என்ன ஆகியிருக்கும்?''

இன்னமும் 'நம் கதி' என்று அவளையும் சேர்த்தே பேசுகிறான் அவன். ஆனால் இந்த மடமனம் மட்டும் ஏன் தப்பையே தேடிப் பாய வேண்டும்?

உதட்டைக் கடித்துக் கொண்டு அவள் தலைகுனிந்து நிற்கவும் அவன் தொடர்ந்தான்.

''எதையும் இரண்டு விதமாய்ப் பார்க்கலாம் பானு. எதற்கும் இரண்டு பெயர் சூட்டலாம். உளவு என்றும் வெறுக்கலாம். அதையே பாதுகாவல் என்ற பெருமையும் படலாம். அதுபோலவே, காதல் என்றும் போற்றலாம். அதையே காமம் என்று கழித்தும் விடலாம். ஆனால் என்னைப் பொறுத்தவரை உனக்கு நான் வைத்தது பாதுகாப்பே தவிர உளவல்ல. அன்று காரில் உன் அப்பாவின் பேச்சுக்காகக் குன்றினாயே, அந்த விநாடி முதல் உன் மீது நான் கொண்டிருப்பது காதலே தவிர காமம் அல்ல.''

அவள் 'காமம்' என்றதைக் குறிப்பிட்டு ஒரு செல்லக் குட்டு குட்டிய போதும் அவன் சொன்னதெல்லாம் இப்போது அவளுக்கு நல்லவிதமாகவே புரிந்தது.

இன்னமும் அவன் சொல்லாமல் விட்டதும் கூடப் புரிந்தது.

அவளுக்குக் காவலாக ராஜேந்திரனால் நியமிக்கப்பட்டிருந்த ஆள் அவள் ஆட்டோவில் ஏறிச் செல்லவும் பின் தொடர்ந்திருக்க வேண்டும்.

இடையில் திடுமென இருபுறமாகவும் இருவர் ஏறுவதையும், அவள் குதிக்க முயன்றதையும் கூடக் கண்டிருக்க வேண்டும்.

ராஜேந்திரன் போலீஸை நாடி, அவர்களைப் பின் தொடர்ந்து ஆட்டோ ரிக்ஷாவின் இருப்பிடத்தைக் கண்டுபிடித்து, சமயத்தில் அவளைக் காப்பாற்றியிருக்க வேண்டும்.

அவளுக்காக என்ன பாடுபடுகிறான்.

அவனுடைய உயிரைவிட முக்கியம் என்றானே, அதற்குப் பதில் தர அவளிடம் என்ன இருக்கிறது. அதே அளவு அன்பை இம்மி குறையாமல் கொடுப்பது தவிர?

விழிகள் மலர. அவள் அவனை ஏறிடுகையில், ரகசியச் சிரிப்பில் அவனது இமையோரங்கள் சுருங்கின. ''ஆக, ஒருவழியாய் சூரியனும் சந்திரனும் சேர்ந்தே உதயமாகி விட்டார்கள் போலத் தெரிகிறதே?'' என்று கிண்டலாகக் கூறி நகைத்தான் அவன்.

சிறு வெட்கத்தில் அவள் முகம் அழகாகச் சிவக்க, ''ஆகா! இங்கேகூட பானுவும் மதியும் உதயம், பானு'' என்று இயம்பி, மனைவியின் சிவந்த இரு கன்னங்களையும் ஆசையுடன் முத்தமிட்டான் ராஜேந்திரன்.